ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 5 14 – 20 ஒக்டோபர் 1999 முழக்கம்: 248

CAR CHECK
Mot & Repair Center
உங்களுடைய சகல திருத்த
வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
Pub.

# பிரதமராக மீண்டும் வாஜ்பாய்


## பெரும்பான்மையுடன் புதிய அரசு பதவியேற்கிறது

(12.10.99)

இந்தியாவின் அடுத்த பிரதமராக மீண்டும் வாஜ்பாயே தெரிவு செய்யப்பட்டுள்ளார். நடந்து முடிந்த் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பா.ஜ. கூட்டணி ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை பெற்றதையடுத்து, நாளை 3வது தடவையாக வாஜ்பாய் 13வது பிரதமராகப் பதவியேற்கிறார்.

பா.ஜ.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாஜ்பாயை பாராளுமன்றத்திற்கான தலைவராக தேர்ந்தெடுத்து அதனை ஜனாதிபதிக்கு அறிவிக்கவேண்டும். அதன்பிரகாரம் நேற்று கூடிய பா.ஜ.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாஜ்பாயையே பிரதம்ராக்குவதாக முடிவு செய்தனர். இதனை அடுத்து உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி வாஜ்பாயை பிரதமராக்குவதாக முன்மொழிந்ததை, கட்சியின் பொருளாளர் வழிமொழிந்தார். இவர்களால் தெரிவி செய்யப்பட்டதன் பின்னர் வாஜ்பாயே அடுத்த பிரதமராகும் தகுதியுடையவர் என

(☞ 2ம் பக்கம்)



# 2000ம் ஆண்டில் போரை நடாத்துவது எப்படி?

## – சிறீலங்கா இராணுவ உயரதிகாரிகள் ஆய்வு

(11.10.99)

அடுத்த வருடத்தில் விடுதலைப் புலிகளின் போரிடும் திறமை அதிகளவான தொழில் நுட்பத்துடன் வளர்ச்சியடையும் என்பதால் 2000-ம் ஆண்டில் போரினை எவ்வாறு நடாத்திச் செல்வது என்பது பற்றி சிறீலங்காவின் உயர் இராணுவ அதிகாரிகள் முழுநிலையான ஆய்வு ஒன்றினை தற்போது அவசரமாக செய்து வருகின்றனர். இராணுவ தளவாடங்களின் மற்றும் ஆட்பலம் ஆகியவற்றின் விபரங்களை திரட்டிவரும் இவ் அதிகாரிகள் 3ம் ஈழப்போரில் இராணுவத்தினர் பெற்ற வெற்றி தோல்விகள் பற்றியதான அறிக்கைகளினையும் திரட்டி வருகின்றனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளினால் பரந்தன் படைத் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட டாங்கி எதிர்ப்பு ஏவுகணைத்

(☞ 2ம் பக்கம்)

# லெப்.கேணல் நிரோஷன் உட்பட 15 போராளிகள் வீரச்சாவு

(10.10.99)

மன்னார் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் எதிர்பாராமல் ஏற்பட்ட மோதல் ஒன்றில் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிச் சேர்ந்த லெப். கேணல் நிரோஷன் உட்பட 15 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர். கடந்த வியாழன் அதிகாலை 1.30 மணியளவில் மன்னாருக்கும் கச்சதீவிற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் வைத்து இம் மோதல் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது தமது இரு டோராக்கள் சேதமடைந்ததாகவும் படையினர் எவரும் காயமடையவில்லை எனவும் சிறீலங்கா இராணுவதரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன. இம் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்.கேணல் நிரோஷன் உட்பட 15 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டதாக புலிகளின்குரல் வானொலி அறிவித்து அவர்களது பெயர்களையும் வன்னியில் வெளியிட்டுள்ளது.

# கதிர்காமர் ஒரு முட்டாள்

## அவரை பதவி இறக்கவேண்டும்

### – அநுரா

(11.10.99)

தற்போதைய சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சாரான லக்ஸ்மன் கதிர்காமரை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக பிரச்சினைகளை முழுமையாக விளங்கியிருக்கும், வெளிவிவகாரக் கொள்கையில் அறிவிருக்கும் ஒருவரை அப்பதவிக்கு அமர்த்த வேண்டும் என ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்திருக்கின்றார். அத்துடன் இலங்கையின் இனப்பிரச்சனையில் ஐ.நா.வின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தினை தேவையற்றது என குறிப்பிடும் கதிர்காமர் ஒரு முட்டாள் எனவும் அவரை பதவியில் இருந்து வெளியேற்றவேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(☞ 2ம் பக்கம்)

# ஐந்து வருடப் போரில் 12,000ற்கும் மேற்பட்ட படையினர் பலி – ஐ.தே.க

(11.10.99)

இலங்கையில் நடைபெற்று வரும் போரில் கடந்த ஐந்து ஆண்டுகாலப் போரிலேயே சிறீலங்கா படைகள் பெரும் இழப்பை சந்தித்துள்ளன என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் குறுகிய மனப்பாங்கு காரணமாகவும், திட்டமிடப்படாத போரினாலும் கடந்த ஐந்து வருடங்களுக்குள் 12,000ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் ஏழ்மை நிலையில் இருந்து தமது குடும்ப கஷ்ட நிலையை போக்குவதற்காக படையில் சேர்ந்தவர்களே என பிரதான சிறீலங்கா அரசின் எதிர் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோரள நேற்று நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

போரினால் இன்று நாடு பெரும் பின்னடைவு கண்டுள்

(☞ 2ம் பக்கம்)

# மட்டக்களப்பில் பிரெஞ்சு தூதுவர்

(11.10.99)

பிரான்ஸ் நாட்டின் தூதுவர் செல்வி எலிசபெத் டஹாம் மட்டக்களப்பிற்கு மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். நேற்று மட்டக்களப்பு நகருக்குச் சென்ற பிரான்ஸ் தூதுவர், நாளையும் மட்டக்களப்பில் தங்கியிருப்பார். மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித உரிமைகள் நிலவரம், மாவட்ட மக்கள்

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
பல்பொருள் அங்காடி
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
**Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**

டென்மார்க்:
T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: மக்கள் கடை
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
`EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140
Australia
E-Mail:tccsydney@one.net.au

# பொலிஸ் சோதனைசாவடி மீது தாக்குதல்

*(10.10.99)*

மட்டக்களப்பு லொயிட்ஸ் வீதியில் உள்ள பொலிஸ் சோதனைசாவடி மீது கடந்த வியாழன் காலை 10 மணியளவில் விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர். இதன்போது பொலிசார் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் உறுதிப்படுத்தப் படாத போதிலும், தமது காவலரண்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நாடாத்திவிட்டு புலிகள் அங்கிருந்து த்ப்பிச் சென்றுவிட்டனர். தமது தரப்பில் எந்தவித இழப்புக்களும் எற்படவில்லை என சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர். எனினும் அப் பகுதி முழுவதையும் உடனடியாக இராணுவத்தினருடன் சேர்ந்து சுற்றிவளைத்த பொலிசார் வீதிப்போக்குவரத்துக்களை தடைசெய்து தேடுதல்களை நடாத்தினர்.

இதேவேளை புல்மோட்டைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 2000ம் ஆண்டில்...

தாக்குதலில் படையினருக்கு கிடைத்த ஏவுகணைச் சிதறல்கள் தற்பொழுது பிரித்தானியாவில் ஆய்வு செய்யப்படுவதாகவும். இவ் ஏனகணைகள் பல்கேரியாவில் தயாரிக்கப்பட்டவை எனவும் உக்ரெயினூடாக விடுதலைப் புலிகளின் கைகளுக்கு இவை கிடைத்திருக்கலாம் எனவும் இராணுவத் தரப்பினர் ஊகங்களை வெளியிட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பிரதமராக...

ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.

அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதையடுத்து பெரும்பான்மை பலத்துடன் நாளை வாஜ்பாயின் பதிவியேற்கும் வைபவம் இடம்பெற உள்ளது. இதன்போது கூட்டணி அமைச்சர்களும் பதவியேற்க உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. எனினும் இப் பதவியேற்பில் தி.மு.கவை சேர்ந்த அமைச்சர்கள் பதவியேற்பார்களா என்பதை இதுவரை தி.மு.கவின் தலைமை முடிவு செய்யவில்லை எனவும் இதுபற்றி டெல்லியில் கலைஞர் கருணாநிதியின் தலைமையில் கூடி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐந்துவருடப்...

ளது. அதேவேளை படையில் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நிரந்தரமாக ஊனமடைந்துள்ளனர் இதற்கெல்லாம் இன்றைய அரசாங்கமே காரணமாகும். அரசாங்கம் ஒழுங்காகத் திட்டமிடாது நடத்தி வரும் போரினாலும், குறுகிய அரசியல் இலாபத்தினாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடத்திற்குள் இராணுவத்திற்கு பலத்த பின்னிடைவு ஏற்பட்டுள்ளதுடன், விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்டு வரும் இப்போர் பெரும் தோல்வியையே கண்டுவருகின்றது என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கதிர்காமர்...

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில வார இதழொன்றிற்கு பேட்டியளிக்கும் போதே அநுரா இதனை தெரிவித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் அவசியம் பற்றி குறிப்பிட்ட அநுரா இந்த விடயத்தில் விடுதலைப்புலிகள் முக்கியமான ஒரு தரப்பெனவும், தமிழ் மக்களை பிரதிநிதிப்படுத்துவதாக பாராளுமன்றத்தில் அமர்ந்திருக்கும் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் கோமாளிகள் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மட்டக்களப்பில்...

தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரான்ஸ் வழங்கும் உதவிகள் மக்களை சென்றடைகின்றதா என்பது பற்றியும் நேரடியாக ஆராய்வதற்காகவே அவர் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


அங்கு 3 நாட்கள் தங்கியிருந்து மட்டக்களப்பின் பல்வேறு சமூக, சமய, மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சிவில் மற்றும் சிறீலங்கா இராணுவ அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சகோதரரின் விளக்கம்

ஈழமுரசு 24—30 செப்டெம்பர் 99 இதழில் வெளிவந்த ஜேர்மன் சிறையில் தற்கொலை செய்துகொண்ட அனலைதீவைச் சேர்ந்த ஜெகன் மோகன் சபாரெத்தினம் என்பவரின் செய்தி தொடர்பாக அவரின் சகோதரர் தேவா கீழ்க்கண்ட தகவலை அறிவித்துள்ளார்.

'என் சகோதரர் 1500 மார்க் அபராதத்தொகை செலுத்தத் தவறியதனால் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது தொடர்பாக நாடு கடத்தலுக்காகவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதே சரியானதாகும்.

# 13ம் ஆண்டு நினைவாக



## லெப்டினன் கேணல் விக்டர்

**மருசலீன் பியூஸ்லஸ்**

*(முன்னாள் மன்னார் மாவட்டத்தளபதி)*

**தமிழீழ மண்ணில்: 12.10.1986**

தமிழீழ விடுதலைப் போரில், வீரத்துடன்
போராடி, களத்தில் காவியமாகி
விடுதலைக்கே வித்தாகி, மக்களின் மனத்தில்
நீங்காத நினைவுடன் வாழும் விக்டர்—நீ
எம்மைவிட்டுப் பிரிந்து 13 ஆண்டுகள்
சென்றதோ!

*என்றென்றும் உன் நினைவுடன் வாழும்-*
*உன் உறவுகள்*

# மரண அறிவித்தல்

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பேர்லினில் வசித்தவரும் ஆகிய திரு.செல்லப்பா வைரவநாதன் ஜேர்மனியில் 1.10.99 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா ரத்தினம் தம்பதிகளின் அருமை மகனாரும், திரு.குழந்தைவேலு-சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மருமகனும், சுகிர்தராணியின் அன்புக் கணவரும், கேமலதா, அஜந்தா, சுதர்ஷினி, எல்லாளன், சுபாசினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிறிதரன் (பாபு) சுவிஸ், ஜெயலிங்கம் (பேர்லின்), பாஸ்கரன் (ரவி) சுவிஸ் ஆகியோரின் அருமை மாமனாரும், ஆராதனா, அஸ்வின், ஆகியோரின் அருமைப் பாட்டனாரும், காலம்சென்றவர்களான பத்மநாதன், சண்முகநாதன் குணவதி, திலகவதி இவர்களின் சகோதரனும், மற்றும் சிவநாதன் (ஜேர்மனி), புனிதவதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சற்குணம் (கனடா). தவமணி, பூமணி, சுந்தரராஜன் (பிரான்ஸ்), சிவகணநாதன் (சுவிஸ்), விமலாதேவி பாலரட்ணம், மரகதமணி, வீரசுப்பிரமணியம் ஆகியோரின் அருமை மைத்துனரும், காலம்சென்றவர்களான கனகரட்ணம், சிவானந்தராஜாவின் அன்புச் சகலனும், மகேஸ்வரி, உமாதேவியின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பேர்லினில் நடைபெறும்.

**இடம்: Krematorium-Ruhleben-am hnn**
**13597 Berlin.**

**காலம்: 13.10.99 புதன்கிழமை காலை 9.30 முதல் 11.30 மணிவரை நடைபெறும்.**

*தகவல்: திருமதி.வைரவநாதன் குடும்பத்தினர்*
*030/6160216*

Pub.

ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

(ADV)

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

## வடதமிழீழச் செய்திகள்

# பட்டமளிப்புடன் ஆரம்பமான யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா

(10.10.99)

யாழ். பல்கலைக்கழகத்தின் 25ம் ஆண்டு விழா கடந்த 6ம் திகதி அதன் 18வது பட்டமளிப்பு விழாவுடன் ஆரம்பமாகியுள்ளது. மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இப் பட்டமளிப்பு விழாவில் 754 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்னதாக காலையில் ஆரம்பமான பட்டமளிப்பு விழாவிற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டம்பெறும் மாணவர்கள் ஆகியோர் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் இருந்து மங்கல இசையுடன் கைலாசபதி அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். முதலாவது அமர்வில் நடைபெற்ற பட்டமளிப்பில் முன்னாள் இந்திய மத்திய அமைச்சரும் கல்விமானுமாகிய சி.சுப்பிரமணித்திற்கு இலக்கிய கலாநிதி பட்டமும், பேராசிரியர் மயில்வாகனம் சிவசூரிக்கு விஞ்ஞான கலாநிதி பட்டமும், காலஞ்சென்ற திருமதி இரத்தினா நவரத்தினத்திற்கு மரணத்தின் பின்னான இலக்கிய கலாநிதி பட்டமும், கவிஞர் முருகையனுக்கு கலாநிதி பட்டமும், சத்தியசீலனுக்கு கலாநிதி பட்டமும், சகுந்தலாதேவி அம்பிகைபாலன், கந்தையா கனகரட்ணம் ஆகியோருக்கு முது மெய்யியல் மானி விருதுகளும் வழங்கப்பட்டன. அதனையடுத்து மாணவர்களுக்கான பட்டமளிப்பு இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வில் பேராசிரியர் அப்பாப்பிள்ளைக்கு விஞ்ஞான கலாநிதி, வீரமணி ஐயருக்கு முதுகலைமாணி பட்டங்களும் வழங்கப்பட்டன. மூன்றாவது அமர்வில், பேராயர் தியோகுப்பிள்ளைக்கு கலாநிதி, காலஞ்சென்ற இரத்தினகுமாருக்கு கலைமாணி பட்டமும் வழங்கப்பட்டதுடன் மேலும் பத்துப்பேருக்கு முதுமெய்யில் மாணி பட்டமும் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் இம்மாதம் 20ம் திகதிவரை தொடர்ந்தும் நடைபெற உள்ளன.

# வன்னி - யாழில் முகாங்களுக்கு அருகில் வசிக்க வேண்டாம்! மீண்டும் சுவரொட்டிகள்

(10.10.99)

யாழ். குடாநாட்டில் இருக்கும் சிறீலங்கா படைமுகாங்களுக்கு அருகே வசிப்போரை அவ்விடங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தும் சுவரொட்டிகள் பல வலிகாமம் வடக்கில் ஒட்டப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் என்ற அடிக்குறிப்புடன் காணப்படும் இச் சுவரொட்டிகள் சுன்னாகம் பொதுச்சந்தைப் பகுதியில் அதிகளவிலாகக் காணப்பட்டுள்ளன. தாம் எவ்வேளையிலும் இராணுவ முகாங்கள் மீது பீரங்கித் தாக்குதல்களை நடாத்தும் வாய்ப்பு இருப்பதால் பொதுமக்கள் தமது பாதுகாப்பு கருதி இராணுவ முகாங்கள் அதன் சுற்றாடல்களில் இருந்து விலகியிருக்குமாறு இச் சுவரொட்டிகளில் கோரப்பட்டுள்ளது.

இதுபோன்ற சுவரொட்டிகள் யாழ்.குடாநாட்டில் ஏற்கனவே சில மாதங்களின் முன்னர் ஒட்டப்பட்டிருந்தது. தற்போது வன்னியிலும் சிறீலங்கா இராணுவத்தினரால் புதிதாக கைப்பற்றப்பட்டுள்ள பல பகுதிகளிலும் இவ்வாறான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சாவகச்சேரி பிரதேசசபை செயலர் தாக்கப்பட்டு மரணம்

(10.10.99)

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளரான புளொட் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கடந்த வாரம் இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் மரணமாகியுள்ளார். சாவகச்சேரியில் உள்ள இவரது வீட்டிற்கு வந்த இனந்தெரியாத மூவர் இவரை தடிகளாலும், பொல்லுகளினாலும் கடுமையாகத் தாக்கியதாகவும் படுகாயமடைந்த இவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அங்கு மரணமடைந்துள்ளார். சாவகச்சேரி பிரதேசசபை புளொட் அமைப்பின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# கடும் மழையினால் வன்னி வீதிகள் சேதம் உணவு விநியோகமும் நிறுத்தம்

(10.10.99)

வன்னியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் வன்னிப் பகுதிக்கான உணவு விநியோகமும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. கடந்த புதனன்று வவுனியாவில் இருந்து புறப்பட்ட உணவு வண்டிகள் சில கனகராயன்குளப் பகுதியில் புதையுண்டதனால் ஏனைய உணவு வண்டிகள் மீண்டும் வவுனியாவிற்கு திரும்பிவிட்டன.

ஏற்கனவே கடுமையான உணவு பற்றாக்குறையினால் பாதிப்படைந்துள்ள வன்னி மக்களுக்கு இப் புதிய நிலையினால் மேலும் இன்னல் எழுந்துள்ளது. தற்பொழுது வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரமே வன்னிக்கான உணவு வண்டிக்ள் செல்வது வழக்கமானாலும், தற்போது அவையும் தடைப்பட்டுள்ளன. அதேவேளை கடும்மழை காரணமாக வன்னியில் தற்காலிக வதிவிடங்களில் தங்கியிருக்கும் மக்கள் பெரும் அவலத்தினை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

# வன்னியில் பல்லாயிரக்கணக்கானோர் உணவு உறையுள் இன்றி அவலம்

## கடும் மழையின் எதிரொலி

(10.10.99)

வன்னியில் தற்பொழுது பெருமழை பெய்து வருவதால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு உறையுள் இன்றி அவலப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன. மர நிழல்களிலும், ஓலைக் கொட்டில்களிலும் வசித்து வந்த இம் மக்களை பெருமழை பெரும் அவலத்திற்கு தள்ளியுள்ளது. மன்னார் மாவட்டத்தில் தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, இலுப்பக்கடவை ஆகிய இடங்களில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தற்பொழுது அவலத்தோடு வாழ்ந்துவருகின்றனர்.

அரிசி, மா, குழந்தைகளுக்கான பாலுணவுப் பொருட்கள் ஆகியவற்றிற்கான தட்டுப்பாடு இங்கு நிலவுவதால் பொருட்களை பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். அவலநிலையில் உள்ள இம் மக்களுக்கு புனர்வாழ்வு கழகத்தினர் ஓரளவான சேவையாற்றி வருகின்றனர். சிறீலங்கா அரச நிர்வாகம் வழமைபோலவே இப் பிரச்சினையிலும் அசமந்த தனமான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மணியடித்த பூசகருக்கு விசாரணை

கோவிலில் பூஜை செய்வதற்கென மணியை அடித்த பூசகர் ஒருவரைச் சிறீலங்காப் படையினர் கைது செய்து விசாரித்துள்ளனர். இச் சம்பவம் சுதுமலை அம்மன்கோவிலடியில் நடைபெற்றுள்ளது. அம்மன் கோவிலிற்கு அருகாமையில் உள்ள முருகன் கோவிலுக்கு வழமையாகப் பூசை செய்யும் பூசகர் மாலை வேளைப் பூசைக்காக காண்டாமணியை அடித்துள்ளார். அந்த நேரம் சிறீலங்கா இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படைப்பிரிவு கோவிலுக்கருகாமையில் நிலைகொண்டிருந்தது. ஐயர் மணியை அடித்து விடுதலைப்புலிகளுக்கு சைகை தெரிவிக்கின்றார் என நினைத்த படையினர் உடனடியாக கோவிலுக்குள் நுழைந்து பூசகரைக் கைதுசெய்து கடுமையான விசாரணைக்கு உட்படுத்தினர். நிலைமையை விளங்கப்படுத்திப் படையினரிடமிருந்து மீண்டு வருவதற்குள் பூசகருக்குப் போதுமென்றாகிவிட்டதாம்.

# யாழ்ப்பாணத்தில் சிப்பாய் சூட்டுக்கொலை

(10.10.99)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் மிதிவண்டியில் சென்ற சிறீலங்கா சிப்பாய் ஒருவர் விடுதலைப்புலிகளின் கைத்துப்பாக்கி அணியினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கடந்த 7ம் திகதி மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாதாரண உடையில் இச் சிப்பாய் சென்றபோதும் அவரைச் சரியாக இனங்கண்ட விடுதலைப்புலிகள் அவர் மீது தாக்குதலை நடாத்தியுள்ளனர். சிப்பாய் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இது ஒருபுறமிருக்க காரைநகர் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உயரமான காவலரண் ஒன்று சரிந்து விழுந்ததில் அதனுள் கடமையில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் மரணமாகியுள்ளார் என இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

# மூன்று ஆண்டுகளாக படைமுகாமில் கையெழுத்திடும் பெண்கள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள சிறீலங்காப் படைமுகாமில் ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கென கடந்த மூன்று வருடங்களாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழை இளம் பெண்கள் கையெழுத்திடும் அவலநிலை குறித்து யாழ். மனித உரிமையாணைக்குழுவிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக படைமுகாமிற்குத் தொடர்ந்து செல்லவேண்டி வருவதால் எமது அன்றாட வாழ்வு மிகவும் அவலம் நிறைந்ததாகவும், பீதி நிறைந்ததாகவும் இருப்பதாகவும் இப் பெண்கள் தமது முறையீட்டில் தெரிவித்துள்ளனர்.

ஒருதாய் அவரின் சகோதரிகள் ஆகியோருக்கே சிறீலங்காப் படையினர் தொடர்ந்து முகாமில் கையெழுத்திட்டு வருமாறு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

Pub

# ஆட்பலம் இல்லையென்றால் கட்டாய இராணுவச் சட்டமே தேவை

## தானொரு தமிழனென்னும் இலங்கையின் முதலாவது இராணுவத் தளபதி

(10.10.99)

சிறீலங்காவில் இராணுவம் அமைக்கப்பட்டு 50வது வருடம் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் முதலாவது இராணுவத்தளபதி அன்ரன் முத்துக்குமாரு, அவுஸ்திரேலியாவில் இருந்து கொழும்பு வந்திருந்தார். இராணுவத் தலைமையகத்தில் வைத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த அன்ரன் முத்துக்குமாரு சிறீலங்காவிற்கு விசுவாசமான சில கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்திற்கு ஆட்பலம் காணாது எனின் அரசு கட்டாய இராணுவசேவை சட்டத்தினை நடைமுறைப்படுத்தலாம். 1984ம் ஆண்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தினை இச் சட்டம் பெற்றுள்ளபோதும், இது வரை எந்தவொரு அரசும் அதனை நடைமுறைப்படுத்தாததால் இனி யாவது இந்த அரசு அதனை நடைமுறைப்படுத்தலாம். பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கைக்கு ஒரு இராணுவத்தை அமைப்பதற்கென பிரித்தானியாவில் இருந்து இராணுவ ஆலோசகராக ஒருவர் வந்தார். அவர் அன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமைபுரிந்த கந்தையா வைத்தியநாதனுடன் கலந்தாலோசித்த பின்னர் இராணுவச் சட்டத்தை தயாரிக்க திட்டமிட்டார். இராணுவச் சட்டம் இயற்றும் பொறுப்பு என்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டது.

1955-ம் ஆண்டு இராணுவத் தளபதியாக நான் பொறுப்பேற்றவேளை முழு இராணுவத்தின் பலமும் ஆக 250 பேராகத்தான் இருந்தது. நானொரு தமிழனாக இருந்தாலும் (அவர் கூறுகிறார்) எனக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டது. இராணுவத்தை பொறுத்தவரை கடமைதான் முக்கியம். இனம், மதம் ஆகியவை இரண்டாம் பட்சம் தான் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# தேர்தலை வெற்றிகொள்ளவே ரணகோஷா 5 – ரணில்

(10.10.99)

தேர்தலை வெற்றி கொள்வதற்காகவே ரணகோஷா-5 இராணுவ நடவடிக்கையை அரசு ஆரம்பித்திருப்பதாக சிறீலங்காவின் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 1995ம் ஆண்டு, சூரியக்கதிர் நடவடிக்கையினை ஆரம்பித்த அரசு பல வருடங்களாகியும் புலிகளை ஒடுக்க முடியாது தவித்து வருகின்றது. இன்று வரை படையினர்தான் பெரும் இழப்புக்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனரே தவிர அவர்களால் வெற்றியை காண முடியவில்லை. 1996ல் இராணுவம் யாழ். குடாநாட்டை கைப்பற்றிப் பின்னர் யாழுக்கான தரைமார்க்கப் பாதை திறக்கப்படும் என அரசு உறுதியளித்தாலும் விடுதலைப் புலிகள் அரசின் உறுதியை தமது தாக்குதல்கள் மூலம் குலைத்து விட்டனர்.

விடுதலைப்புலிகளின் பலம் அரசு குறிப்பிடுவதைப்போல குறைவடையவில்லை. மாறாக அவர்களின் பலம் மேலும் உறுதியடைந்திருக்கின்றது. அரசின் அண்மைய ரணகோஷா-5 இராணுவ நடவடிக்கை இராணுவ நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்படுவதற்காக ஆரம்பிக்கப்படவில்லை. அது தேர்தலை ஆரம்பிப்பதற்காக அரசியல் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த குறுகிய நோக்கத்தின் விளைவுதான் அநுராதபுர வைத்தியசாலை படையினரால் நிரம்பிவழிகிறது. அரச ஊடகங்கள் இந்த இராணுவ நடவடிக்கையை வைத்துக் கொண்டு மக்களை தவறான வழிக்கு இட்டுச் சென்றுவருகிறன. முல்லைத்தீவிலும் புதுக்குடியிருப்பிலும் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் அப்பாவிகள் கொல்லப்பட்டதால் நாம் கவலையடைக்கின்றோம் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

# தமிழ் வர்த்தகர்களை மிரட்டி பணம் பறிக்க முயலும் கும்பல்கள்

(10.10.99)

கொழும்பு நகரில் வர்த்தக நிறுவனங்களை வைத்திருக்கும் தமிழர்களை மிரட்டி அவர்களிடம் இருந்து பெரும் தொகையான பணங்களை பறிப்பதற்கு பல கும்பல்கள் முயன்றுவருகின்றன. சிங்களவர்கள் முஸ்லீம்கள் ஆகியோருடன் இணைந்து இயங்கும் இக் கும்பல்களுக்கு சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய்களும் உதவி செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மேற்படி கும்பல்களில் ஒன்று வர்த்தகர் ஒருவரை மிரட்டி அவரிடம் இருந்து 30 இலட்சம் ரூபாவை பறிப்பதற்கு முயற்சி எடுத்துள்ளது. இக் கும்பல்கள் விடுதலைப் புலிகளின் சின்னங்களைப் பயன்படுத்தியே இம் மிரட்டல்களில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் சின்னங்களைக் கொண்டு போலியான கடிதத் தலைப்புக்களைத் தயாரித்து அவற்றிலே பணத்தினைக்கோரி மிரட்டல் கடிதங்களை எழுதி அனுப்பி, பணத்தை பறிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறான முயற்சி ஒன்று கடந்தவாரம் முறியடிக்கப்பட்டுள்ளது. இக் கும்பலில் இடம்பெற்ற ஒரு சிலரும் சிறீலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சிறீலங்காவின் 2000 ஆண்டு பாதுகாப்பு செலவு 5,243 கோடி

(10.10.99)

சிறீலங்காவின் அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்னறிவிப்பு பிரேரணை கடந்த 5ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வரவு செலவுத் திட்ட முன்னறிவிப்பில் நாட்டின் பாதுகாப்பு செலவிற்கென 5,243 கோடி ரூபாவினை ஒதுக்கியுள்ளது. ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 114,355 மில்லியன்களாக உள்ளது. இந்த துண்டுவிழும் தொகைச் செலவீனத்தை சமாளிப்பதற்காக வெளிநாட்டு கடன்களை திரட்டவேண்டும் என வரவு செலவு திட்ட முன்னறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செலவிற்கு இவ்வளவு பெருந்தொகைப்பணத்தை ஒதுக்கியுள்ளமை தமிழ் மக்களின் மீதான போரினை மேலும் தீவிரப்படுத்தவே சந்திரிக்கா அரசு முயல்வதன் அறிகுறியென கொழும்பில் உள்ள தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.


அம்பாள் வாகன சேவை

AMBAL TRANSPORT

பொருட்களை ஏற்றி இறக்கவும், மங்கள வைபவங்கள், ஸ்தல யாத்திரைகள், சுற்றுலாக்கள், ஐரோப்பிய நாடுகளுக்கான 9 இருக்கைகள் கொண்ட வாகனசேவைகளுக்கு

ஜெயம்:



26, Rue Perdonnet, 75010 Paris.
Mo: La Chapelle
Tel: 06 09 58 55 48 / 06 10 38 44 92 / 06 13 31 32 35


# திருமலை நகரப்பகுதிகளில் காவலரண்கள் அதிகரிப்பு

(10.10.99)

திருமலை நகரப்பகுதியில் விடுதலைப்புலிகள் எந்நேரமும் பாரிய தாக்குதலை தொடுக்கலாம் என்ற அச்சத்தில் சிறீலங்கா படையினர் நகர்ப்பகுதியில் புதிதாக பல காவலரண்களை அமைத்து வருவதுடன் ஏற்கனவே உள்ள காவலரண்களையும் பலப்படுத்தி வருகின்றனர். உப்புவெளி பொலிஸ் நிலையத்தின் சுற்றாடலில் மேலதிகமாக காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அக் காவலரண்களில் படையினரின் நடவடிக்கைளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நகரின் நுழைவாயிலான அநுராதபுரம் சந்திப் பகுதியில் உள்ள பொலிஸ் காவலரண் மீது அண்மையில் விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து இப் பாதுகாப்பு நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை வாகரை இராணுவ முகாமில் இருந்து படையினர் சுற்றாடல் கிராமங்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இத் தாக்குதலால் தட்டுமுனைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

# கொழும்பில் தொடரும் சுற்றிவளைப்புகள் 200ற்கும் அதிகமானோர் கைது

(10.10.99)

சிறீலங்கா இராணுவத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாக்களை முன்னிட்டு கொழும்பு நகரில் உள்ள கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படக் கூடும் என்ற அச்சத்தில் கொழும்பு நகரில் முப்படையினரும் பொலிசாரும் இணைந்து கடுமையான தேடுதல் வேட்டைகளை நடாத்திவருகின்றனர்.

இதுவரை நடாத்தப்பட்ட தேடுதல்களின்போது 200ற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை, ஜிந்துப்பிட்டி, கெய்சர்வீதி, செட்டியார்தெரு ஆகிய இடங்களிலேயே தீவிரமான தேடுதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

வீடுகள், விடுதிகள், மற்றும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்த தமிழர்களை மேலதிக விசாரணைக்கென கொண்டு சென்றுள்ளனர். இதேவேளை கொழும்பு நகரில் உள்ள கேந்திர நிலைகளில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளதுடன் கடற்பகுதியில் கடற்படையினரின் தீவிர ரோந்தும் நடாத்தப்பட்டு வருகின்றது.

# பன்னிரு வேங்கைகளின் நினைவெழுச்சியில் கிழக்கு உணர்வுமயம்

(10.10.99)

சிறீலங்கா— இந்திய கூட்டுச் சதியினால் தமிழீழக் கடற்பரப்பில் சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு கொழும்பிற்கு கொண்டு செல்லமுனைந்த வேளை பலாலிப் படைத்தளத்தில் சயனைட் அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்ட பன்னிரெண்டு வேங்கைகளினதும் 12வது நினைவெழுச்சி நிகழ்வுகள் கிழக்கின் பல பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

கொக்கட்டிச்சோலை, கரடியனாறு, மகிழவெட்டுவான், பன்குடாவெளி ஆகிய பகுதிகளில் நினைவெழுச்சி வைபவங்கள் இடம்பெற்றதுடன் ஆலயங்களில் விசேட பூசைகளும் இடம் பெற்றன. வேங்கைகளின் நினைவெழுச்சி குறித்து வர்ணச் சுவரொட்டிகள் விடுதலைப் புலிகளால் அப் பகுதியெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. நடைபெற்ற நினைவெழுச்சி வைபவங்களில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் உட்பட பெருமளவான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# கொழும்பில் மின்மாற்றி தகர்க்கப்பட்டது

(10.10.99)

கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள மின்மாற்றி ஒன்று கடந்த செவ்வாய் காலை 8.30 மணியளவில் குண்டு வெடிப்பில் முற்றாகச் சேதமடைந்தது. இக் குண்டு வெடிப்புக் காரணமாக அருகில் இருந்த கடைகள் இரண்டும் சேதமடைந்துள்ளதுடன் பொதுமகன் ஒருவரும் காயமடைந்ததாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

செவ்வாய் காலை பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்ததன் பின்னர் அப்பகுதி உடனடியாக பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது. இத்தேடுதலில் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்து முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இக்குண்டு எப்போது அப்பகுதியில் பொருத்தப்பட்டது. எவ்வாறு அப்பகுதியினுள் ஊடுருவப்பட்டது என்பது குறித்து சிறீலங்கா புலனாய்வுத்துறையினர் ஆராய்ந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கைது செய்யப்பட்ட யாழ். பெண்களை மலசலகூடங்களைச் சுத்திகரிக்குமாறு படையினர் பணிப்பு

(10.10.99)

சிறீலங்கா படையினரால் யாழ்ப்பாணத்தில் 1999ம் ஆண்டு ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐந்து இளம் பெண்கள் சிறீலங்கா படையினரால் மனித உரிமைகளை மீறும் வகையில் அவர்களது மலசல கூடங்களை சுத்தம் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். படையினரின் இந்நடவடிக்கை குறித்து கொழும்பிலுள்ள மனித உரிமைகளுக்கான இல்லம் உயர்நீதி மன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டோர் என்று குற்றம்சாட்டப்பட்டு சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட இந்த ஐவரும், விசாரணைகளுக்குப் பின்னர் அனுராதபுர நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அதன் பின் அவர்களை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைப்பதில் காலதாமதம் எற்பட்டதை அடுத்து அக் காலப்பகுதியில் இந்த ஐவரும் மலசலகூடங்களைச் சுத்திகரிக்குமாறு படையினரால் பணிக்கப்பட்டனர். சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இவர்கள் இவ்வாறு நடத்தப்பட்டமை இவர்களுடைய மனித உரிமைகளை மீறும் செயல் என மனித உரிமைகள் இல்லம் சுட்டிக் காட்டியுள்ளது.

## படையினரால் குடும்பஸ்தர் கடும் சித்திரவதை - சட்டவைத்திய அதிகாரி

(10.10.99)

சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் கடுமையான சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டிருப்பதாக சட்டவைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். அவரின் நடுவிரல் நகம் முற்றாக பிடுங்கிஎடுக்கப்பட்டிருப்பதாகவும் உடலெங்கும் அடிகாயங்களும் சிகரட் நெருப்பினால் சுட்ட வடுக்களும் காணப்படுவதாகவும் வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய மட்டக்களப்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி மட்டக்களப்பு மேல்நீதி மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஏறாவுர் சவுக்கடியைச் சேர்ந்த காளிதாஸ் செல்வம் (49) என்ற குடும்பத்தவரே கடந்த 05.03.1998 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் மட்டக்களப்பு நாசகார தடுப்பு பிரிவு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். விசாரணை என்ற பெயரில் படையினர் மேற்கொண்ட கடுமையான சித்திரவதையில் இவரது மேல்வாய் பற்கள் உடைக்கப்பட்டு விட்டதாகவும், மூக்கு, முகம், கை, கால் என அங்கங்கள் எங்கும் அடிக்காயங்கள் காணப்படுவதாகவும் இவர் எதிர்காலத்தில் சுகதேகியாக நடமாட முடியாது எனவும் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாகவும், உணவுப்பொருட்களை அவர்களுக்கு வழங்கியதாகவும் அத்துடன் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றி தெரிந்திருந்தும் படையினருக்கு தகவல் கொடுக்க தவறினார் என படையினரால் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இக் குற்றங்களை தான் புரிந்ததாக ஒப்புக்கொள்ள வைப்பதற்காகவே படையினர் தன்னை பலத்த சித்திரவதைக்கு உட்படுத்தி தன்னிடம் இருந்து கையொப்பம் வாங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மாத்தளையில் 'வீரவிதான' சுவரொட்டிகள்

(10.10.99)

மாத்தளையில் 'சிங்கள மக்களே எழுச்சி கொள்ளுங்கள்' என்ற தலைப்பிலான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. சிங்கள மக்களுக்கு இனவாத உணர்வைத் தூண்டும் வகையில் இந்த துண்டுப்பிரசுரத்தில் வாசகங்கள் காணப்படுகின்றன. இவற்றை சிங்கள வீரவிதான இயக்கத்தினரே ஒட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வீதியின் மதில்கள், கடைகள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் என்பனவற்றில் ஒட்டப்பட்டுள்ள இத் துண்டுப்பிரசுரங்களை மக்கள் கிழிக்கின்றார்களா என்பதை அப் பகுதி பொலிசார் கண்காணித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சுருவிலில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு

(10.10.99)

யாழ். சுருவில் பகுதியில் பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் மீளக்குடியேறிய மக்கள் கிணறு ஒன்றைத் துப்பரவு செய்து கொண்டிருந்தபோதே மனித எலும்புக் கூடு ஒன்றை கிணற்றுக்குள் இருந்து மீட்டெடுத்துள்ளனர்.

யாழ். குடாநாடு சிறீலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் இப்பகுதி படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்தது. மக்கள் குடியேறமுடியாமல் இருந்த இப்பகுதியில் மீண்டும் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு சென்ற மக்கள் தமது வீடுகளை, கிணறுகளை சுத்தம் செய்தபோதே இவ் எலும்புக்கூடு மீட்கப்பட்டது. இவ் எலும்புக்கூடு படையினரால் கைது செய்யப்பட்டு காணமல் போனவராக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கால் பகுதிகள் அற்று காணப்பட்ட இவ் எலும்புக்கூடு படையினரால் பலத்த சித்திரவதை மூலம் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து அங்கு குடியமர்ந்த மக்கள் பெரும் அச்சத்துடன் இருப்பதாகவும் செம்மணி போன்ற பகுதி இங்கும் இருக்கலாம் என தாம் நம்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?
கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

**Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.**

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina®தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

***இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!***




தற்போது மாபெரும் மலிவு விற்பனையில்

மேலதிக விபரங்களுக்கு:

**Intercare Handels GmbH**

Munster str 5, 59065 Hamm-Germany

Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349

Internet: http://www.intercare-naturina.com

நாம் தமிழும் கதைப்போம்
(பிற்பகல் 2 மணியிலிருந்து)



எமது ஸ்தாபனத்தின் தயாரிப்புக்களை உபயோகித்து பலன் பெற்றோர் கூறுவதைக்கேட்டு நீங்களும் பயன்பெறுங்கள்.

**சுவிற்சலாந்திலிருந்து: திரு. ராஜன்.**
*நான் இந்த Naturina® தயாரிப்புக்களைக் கடந்த 3 மாதங்களாகப் பாவித்து குறுகிய காலத்தில் எனது தலைமயிர் உதிர்வைக் குறைத்துக்கொண்டேன்.*

**டென்மார்க்கிலிருந்து: திருமதி துரைராஜா.**
*நான் Naturina® மாத்திரைகளைப் பயன்படுத்தி எனது தோல் பிரச்சினைகளையும் நக அழகையும் பேணிக்கொண்டுள்ளேன்.*

**இங்கிலாந்திலிருந்து: திருமதி ரேணுகாதேவி.**
*இந்த Naturina® தயாரிப்புக்களைப் பற்றி பத்திரிகையில் படித்தபோதும் அதன் பிரதி பலன்களை நான் முழுமையாக நம்பவில்லை. இருந்தும் இவற்றை பயன்படுத்தியதில் முழுப் பலனையும் அடைந்துள்ளேன்.*

## சிறீலங்கா இராணுவத்தின்

# 50 வருடப் பூர்த்தியும் தொடரும் தமிழின அழிப்பும்

சிறீலங்கா இராணுவத்தின் ஐம்பது வருடப் பூர்த்தி நிகழ்வுகள் கடந்தவாரம் ஆரம்பமாகின. தமிழ் மக்களுக்கு தாம் என்றென்றும் அன்னிய இராணுவம்தான் என்பதை இந்த நிகழ்வுகள் மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளது. நிகழ்வுகள் ஆரம்பமாகும் முன்னரே வகை தொகையின்றி தமிழ் மக்கள் சிறைக்கூண்டுகளுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். பாதுகாப்புப் காரணங்கள் என்ற வியாக்கியானத்தை இராணுவமும் பொலிசும் வழமை போல பல்லவியாகப் பாடினர். இந்தவேளை சிறீலங்கா இராணுவத்தின் வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமானது.

பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கை இராணுவம் 1949-ம் ஆண்டு ஒக்டோபர் 10-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இலங்கை இராணுவத்தில் இருந்த மொத்தத் துருப்பினரின் எண்ணிக்கையைச் சொன்னால் ஆச்சரியமுண்டாகும். ஆக 180 படையினரே மொத்த இராணுவத்திலும் இருந்தனர். அப்போது பிரிகேடியர் ஏகன்கத்தோலி என்பவர் இராணுவத் தளபதியாக இருந்தார். 1955-ம் ஆண்டே இலங்கை இராணுவத்திற்கு இலங்கையர் ஒருவர் தளபதியாக நியமிக்கப்பட்டார். அன்ரன் முத்துக்குமாரு என்பவரே அவர் ஆவார். 1959-ம் ஆண்டு வரை தளபதிப் பதவியில் இருந்த முத்துக்குமாருக்குப் பின்னர் சிங்களவர்கள் இன்றுவரை தளபதிகளாக இருந்து வருகின்றனர். ஆரம்பத்தில் ஆக 180 படையினரைக்கொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தில் இன்று ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் இருக்கிறார்கள். 94 நிரந்தரப் படைப்பிரிவுகளும், 54 விசேடப் படைப்பிரிவுகளும் இன்று சிறீலங்கா இராணுவத்திற்கு உள்ளது. படைப் பிரிவுகளில் வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றின் முழுநோக்கமும் தமிழினத்தை அழித்தொழிப்பதுதான். நவீன ஆயுத தளவாடங்களின் துணையுடன் இந்தத் தமிழின ஒழிப்பினை எவ்வளவிற்கு எவ்வளவு விரைவாக்க முடியுமோ அவ்வளவிற்கு அவ்வளவு விரைவாக முடிப்பதற்கு சிறீலங்கா இராணுவம் துடித்து நிற்கின்றது. இலங்கை இராணுவத்தின் முதலாவது தளபதியாக ஒரு பிரித்தானியர் இருந்தாலும் முதலாவது இலங்கையராக தளபதிப் பொறுப்பினை ஏற்றது அன்ரன் முத்துக்குமாரு என்னும் தமிழர்தான். ஐம்பது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு சிறீலங்கா இராணுவம் விடுத்த அழைப்பினை சிரமேற்கொண்ட இவர்தான் வதியும் அவுஸ்திரேலியா நாட்டிலிருந்து கொழும்பிற்குப் பறந்தோடிவந்தார்.

சர்வதேச ரீதியில் தனக்கு ஏற்பட்டிருக்கும் அவப் பேரினைத் துடைத்துக்கொள்வதற்காக முயலும் சிறீலங்கா இராணுவத்திற்கு அன்ரன் முத்துக்குமாரு என்ற 'தெமிழர்' துருப்புச் சீட்டாகக் கிடைத்துவிட்டதால் அவரைக் கொண்டே செய்தியாளர் மாநாடு ஒன்றினையும் சிறீலங்கா இராணுவம் ஒழுங்கு செய்திருந்தது. அச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அன்ரன் முத்துக்குமாரு என்ற 92 வயதான முதியவர் சிறீலங்கா இராணுவத்திற்குக் கதிர்காமர் பாணியிலான விசுவாசத்தினை வெளிப்படுத்தியிருந்தார். தானொரு தமிழன் என்பதையும் மறந்து இராணுவத்திற்குத் தற்பொழுது நிலவும் ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கே கட்டாய இராணுவச் சேவையை நடைமுறைப்படுத்துவது உசிதமானது என அன்னார் திருவாய்மலர்ந்தருளினார். அதுமட்டுமல்ல இராணுவத்திலிருந்து தப்பியோடுபவர்கள் ஒழுக்கமற்றவர்கள் எனவும் குறைப்பட்டுக்கொண்டார். ஒரு தமிழனின் வாயாலேயே இக் கருத்துக்கள் வெளிவந்தமைக்காக செய்தியாளர் மாநாட்டில் கூடவே இருந்த சிறீலங்காவின் தற்போதைய இராணுவத் தளபதி சிறீலால் வீரசூரிய, முன்னாள் இராணுவத் தளபதிகளான மேஜர் ஜெனரல் சிறீபால ஆட்றிக்கல, மேஜர் ஜெனரல் டெனிஸ் பெரேரா ஆகியோர் அர்த்த புஷ்டியுடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். இந்தச் செய்தியாளர் மாநாடு நடந்து கொண்டிருந்தவேளை ஒரு செய்தியாளர் செம்மணிப் புதைகுழிவிவகாரம் தொடர்பாக கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக் கொலைவழக்கின் எதிரியான கோப்ரல் ராஜபக்ஷ தெரிவித்த தகவல்கள் உண்மையானவைதானே எனத் தற்போதைய இராணுவத் தளபதியைப் பார்த்து வினவியபோது அதற்குப் பதிலளித்த வீரசூரிய ராஜபக்ஷ கூறியபடி நடந்திருக்கமாட்டாது எனத் தெரிவித்தமை சிறீலங்கா இராணுவத்தின் பேரினவாத மனோபாவத்தைக் காட்டியதுடன் உண்மைகளை மறைத்துப் பொய்களையே பரப்பிவிடும் அதன் இயல்பினையும் எடுத்துக் காட்டியது.



இராணுவப் பிரதாபங்கள்

இராணுவ மனோபாவம் இவ்வாறிருக்க ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத்திற் கலந்துகொண்டுவிட்டு சிறீலங்கா ஜனாதிபதி நாடுதிரும்பிய கையுடன் கொழும்பு அரசியலில் மீண்டும் சலசலப்புக்கள் எழுந்துள்ளன. கதிர்காமரின் சவடால்தனமாக பேச்சுக்களின் தாக்கம் ஒரு புறமிருக்க பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையேயான விரிசல்களும் தலைதூக்கியுள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சியில் ஒன்றான நவசமாஜக்கட்சி 1994-ம் ஆண்டுத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிக்கா மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரியுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பான உறுதிமொழியை உடனடியாக சந்திரிகா காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென அக்கட்சி தெரிவித்ததால் சந்திரிகாவிற்குச் சில சிக்கல்கள் தலைதூக்கியுள்ளன. ஏற்கனவே சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசுடன் சிக்கல்கள் எழுந்துள்ளதால் சமசமாஜக் கட்சியுடனான பிரச்சினை மேலும் சிக்கலை ஏற்படுத்துமெனவே பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்களுக்குத் தலையிடியினைத் தோற்றுவித்துள்ளது.

சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புடன் கல்வி அமைச்சர் ரிச்சேட் பத்திரனவிற்கு ஏற்பட்ட முறுகல்நிலை தற்பொழுது பொதுஜனமுன்னணியில் பரவலாக தலைதூக்கியுள்ளது. பாராளுமன்றத்திலேயே வெடித்த இந்த முறுகல்நிலை காரசாரமான வாக்குவாதத்திற்கு இட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. வாக்குவாதத்தின் ஒரு கட்டத்தில் அமைச்சர் ரிச்ஷேட் பத்திரன இன்றைய அரசு ஆட்சியில் இருப்பது முஸ்லீம் காங்கிரசின் ஆதரவினால்தான் என முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எண்ணியிருப்பின் அந்த எண்ணத்தை உடனடியாகக் கைவிட்டுவிடுங்கள் என அஷ்ரபினைப் பார்த்துத் தெரிவித்திருந்தார். அஷ்ரப்பும் அதற்குப் பதிலளிக்காமல் விடவில்லை. 1994-ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளியாகியபின்னர் தம்மால் அரசு அமைக்க முடியுமென சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறீ சேனாநாயக்கா அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடம் சென்றபோது முஸ்லீம் காங்கிரஸ் தலைவரிடமிருந்து ஆட்சியமைப்பதற்கான சம்மதக் கடிதமொன்றினை வாங்கி வருமாறு தெரிவித்திருந்ததை நீங்கள் மறந்துவிட்டீர்களா என பத்திரனவைப் பார்த்துக்கேட்க இரு அமைச்சர்களுக்கிடையேயுமே சூடான விவாதம் எழத் தலைப்பட்டது. உள்வீட்டுப் பிரச்சினை அரங்கேறுவதைக் காணச் சகிக்காத ஏனைய அமைச்சர்கள்

> **தானொரு தமிழன் என்பதையும் மறந்து இராணுவத்திற்குத் தற்பொழுது நிலவும் ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கே கட்டாய இராணுவச் சேவையை நடைமுறைப்படுத்துவது உசிதமானது என அன்னார் திருவாய்மலர்ந்தருளினார். அதுமட்டுமல்ல இராணுவத்திலிருந்து தப்பியோடுபவர்கள் ஒழுக்கமற்றவர்கள் எனவும் குறைப்பட்டுக்கொண்டார்.**

உடனடியாகவே இருவரினதும் விவாதத்தினையும் தணித்துவிட்டார்கள். ஆனால் தற்பொழுது சந்திரிகா நாடுதிரும்பியிருப்பதால் மீண்டும் அப்பிரச்சினை வெடிக்கக்கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது. அமைச்சர் பத்திரன தெரிவித்த கருத்துக்களை மீளப்பெற்று அறிக்கை விடுமாறு ஜனாதிபதியை அஷ்ரப் கோர கோரி இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து அஷ்ரப்பினை வெளியேற்றுவதற்கான வேளையை பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருக்கும் சில தலைகள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் பிறிதான செய்திகள் தெரிவிக்கின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணியின் குத்துவெட்டுக்கள் இவ்வாறிருக்க ஐக்கியதேசியக் கட்சியின் பக்கம் கொஞ்சம் பார்வையைத் திருப்புவது பொருத்தமானது.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள பங்குச் சந்தை முகாமையாளர்களது மாநாட்டில் எதிர்க் கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது வழமைபோலவே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தனது வார்த்தைகளை உதிர்த்துள்ளார்.

**பேம்பி**

நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்து வருவதால் விடுதலைப் புலிகளுடன்பேசி இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வினைக் கண்டு பொருளாதாரத்தினை வளம்படுத்தச் செய்வது அவசியம் என அவர் குறிப்பிட்டிருந்தார். ரணில் இவ்வாறான கருத்துக்களைச் சொல்வது இது முதற் தடவையல்ல. நீண்ட காலமாக அவர் பாடிவரும் பல்லவியும் இதுதான். ஆனால் இதயசுத்தியுடன் அவர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றாரா எனப் பார்த்தால் அங்குதான் ஆரோக்கியமின்மை புலப்படுகின்றது. ஒருபுறம் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிப் பேசிக்கொண்டு மறுபுறத்தே தமிழ் மக்களுக்கெதிரான விரோதப் போக்கினை வளர்த்தெடுப்பதுதான் ஐக்கியதேசியக் கட்சியின் வேலை. ரணில் விக்கிரமசிங்காவின் சகோதரருக்குச் சொந்தமாக TNL எனப்படும் தொலைக்காட்சி நிறுவனம் உண்டு. அத்தொலைக் காட்சியில் தற்பொழுது சோமதேரோ எனப்படும் பௌத்த பிக்கு தமிழருக்கெதிரான இனவாதக் கருத்துக்களை விதைத்துவருகின்றார். ஆரம்பத்தில் சிங்கள ஆணைக் குழுவின் சகல செயற்பாடுகளிலும் பங்கெடுத்துக்கொண்ட ஐக்கியதேசியக்கட்சி தற்பொழுது சோமதேரோவின் இனவாதப் பிரச்சாரத்திற்கு மறைமுகமாக ஆதரவளிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழருக்கெதிரான விரோதம் என்ற குதிரையில் ஐக்கியதேசியக் கட்சியாகட்டும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியாகட்டும், ஏனைய பேரினவாதக் கட்சிகளாகட்டும் மாறி மாறி சவாரி செய்த வண்ணம்தான் உள்ளன. ஆயினும் தமிழ் மக்களுக்கான தேசிய அரசு முனைப்பாக உருவாகும் இவ்வேளையில் இந்த சவாரி ஓட்டங்கள் எவ்வளவு வெற்றியளிக்கப்போகும் என்பதை இனி வரும்காலம் புலப்படுத்தாமலா போய்விடும்.

## கொழும்பில் நடந்த பகிரங்கக் கருத்தரங்கு:

# வட-கிழக்குத் தமிழினம் சுயநிர்ணய உரிமை கொண்ட இனமாகும்

அண்மையில் கொழும்பு வாழ் தமிழர் பணிக் குழுவினால் பகிரங்கக் கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக் கருத்தரங்கில் தெளிவான பண்பாடு மற்றும் நாகரிகத்துடன் வடகிழக்கில் பலநூற்றாண்டுகளாக வாழும் தமிழ் மக்கள் சுயநிர்யண உரிமையுள்ள ஒரு இனமாகும் என்ற உறுதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. இத் தீர்மானம் மட்டுமல்ல ஏனைய சில தீர்மானங்களும் இக் கருத்தரங்கின் முடிவில் எடுக்கப்பட்டன. இக் கருத்தரங்கின் நிகழ்வுகளின் சுருக்கம் வருமாறு:

'இந்த நாட்டில் சமாதானத்திற்கான யுத்தம்' என்ற பெயரில் இந்த யுத்தம் பல்லாண்டுகளாக தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டு வருகிறது. கபட நடவடிக்கையாக நடாத்தப்படும் இந்த யுத்தம் இந்நாட்டு வரலாற்றில் விபரிக்க முடியாத அளவுக்குத் தமிழ் மக்கள் மீது மரணம், அழிவு, சித்திரவதை, பாலியல் வல்லுறவு ஆகிய கொடூர சம்பவங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், எண்ணற்ற மனித புதை குழிகளையும் தோற்றுவித்துள்ளது. என இக் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'தமிழ் மக்கள் தம் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக நெடுங்காலமாக நடத்திய ஜனநாயக முறையான சாத்வீகப் போராட்டங்கள் மூலம் எதிர்ப்புகளைத் தெரிவித்தபோதெல்லாம் அதிகாரத்தில் இருந்தவர்களால் தூண்டிவிடப்பட்ட குண்டர்களினால் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அப்போதெல்லாம் அதிகாரத்தில் இருந்த பெரும்பான்மை அரசாங்கங்கள் அவற்றைக் கண்டும் காணாததுபோலவோ, குண்டர்களுக்கு முழுமையான ஆதரவு அளிப்பனவாகவோ காணப்பட்டன. எனவே பொதுமக்களாகிய உங்கள் சார்பில் இத்தீர்மானங்களைச் சமர்ப்பிக்கிறோம்.'

இவ்வாறு கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டு தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**தீர்மானங்கள்**

01. வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் எங்கு வாழ்பவராயினும் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலோ கட்டுப்பாடில்லா பகுதியிலோ வாழ்பவராயினும் அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளாகிய மருந்துவகைகள், உணவுப் பொருட்கள், கல்வி வசதிகள் ஆகியன கிடைப்பதனைத் தடைசெய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
2. இராணுவத் தேவைகளுக்குத் தேவையென வடகிழக்கு மாகாணத்தில் முக்கியமாக யாழ்.குடாநாட்டிலுள்ள பலாலிப் பகுதியில் காணிகளை கட்டாயமாக எடுப்பதனை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
3. இப்பொழுது நடைபெற்று வரும் போராட்டத்தில் பங்கு வகிக்கும் முக்கிய பங்காளிகளாகிய அரசாங்கத்தினர், விடுதலைப்புலிப் போராளிகள் ஆகியோருடன் ஐக்கிய தேசியக் கட்சியினரும் சேர்ந்த முத்திறத்தாரும் 'ஒரு மூன்றாம் தரப்பினர்' மத்தியஸ்தராயிருக்க, முன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதனை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
4. சர்வதேச சமுதாயம், முக்கியமாக ஐக்கிய நாடுகள் சபை, இலங்கைக்கு பல்வேறு உதவிகளை அளித்துவரும் மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா ஆகியன இலங்கை அரசாங்கத்தின் மீது மிக உயர்ந்த மட்டத்திலான அழுத்தத்தைக் கொண்டு வந்து 'சமாதானத்திற்காகிய யுத்தம்' என இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டு நடத்தும் கபட நடவடிக்கையை நிறுத்தச் செய்யுமாறு வேண்டுகிறோம்.
5. ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் உதவியளிக்கும் ஐரோப்பிய நாடுகள் 1999 பெப்ரவரி 25-ம் திகதி அமெரிக்க அரச திணைக்களம் வெளியிட்ட மனித உரிமைகள் பற்றிய அறிக்கையையும் 1999 ஜூன் மாதம் வெளிவந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையையும் கவனத்திற்கொண்டு இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் எவரும் தடைசெய்ய முடியாதவாறு தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் சித்திரவதை, அழிவு, கொலை மற்றும் கொடுமைகள் ஆகியவற்றைக் கண்டிப்பதற்காக ஒரு சர்வதேச மட்டத்திலான விவாதத்தை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களை கருத்திற்கொண்டு அரசாங்கம் உடனடியாக ஒரு மூன்றாம் தரப்பின் மத்திஸ்த்தத்தை ஏற்று விடுதலைப் புலி போர்ராளிகளுடன் முன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை நடத்த வேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்.

பல்லாண்டுகளாக நிலவி வந்துள்ள கருத்து வேற்றுமைகள் மற்றும் நம்பிக்கையீனம் காரணமாக அரசாங்கத்தினரும் தமிழ் விடுதலைப் போராளிகளும் நேரடியாகச் சந்தித்து ஒரு சமரசமான முடிவுக்கு வருவது கடினமாகையால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இன்றியமையாததாகும்.

பண்டாரநாயக்கா—செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி சேனாநாயக்கா—செல்வநாயகம் உடன்பாடு, அமிர்தலிங்கம்-ஸ்ரீமாவோ பேச்சுவார்த்தை, அண்மையில் பிரித்தானிய அமைச்சர் கலாநிதி லியாம் பொக்ஸ் மேற்கொண்ட முயற்சி ஆகியவற்றுக்கு ஏற்பட்ட கதியை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. தமிழ் இனம் நெடுங்காலமாக ஏமாற்றப்பட்டும் காட்டிக் கொடுக்கப்பட்டும் வந்துள்ளது. இப்பொழுது தமிழ் இனம் அழிக்கப்படுவதையும், அதன் தாயகம் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் ஒழிக்கப்படுவதையும் நாம் தெளிவாகக் காண்கின்றோம். எனவே தமிழினத்தின் உரிமைகள் நீதியாகவும் நியாயமாகவும் வழங்கப்படுதல் வேண்டும் என இப்பொதுச்சபை வற்புறுத்திக் கோருகிறது.





*Réseau*

WWA

*So easy to call,*
*So difficult to foget*




மீண்டும் அதிகரித்த நிமிடங்களுடன் உங்கள் சேவையில்!

Maghrab 80Mn

Afrique 50Mn

Asie 50Mn

Surcharge : 3F à chaque connexion.

KING Telecom
92, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)
Tél.: 01 44 62 93 96
Fax: 01 44 62 94 96

WWA
86, Rue de Bellville,
75020 Paris.
(M°: Pyrénées)

KING Telecom
33, Place de Général de Gaulle
60100 Creil.
(Place de la Gare)
Tél:03 44 55 41 59
Fax: 03 44 55 42 51

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுண்டு

அனைத்துத் தொடர்புகளுக்கும்: 01 43 15 17 17 - விற்பனையின் பின்னான சேவைகளுக்கு: 01 43 15 17 18

Pub.

# ராஜீவ் கொலைவழக்கு:

## மரண தண்டனை மறு ஆய்வு நிராகரிப்பு மனித உரிமை அமைப்புக்கள் அதிர்ச்சி!

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரின் மறு ஆய்வு மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றம் கடந்த 8-ம் திகதி நிராகரித்தமை சர்வதேச மனித உரிமை அமைப்புக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

இக்கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நளினி, அவரது கணவர் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நான்குபேரும் தமது தண்டனை குறித்த மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்து தங்களின் மரணதண்டனையை மறு ஆய்வு செய்ய வேண்டுமெனக் கோரியிருந்தனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகளான கே.டி.தோமஸ், டி.பி. வாத்வா, எஸ்.எம் காத்ரி ஆகிய மூன்று பேர் அடங்கிய குழு இந்த மனுக்களை நிராகரித்துவிட்டது. நீதிபதி தோமஸ் நளினியினது தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றப் பரிந்துரை செய்த போதும் மற்றைய இரு நீதிபதிகளும் அதற்கு உடன்படவில்லை. நளினிக்கு குழந்தை இருப்பதால் இருவருக்கும் மரணதண்டனை விதித்தால் அக் குழந்தை அநாதையாகிவிடுமென நீதிபதி தோமஸ் தெரிவித்தபோதும் மற்றைய இரு நீதிபதிகளும் அதனை ஆதரிக்கவில்லை.

இதனையடுத்து நான்குபேரின் மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இந்திய உச்ச நீதிமன்றத்தின் இந்த முடிவு குறித்து மனித உரிமைச் சங்கங்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளன. சர்வதேச ரீதியில் மரண தண்டனையை ஒழிப்பதற்கு பல நாடுகள் முயன்றுவரும் வேளையில் இந்த முடிவு அதிர்ச்சியானது என அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. தற்போதைய நிலையின்படி இந்நால்வருக்கும் வழங்கப்பட்ட மரணதண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதிசெய்தபோதும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்திய ஜனாதிபதிக்கு கருணை மனுவைச் சமர்ப்பிக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிற்கு இனி நல்லகாலம்

## – வை.கோ

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு மதி.மு.க. பொது செயலாளர் தேர்தல் முடிவுகள் குறித்து பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்திய நாட்டிற்கு இது நல்ல காலம். வரப்போகும் 5 ஆண்டுகள் இந்தியாவிற்கு ஒளிமயமான எதிர்காலம் ஆகும். ஏனெனில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அகில இந்திய அளவில் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் வாஜ்பாய் மெல்லிய தன்மை கொண்டவர். உலகத்தலைவர்களிடையே இன்று வாஜ்பாய் புகழ் பெற்று விளங்குகிறார். 13 மாதகால அவரது ஆட்சிக்கு உலக அளவில் மதிப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தில் ஜனநாயகப் படுகொலைகள், பாலியல் பலாத்காரங்கள் போன்றவை நடந்தன. காங்கிரசுக்கு மாற்று அகில இந்திய அளவில் தேவைப்பட்டது. இந்த விடயத்தில் பா.ஜ.க வின் கொள்கைகளோடு மதி.மு.க ஒத்துப்போனது.

எல்லா மொழிகளையும் ஆட்சி மொழிகள் ஆக்கவேண்டும் என்ற எங்களது கொள்கைக்கு பா.ஜ.கவும் ஆதரவு தெரிவித்து. இப்படிப் பல்வேறு கருத்துக்களில் எங்களுக்கும், பா.ஜ.க விற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

பாரதிய ஜனதா ஆட்சிக்கு அ.தி.மு.க அளித்து வந்த ஆதரவினை வாபஸ் வாங்கியது. அந்த சூழ்நிலையில் நாங்கள் துணிச்சலான முடிவுடன் பா.ஜ.க அரசிற்கு ஆதரவு அளித்தோம். இப்படி ஒரு ஆபத்தான நிலையில்



தி.மு.கவும், பா.ஜ.க ஆட்சிக்கு ஆதரவு அளித்து உதவியதால் நாங்களும் தி.மு.க வுடன் கூட்டணி அமைத்தோம். மாநில கட்சிகளின் ஒத்துழைப்புடன் ஆட்சி நடத்துவதுதான் நல்லது என பா.ஜ.க முடிவெடுத்து உள்ளது. மதி.மு.க. மாநில கட்சியாக இருந்தாலும் இந்தியா நன்றாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தினைக் கொண்டிருக்கிறோம்.

ஜனநாயக முறையினால் தான் இந்தியாவிற்கே உலக அரங்கில் மதிப்பு ஏற்பட்டு உள்ளது. எந்தக் கட்சி ஆனாலும் பெரியகட்சி, சிறிய கட்சி என்று பார்க்காமல் மாநிலக் கட்சி என்ற அடிப்படையில்தான் பார்க்கவேண்டும்.

# இந்தியச் செய்திகள்

## புதிய அமைச்சரவையில் தமிழகத்திற்கு 6 இடங்கள்?

மத்திய அமைச்சரவையில் தமிழகத்தைச் சேர்ந்த 6 பேருக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த முறை, வாஜ்பாயின் அமைச்சரவையில், அ.தி.மு.க.வைச் சேர்ந்த நான்கு பேருக்கும், பா.ம.க, தமிழக ராஜீவ் காங்கிரஸ் சார்பில் தலா ஒருவருக்கும் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. அப்போது அ.தி.மு.க. 18 எம்.பி.க்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருந்தது.

இந்த முறை தி.மு.க 11 எம்.பி.களுடன் உள்ளது. முரசொலி மாறன், டி.ஆர்., பாலு ஆகிய இருவருக்கும் அமைச்சர் பதவி கிடைப்பது உறுதியாகிவிட்டது. அதே நேரத்தில், இன்னொருவருக்கு இணை அமைச்சர் பதவி கிடைக்கும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில், சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு அந்த வாய்ப்புக் கொடுக்கப்படலாம் என்று தெரிகிறது.

திருச்செந்தூர் தொகுதியில் தனுஷ்கோடி ஆதித்தனைத் தோற்கடித்த ஜெயசீலனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது. அவ்வாறு இல்லாவிட்டால், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்களில் ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கலாம். முரசொலி மாறனுக்கு, தொழில் துறை மற்றும் சில கூடுதல் துறைகளும், டி.ஆர். பாலுவுக்கு பெட்ரோலியம் அல்லது தரைவழிப் போக்குவரத்துத்துறையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளுக்குத் தலா ஓர் இடம் கிடைக்கும். பா.ம.க சார்பில் வேலூர் சண்முகத்துக்கும், ம.தி.மு.க. சார்பில் செஞ்சி ராமச்சந்திரனுக்கும் வாய்ப்புக்கிடைக்கலாம். தமிழக பாஜக சார்பில் ரங்கராஜன் குமாரமங்கலம் இடம் பெறுவார். தற்போதைய நிலையில் இதைவிட கூடுதல் இடங்கள் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று பா.ஜ.க வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தமுறை 20 கட்சிகள் கொண்ட பெரிய கூட்டணியாக உள்ளதால் அனைத்துக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்று வாஜ்பாய் விரும்புகிறார். அதே நேரத்தில் கட்சிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்த இடம் கொடுக்கப்படவேண்டுமென திரிணாமூல் காங்கிரஸ் கேட்கிறது.

ஜனதா தளம் (ஐ) சார்பில், 20 பேர் உள்ளனர். இதில், பெர்னாண்டஸ், நிதிஷ்குமார், சரத் யாதவ், பாஸ்வான், திக்விஜய் சிங் உள்பட பல தலைவர்கள் அமைச்சரவை பதவிக்குக் காத்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் அனைவருக்கும் இடம் கொடுப்பது மற்ற கட்சிகளிடையே புகைச்சலை ஏற்படுத்தும். அமைச்சரவையில் தெலுங்கு தேசம் சேரும்பட்சத்தில் குறைந்தபட்சம் ஐந்து இடங்கள் அதற்கு ஒதுக்கப்படவேண்டும்.

சிவசேனை 15 எம்.பி.க்களுடன் உள்ளது. அதே நேரத்தில், பிஜு ஜனதா தளம், தேசிய மாநாட்டுக்கட்சி, அகாலி தளம், இந்திய தேசிய லோக் தளம் ஆகிய கட்சிகளுக்கும் குறைந்தபட்சம் ஓர் இடம் கொடுக்க வேண்டும். மேலும், இந்தமுறை பிகாரில் பாஜக. மற்றும் கூட்டணிக் கட்சிகள் அதிக அளவில் வெற்றி பெற்றுள்ளதால், அந்த மாநிலத்துக்கு அதிக பிரதிநிதித்துவம் தரலாம் என்று தெரிகிறது.

# அ.தி.மு.க.வுடன் உறவு தொடருமா? காங்கிரஸ் மறு பரிசீலனை

தமிழகத்தில் அ.தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை என்று கருதும் காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க.வுடனான உறவு குறித்து மறு பரிசீலனை செய்யும் என்று தெரிகிறது. பிகாரில் லாலு பிரசாத் தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தளத்துடன் உள்ள உறவு குறித்தும் பரிசீலிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கபில் சிபலிடம் அ.தி.மு.க, ராஷ்ட்ரீய ஜனதா தளம் உறவு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. 'இது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது' என்றார் அவர். பிகாரில் லாலுவுடன் கூட்டணி வைத்துக் கொண்டதால், காங்கிரஸ் மிகக் கடுமையான தோல்வியைச் சந்தித்தது என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

'பாரதிய ஜனதாவும், அதன் தலைமையிலான கூட்டணிக் கட்சிகளும் இந்தமுறை பெரும்பாலான தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனாலும், இந்த வெற்றியின் பலன் நீண்ட நாட்களுக்கு இருக்காது. ஆந்திரம் போன்ற மாநிலங்களில் பாரதிய ஜனதாவால் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்றார் சிபல்.


## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் இருந்து தமிழில் மொழிபெயர்க்க மொழி பெயர்ப்பாளர்கள் தேவை:

தொடர்புகளுக்கு:
திரு. வேலழகன்
Chez EELAMURASU
22, Rue Perdonnet, 75010 Paris.
தொலைபேசி: 0140376363 தொலைநகல்: 0140376464
E-mail: eelamurasu@aol.com

Pub.Gra



## சுவிஸ் வாழ் தமிழ் மக்களே!

சிறீலங்காவில் உள்ள தேவையான உங்கள் ஆவணங்கள் சம்பந்தமான அலுவல்களை செய்ய பெற்றுத்தர உறுதியான முகவர் சேவை இங்கும்!

* பிறப்பு / இறப்பு பதிவு ஆவணங்களை பெற்றுத்தர
* திருமணப் பதிவு, திருமணமாகாத சான்றுப் பத்திரம்
* அடையாள அட்டை தொலைந்த / புதிதாக எடுக்க
* உறவினர்களை அழைப்பதற்கான சிறீலங்காவில் சுவிஸ் தூதரக ஆவண ஏற்பாடுகள் (இலங்கையில்)
* கடவுச்சீட்டு பெறத் தேவையான ஒழுங்குகள்

மற்றும் இவை சம்பந்தமான பலசேவைகளை (விரும்பினால் சுவிஸ் தூதரக உறுதிச்சான்றுடன்) வழங்க காத்திருக்கின்றோம்

* தொடர்புக்கு (சுவிஸ்) 076-5450938 ராம்

*திங்கள் - வெள்ளிக்கிழமைகளில் 14h - 17h30-வரையும் சனி ஞாயிறு 24 மணி நேரமும்*

sw 23043

# 13வது நாடாளுமன்ற தேர்தல்

# தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெருவெற்றி

## பா.ஜ.க கூட்டணி 297, காங்கிரஸ் கூட்டணி 134

## தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்குப் பெரும் பின்னடைவு

### சோனியா

காங்கிரஸ் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது என்று அக்கட்சியின் தலைவர் சோனியா காந்தி கவலை தெரிவித்துள்ளார். தேர்தல் தோல்வி குறித்து சோனியா வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:

இந்திய வாக்காளர்கள் தங்களுக்குள்ள வாக்குரிமையை நிறைவேற்றி ஜனநாயகத்தின் மீதுள்ள நம்பிக்கையை மீண்டும் நிரூபித்திருக்கிறார்கள்.

அவர்கள் அளித்த ஆதரவுக்கு, காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மக்களவைத் தேர்தல் முடிவுகள் எங்கள் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு அமையவில்லை. காங்கிரஸ் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அதே நேரத்தில், சில பகுதிகளில் பலம் பெற்றிருக்கிறோம். வாக்கு சதவீதமும் அதிகரித்திருக்கிறது. சுயவிமர்சனம், பலவீனங்களை ஆராய்வது மற்றும் உறுதியான நடவடிக்கையின் அவசியத்தை தேர்தல் முடிவுகள் உணர்த்தியுள்ளன.

இதற்கிடையில், மக்கள் தீர்ப்பைத் தயக்கமின்றி ஏற்றுக்கொள்கிறோம். கட்சிக்குப் புதிய வடிவமும், தெளிவும் கொடுக்கவும், மக்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவும் காங்கிரஸ் எடுத்த முயற்சிகளை மீண்டும் புதிய வலிமையுடன் செயல்படுத்த வேண்டும். நாட்டின் அடிப்படை இலட்சியங்களையும், கட்சியையும் காப்பாற்ற வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அதற்காக நம்மை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்வோம் என்று சோனியா தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மொத்த இடம் | – 543 |
| எண்ணிக்கை நடந்தது | – 538 |
| முடிவு தெரிந்தது | – 538 |

| அணிகள் | வெற்றி |
|---|---|
| பா.ஜ. கூட்டணி | – 297 |
| காங்.கூட்டணி | – 134 |
| இடதுசாரி | – 42 |
| மற்றவை | – 65 |

முடிவுகள் கட்சிவாரியாக)

| அணிகள் | வெற்றி |
|---|---|
| **பா.ஜ.க கூட்டணி** | |
| பா.ஜ.க. | – 182 |
| தெலுங்கு தேசம் | – 29 |
| தி.மு.க. | – 11 |
| பிஜூ ஜனதாதளம் | – 10 |
| சிவசேனை | – 15 |
| ஜனதாதளம்(ஐ) | – 20 |
| திரிணாமுல் | – 8 |
| பா.ம.க. | – 5 |
| ம.தி.மு.க. | – 4 |
| இமாச்சல் விகாஸ் | – 1 |
| லோக்தளம் | – 5 |
| அகாலிதளம் | – 2 |
| எம்.ஜி.ஆர், அ.தி.மு.க | – 1 |
| எம்.ஜி.ஆர் கழகம் | – 1 |
| இதர கட்சிகள் | – 2 |
| **காங்கிரஸ் அணி** | |
| காங்கிரஸ் | – 112 |
| அ.தி.மு.க | – 10 |
| ராஷ்ட்ரிய ஜனதாதளம் | – 7 |
| முஸ்லீம் லீக் | – 2 |
| ரா.லோக்தளம் | – 2 |
| இதர கட்சி | – 1 |
| **மற்றவை** | |
| இடதுசாரி | – 42 |
| சமாஜ்வாதி | – 26 |
| பகுஜன் சமாஜ் | – 14 |
| தேசியவாத காங்கிரஸ் | – 7 |
| தேசிய மாநாடு | – 4 |
| ஜனதாதளம் (எஸ்) | – 1 |
| ஜே.எம்.எம் | – 1 |
| ஏ.ஜி.பி | – 1 |
| சுயேட்சை | – 4 |
| இதர கட்சிகள் | – 4 |

### தமிழக முடிவுகள்

| கட்சிகள் | போட்டியிட்ட இடம் | வென்ற இடம் | சதவீதம் |
|---|---|---|---|
| அ.தி.மு.க | 24 | 10(–8) | 25.68 |
| தி.மு.க. | 19 | 12(+6) | 23.12 |
| பா.ம.க | 7 | 5(+1) | 8.21 |
| பா.ஜனதா | 6 | 4(+1) | 7.15 |
| ம.தி.மு.க. | 5 | 4(+1) | 5.95 |
| த.மா.கா | 24 | 0(–3) | 6.84 |
| காங்கிரஸ் | 11 | 2(+2) | 11.09 |
| இ.கம்யூ | 2 | 0(–1) | 2.55 |
| மா.கம்யூ | 2 | 1(+1) | 2.35 |
| எம்.ஜி.ஆர், அ.தி.மு.க. | 1 | 1(+1) | 1.45 |
| த.ரா.கா | 1 | 0(–1) | 1.26 |
| புதிய தமிழகம் | 9 | 0 | 2.05 |
| இதரகட்சி | 6 | 0 | 0.45 |
| சுயேச்சை | 245 | 0 | 1.85 |
| **மொத்தம்** | **4362** | **39** | **100.00** |

## நிலையான ஆட்சிக்கான மக்களின் தீர்ப்பு இது

### – வாஜ்பாய்



மத்தியில் நிலையான அரசு அமையவேண்டும் என்ற நோக்கில் நடந்துமுடிந்த தேர்தலின் போது மக்கள் வாக்களித்துள்ளமை முடிவுகளை நோக்கும் போது புரிகிறதென பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணி பெற்ற பெரும்பான்மை வெற்றி குறித்து மகிழ்வு தெரிவித்த பிரதமர் இம் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

நிலையான ஆட்சி தேவை என்று மக்கள் நினைக்கின்றார்கள். மக்களின் இத் தீர்ப்பினை அரசும் எதிர்க் கட்சிகளும் மதித்து நடக்கவேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட மோதலை நாம் இப்போது மறக்கவேண்டும். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு முக்கிய பங்கு உள்ளதால் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது எதிர்க் கட்சிகளோடு ஒத்த கருத்தினை ஏற்படுத்த அரசு முயலும். எதிர்க் கட்சிகளும் இந்த நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டு அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மாறாக எதிரிகளாகச் செயற்படக்கூடாது. தேர்தல் எவ்விதமான குழறுபடிகளுமில்லாமல் அமைதியாக நடந்துமுடிந்திருப்பது பெரிய சாதனை. ஜனநாயகத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையினையே இது காட்டுகிறது.

1984-ம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக ஒரு அணிக்கு பெரும்பான்மையான ஆதரவினை மக்கள் அளித்திருந்தார்கள். தேசிய ஜனநாயக முன்னணி மீது நம்பிக்கைவைத்து எமக்கு வாக்களித்த மக்களுக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன் எனவும் அவர் கூறினார்.



தேர்தலில் வாஜ்பாய் வெற்றியடைந்ததை அடுத்து காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார்.


தமிழர் மருத்துவ அறிஞர்கள் நிறுவனம் நடாத்தும்

*The Medical Institute of Tamils (Miot)*

**சரித்திரம் சமைத்த செகராசசேகரன்**

வரலாற்று நாடகமும்

**மெல்லிசை நிகழ்ச்சியும்**

**காலம்: 16.10.99 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு**

**இடம்: Assembley Hall.Forest Road, Walthamstow, London E17.**

*இதில் சேகரிக்கப்படும் நிதி அனைத்தும் வன்னி, வாகரை வாழ் அகதிகளின் சுகாதார தேவைகளிற்கு பயன்படுத்தப்படும்.*

**தனிநபர்: £ 5.00**

(12 வயதிற்குட்பட்டோர் அனுமதி இலவசம்)

**தொடர்புகளுக்கு: 0181 296 8480**

Pub. Gra.


## செல்வகணபதி வெற்றி: வாழப்பாடி தோல்வி

சேலம் மக்களவைத் தொகுதியில் அ.தி.மு.க வேட்பாளர் டி.எம். செல்வகணபதி வெற்றி பெற்றார். தமிழக ராஜீவ் காங்கிரஸ் வேட்பாளர், மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தியை 25,411 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். வாக்குகள் விவரம்: செல்வகணபதி (அ.தி.மு.க) 3,63,689 கே. ராமமூர்த்தி (தராகா) 3.38,278 ஆர்.தேவதாஸ் (த.மா.கா) 19604 இத்தொகுதியில் மொத்தம் 21 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

## வாஜ்பாய்க்கு நவாஸ் ஷெரீப் வாழ்த்து

பா.ஜ. கூட்டணி 'அறுதிப் பெரும்பான்மை பெற்றதற்காக இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் இருதரப்பு உறவைப் பாதிக்குமா என நிருபர்கள் கேட்டதற்கு 'வாஜ்பாய் சாகேப் வசம் நாங்கள் ஏற்கெனவே பேச்சு நடத்தியிருக்கிறோம். எதிர்காலத்திலும் அது தொடரும். அவரிடம் நாங்கள் நிறைய எதிர்பார்க்கிறோம்' என்றார் ஷெரீப். காஷ்மீர் உள்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு காணப்படும் என நம்புவதாகவும் ஷெரீப் கூறினார்.




# அடிமைத்தொழிலாளர்களுக்கான நஷ்டஈடாக 3.3 பில்லியனை வழங்க ஜேர்மனி உடன்பாடு

(08.10.99)

ஜேர்மனிய அரசும், அதன் கைத்தொழில் அதிபர்களும் நாசி அரசாட்சி காலத்தில் அடிமைகளாக பலாத்காரமாக வேலை வாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் அவர்களில் தப்பியுள்ளவர்களுக்கும் நஷ்ட ஈடாக 3.3 பில்லியன் டொலர்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் இத்தொகை மிகக் குறைவானது என வாஷிங்டனில் நடந்த பேச்சுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி வழங்க ஒப்புக்கொண்டுள்ள தொகையானது 250,000 முன்னாள் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் யூதர்கள் என்றும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து பலாத்காரமாக வேலைகளுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. டயிம்லர் பென்ஸ், BMW வொக்ஸ்வாகன், பயர், சீமண்ஸ் என பதினாறு ஜேர்மனிய நிறுவனங்கள் தங்கள் மேல் தொடரப்படக்கூடிய வழக்குகளில் இருந்து தப்புவதற்காக இவ்வாறான நஷ்டஈட்டினை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன.

ஜேர்மனிய நிறுவனங்களுக்கு எதிராக தொழிலாளர்களுக்காக வாதாடும் அமைப்பின் வழக்கறிஞர், ஜேர்மனியர் வழங்க ஒப்புக்கொண்டுள்ள தொகையானது மிகவும் குறைவானது. அவர்கள் குறைந்த தொகையினைக் கொடுத்து மன்னிப்பை சம்பாதிக்க முயல்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

# பினோச்சே நாடுகடத்தப்படலாம் – நீதிமன்றம் தீர்ப்பு

சிலி நாட்டின் முன்னாள் இராணுவ ஆட்சியாளரான அகஸ்டோ பினோச்சே தனது ஆட்சிக்காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் சித்திரவதைகள், கொலைகள் போன்றவற்றிற்காக விசாரணைகளுக்கு ஸ்பெயினுக்கு நாடு கடத்தப்படலாம் என இங்கிலாந்தின் நீதிமன்றம் ஒன்று தீர்மானித்துள்ளது.

போவ் வீதி நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று பினோச்சே வழக்குச் சம்பந்தமாக தீர்ப்பினை வழங்கியது. இதன் பிரதி உயர் நீதியரசரான றொனால்ட் பார்ட்ல் தனது தீர்ப்பில், பினோச்சே நாடுகடத்தப்படலாம் என்ற தீர்ப்பினை வழங்கினார். சிலியில் பினோச்சே காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் 34 குற்றங்களுக்காக ஸ்பெயின் அவரை நாடுகடத்தக் கோருகிறது.

ஜெனரல் பினோச்சே இங்கிலாந்தில் சுமார் ஒரு வருடத்திற்கு முன் கைது செய்யப்பட்டார். அவரது உடல் நிலை மோசமடைந்ததால் இங்கிலாந்து நீதிமன்றம் இவரை மன்னித்துள்ளது. ஆனால் ஸ்பெயினின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று தீர்ப்பளித்துள்ளது. பினோச்சே மீதான தீர்ப்பினையடுத்து சிலியிலும் ஸ்பெயினிலும் பினோச்சே எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சிலி அரசு இனிமேல் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மாத்திரமே மேற்கொள்ளும் என்றும் பிரித்தானிய அரசிடம் கோரிக்கைகள் எதனையும் முன்வைக்காது என்றும் அந்நாட்டின் ஜனாதிபதி தெரிவித்தார். அதேவேளை



பினோச்சேயை விசாரணை செய்ய தமது நாடு தயாராய் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

83 வயதான அகஸ்டோ பினோச்சேயின் நாடுகடத்தல் தீர்ப்பினை அடுத்த பதினைந்து நாட்களுக்குள் மேன்முறையீடு செய்யப்போவதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இறுதிக் கட்டமாக பிரித்தானிய உள்துறைச் செயலர் ஜெக் ஸ்ராவே நாடுகடத்தல் உத்தரவை வழங்கமுடியும் என்பதுவும் அதுகூட மீள் பரிசீலனை செய்யப்படக்கூடியது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச அமைதிப்படை ஆயுதக் குழு மோதல்

கிழக்குத் தீமோரில் செயற்படுத்தப்பட்டுள்ள சர்வதேச அமைதிப்படை மேற்குத் தீமோர் பகுதியில் இந்தோனேசிய ஆதரவு



ஆயுதக்குழுவினருடன் மோதல்களில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சனியன்று சூவாய் துறைமுகப் பகுதிக்கு அருகில் அல்டோ லெபோஸ் கிராமத்தில் பத்து முதல் பதினைந்துவரையான எண்ணிக்கைகொண்ட ஆயுதக் குழுவினர் அப்பகுதியில் ரோந்து சென்ற அமைதிப்படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து ஏற்பட்ட மோதலில் இரண்டு ஆயுதக் குழுவினர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். மொட்டானா பகுதியில் அடுத்த மோதல் இடம் பெற்றதாயும் இதன்போதும் ஆயுதக்குழுவினர் பலர் காயமடைந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த திங்களன்று சர்வதேச அமைதிப்படையினருடன் முதலாவது மோதல் இடம் பெற்றுள்ளது. இதன் போது இரண்டு அவுஸ்திரேலிய படையினர் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே கிழக்குத் தீமோருக்கு மேலும் பல நூறு படையினரும் 40 கனரக வாகனங்களும் புதிதாக வந்து இறங்கியுள்ளன. தற்போதுள்ள எண்ணிக்கையுடன் இப்போது 6500 படையினர் இங்கு நிலைகொண்டுள்ளனர். சர்வதேச அமைதிப் படையின் தளபதியான பீட்டர் கொஸ்குரோவ் இந்தோனேசிய ஆதரவு ஆயுதக் குழுவினரை, ஆயுதங்களைக் கைவிட்டு நாட்டின் எதிர்காலத்தினை முன்னிட்டு தம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டினார்.

கடந்த ஞாயிறு காலை தீமோரின் மதத் தலைவரான, கார்லோஸ்பெல்லோ மேற்குத் தீமோரிற்கு இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பும் வகையில் அவர்களுக்கான பாதுகாப்பினைச் சர்வதேசம் மேலும் உறுதிசெய்யவேண்டும் என வற்புறுத்தினார்.

# கொசோவோ அமைதிப்படை புதிய தலைமையில் !

(09.10.99)

கொசோவோவில் நிலைகொண்டுள்ள நேட்டோ தலைமையிலான பல்தேசிய அமைதிப் படையின் தளபதியாக கடமையாற்றிய பிரித்தானியாவின் லெப். ஜெனரல் மைக்கல் ஜக்சன் தனது பதவியைக் கடந்த வெள்ளியன்று ஜேர்மனியில் ஜெனரல். கிளவுஸ் ரெயின்ஹார்ட்டிடம் ஒப்படைத்தார். இரண்டாம் உலக யுத்தத்தின்பின் வெளிநாடொன்றில் படைப் பிரிவிற்கு ஜேர்மானியர் தலைமை தாங்குவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய தலைமைப் பதவியைப் பெற்றுக்கொண்ட ஜேர்மன் தளபதி, அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள சேர்பிய சமுகத்தின்பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் கவனத்தைச் செலுத்துவதாகக் குறிப்பிட்டார். புதிதாக உருவாக்கப்பட்ட கொசோவோ பாதுகாப்புப் படையின்மேல் நுணுக்கமான அவதானிப்பை அமைதிப்படை வைத்துக்கொள்ளும், KLA யின் மறு வடிவமாகத் தோற்றம் கண்டுள்ள புதிய பாதுகாப்புப் படைப்பிரிவு, கொசோவோவில் அல்பேனியரல்லாத சமூகத்தினரை அகற்



றும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அது தொடர அனுமதிக்க முடியாது எனக்குறிப்பிட்ட அவர், தனது தலைமையின்கீழ் அமைதிப்படை சகல சமூகத்திற்கும் சமனான பாதுகாப்பை வழங்கும் என்றும் கூறினார்.


உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை
நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில்
நனைந்திட ஐரோப்பா புகழ்

* ஈழநிலா *

தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

A.S.C.E.S இன் புதியவகுப்புகள்
14 ஆசிரியர்களின் கல்வி புகட்டலால் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் நடைபெறும் ஒரே பாடசாலை
bio,chimie,maths,tamoul,anglais,français,histoire etc
dictée, orthographe, résumé, expression écrite வீட்டுப்பாடங்கள் செய்ய கூடுதல் விளக்கம் பெற உதவி செய்யப்படும் சனி பி.ப 1.30 மணி–ஞாயிறு காலை 10 மணி

பிரஞ்சு
09.10.99 சனி பி.ப 1.30 மணி
03.10.99 ஞாயிறு காலை 10.00
11.10.99 திங்கள் பி.ப. 3 மணி
12.10.99 செவ்வாய் பி.ப.3 மணி 4.30 மணி
22.09.99 புதன் பி.ப 3மணி பி.ப. 4.30 மணி

பிரஞ்சு கற்க சிறந்த கை நூல் நடைமுறை பிரஞ்சு

ஆங்கிலம்
Cambridge,Toefl பரீட்சைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
02–03.10.99 சனி காலை 10 ஞாயிறு காலை 11 பி.ப 1.30மணி–3.30 மணி

கம்பியூட்டர்
windows95/98,word,excel,access,winNT4
பாகங்கள்பொருத்த –வாங்க ஆலோசனை
02–03.10.99 சனி–ஞாயிறு காலை 10 மணி பி.ப 1.30 மணி 3.30 மணி

சிறுவர்க்கான தமிழ் –பிரஞ்சு –கணித –ஆங்கில வகுப்புகள்
பிரதி சனி பிற்பகல் 1.30மணி முதல்

நடன வகுப்புகள் ஞாயிறு பி.ப 1.30மணி
தையல் கேக் அலங்காரம் : சனி பி.ப 2 மணி 3.30மணி
சங்கீத வயலின் ஓர்கன் வகுப்புகள்
சனி ஞாயிறு 10 மணி திங்கள் புதன் 3.30 மணி


சனி ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்
41, rue Didot 75014 Paris M° Pernety Dir N° 13
Tél 01 42 57 23 56
திங்கள் செவ்வாய் புதன் வகுப்புகள் நடைபெறும் இடம்
2,rue Esclagnon 75018 Paris M° Porte de Clingnancourt

# தொடருந்து விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரித்தானியாவில் அஞ்சலிகள்

இங்கிலாந்தின் மேற்கில் படிங்டன் தொடருந்து நிலையத்துக்கு அருகில் கடந்த செவ்வாயன்று நடந்த தொடருந்து விபத்தில் இன்னமும் உடல்களைத் தேடும் பணி நடந்துகொண்டிருக்க, பிரித்தானியாவின் பல பகுதிகளிலும் இவ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் சமய நிகழ்வுகள் கடந்த ஞாயிறு இடம்பெற்றன.

பிரித்தானியாவின் மிகக் கோரமான தொடருந்து விபத்து என வர்ணிக்கப்படும் இந்த விபத்தில், 40 பேர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் நூற்றுக்கும் அதிகமானோர் காணாமல் போயுமுள்ளதால் உயிரிழப்பின் சரியான தொகையை அறிவிக்க முடியாமல் இருப்பதாக பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேம்ஸ் ட்ரெயின்ஸ் நிறுவனத்தினால் இயக்கப்படும் பயணிகள் தொடருந்து கிரேட் வெஸ்டேர்ன் கடுகதி தொடருந்துடன் படிங்டன் தொடருந்து நிலையத்துக்கு அருகில் மோதிக்கொண்டது. இதன்போது இரு தொடருந்துகளினதும் முதலிரு பெட்டிகளும் தீப்பற்றி எரிந்துபோயின. இதற்குள் எத்தனைபேர் சிக்கிக் கொண்டிருந்தனர் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அநேகமாக 64 பேர் எரிந்து சாம்பலாகிப் போயிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.



ஒரு தொடருந்தின் சாரதி சமிக்ஞையை கவனிக்காமல் முன்னேறி மற்றைய தொடருந்துடன் மோதியிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்துள்ளபோதிலும் சரியான காரணம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

## மத்திய கிழக்கு

(09.10.99)

★ எகிப்திய தலைநகர் கெய்ரோவிற்குக் கிழக்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் இராணுவ வாகனம் ஒன்றும் உழவுயந்திரம் ஒன்றும் மோதிக்கொண்டதில் 26 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். எவ்வாறு நேருக்குநேர் உழவுயந்திரமும் இராணுவ வாகனமும் மோதிக் கொண்டன என்ற மர்மம் புலப்படவில்லை என்றும் இது பற்றிய மேலதிக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

★ மேற்குக் கரை நகரான நப்லூஸில் ஐந்து மாடிகளைக் கொண்ட வீட்டுத் தொகுதியில் நடந்த குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என இஸ்ரேலிய பொலிசார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர் இஸ்ரேலிய படைகள்மேல் தாக்குதல் நடத்துவதற்காக குண்டுகளைத் தயாரித்துக்கொண்டிருந்தபோதே அது வெடித்து அவர் கொல்லப்பட்டுள்ளதாயும் தெரிவித்தனர்.

★ அல்-குயிடா எனும் இஸ்லாமிய அமைப்பினை அமெரிக்க அரசு பயங்கரவாத அமைப்பாகத் தனது பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளது. இவ் அமைப்பு சவுதி கோடீஸ்வரரான ஒசாமா பின்லாடெனால் கட்டுப்படுத்தப்படுகின்றது என நம்பப்படுகிறது.

★ ரஷ்யாவும் ஈராக்கும் எண்ணெய் தயாரிப்பு இயந்திரங்களை விநியோகிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. இதன்படி 57 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இயந்திரங்களை ஈராக்குக்கு ரஷ்யா விநியோகிக்கும்.

## ஐரோப்பா

★ போர்த்துக்கலில் நடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் சோசலிசக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. முன்னரைவிட 11 விகித வாக்குகளை அதிகமாக இக்கட்சியினர் பெற்றுள்ளனர். இக்கட்சியின் கடந்த ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்திதான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

★ அமெரிக்க முதற்பெண்மணியான ஹிலரி கிளின்டன் கிழக்கு ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் முன்னாள் கம்யூனிச நாடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வரவேற்றுள்ளார்.

## ஆபிரிக்கா

★ அமைதி ஒப்பந்தத்தை போராளிக்குழுக்கள் மீறுவதாக, கொங்கோ ஜனநாயக குடியரசின் ஜனாதிபதி லோறன் கபிலா குற்றஞ்சாட்டியுள்ளார். போராளிகள் இரு நகரங்களின்மேல் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். அதில் ஜனாதிபதி கபிலாவின் பிறந்த நகரும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

★ புருண்டியில் படைவீரர் ஒருவர் பொதுமக்கள்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். தலைநகர் புஜீம்புறாவில் இடம்பெற்ற இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் காயங்களுக்கும் உள்ளானார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.


★ ருவாண்டா படைகளும் அவர்களது ஆதரவாளர்களான கொங்கோ போராளிகளும் 200 இற்கும் அதிகமான ஹூட்டு போராளிகளைக் கொன்றுள்ளனர் என ருவாண்டா செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

# இஸ்லாமிய நாடுகளுக்கு ரஷ்யாவின் விசேட தூதர்கள் பயணம்

## செச்சினிய விவகாரம் பற்றி விளக்கமளிப்பு

(10.10.99)

ரஷ்ய விசேட தூதர்களை இஸ்லாமிய நாடுகளுக்கு அனுப்பித் தனது செச்சினிய யுத்த நடவடிக்கைபற்றிய விளக்கங்களைத் தெரிவிக்கும் என அந்நாட்டின் வெளியுறவு அமைச்சுத் தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் செச்சினிய தாக்குதல்கள், இஸ்லாமிய நாடுகள் ரஷ்யாவுடன் பிணக்கினைத் தோற்றுவிக்கக் காரணமாய் அமையக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது. ரஷ்யத் தூதர்கள், ஈரான், பாகிஸ்தான், சவுதி அரேபியா, குவைத் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து தமது தாக்குதல்கள் முஸ்லிம்களுக்கு எதிரானதல்ல என்பதனை விளக்குவார்கள் என்றும் வெளியுறவு அமைச்சுத் தெரிவித்துள்ளது.



கடந்த மாதம் ரஷ்யக் கூட்டமைப்பின் குடியரசான டகஸ்தானிற்குள் செச்சினியாவில் இருந்து இஸ்லாமிய ஆயுதக் குழுவினர் நுழைந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த அரசினை மாற்றி இஸ்லாமிய குடியரசு ஒன்றினைத் தோற்றுவிக்க முனைந்தனர். இவர்களைப் பயங்கரவாதிகள் என ரஷ்யா கூறியது. இதன்பின் இரண்டு வாரங்களுக்கு முன் ரஷ்ய தரைப்படையும் விமானப்படையும் செச்சினியாவின் மேல் தாக்குதல்களை ஆரம்பித்தன.

தற்போது செச்சினியாவின் உள்ளே அதாவது ரஷ்யாவின் தென்பகுதியில் பாதுகாப்பு வலையம் ஒன்றினைத் தோற்றுவிக்கப்போவதாக ரஷ்யா கூறியுள்ளது. தெற்கு ரஷ்யாவை அண்டிய பகுதிகளினூடாக எதிர்காலத்தில் நடக்கக்கூடிய தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்காகவே இவ்வாறான பாதுகாப்பு வலையத்தை ஏற்படுத்துவதாக ரஷ்யா கூறியுள்ளது. அதே வேளை செச்சினியா மீது தற்போது முழுமையான தாக்குதல்கள் நடந்துவருகின்றன. இதன் இறுதியில் தனக்குச் சார்பான அரசு ஒன்றினை ஏற்படுத்த அது தயாராவதாய் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# மெக்சிக்கோ இயற்கை அனர்த்தத்தில் 400இற்கும் அதிகமானோர் மரணம்

மெக்சிக்கோ நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, நிலச் சரிவு போன்றவற்றால் 400 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோவின் 31 மாநிலங்களில் 9 மாநிலங்கள் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், பல ஆயிரம் மக்கள் இருப்பிடங்களை விட்டுவெளியேறியுள்ளனர் என்றும், அத்துடன் வெள்ளத்தினால் பல பகுதிகளின் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளும் அனுப்பப்பட முடியாதுள்ளதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மெக்சிக்கோவில் கடந்த நாற்பது வருடங்களில் பெய்துள்ள மிகக்கூடுதலான மழைவீழ்ச்சி இது என கணிக்கப்பட்டுள்ளது.

மெக்சிக்கோ நகருக்கு கிழக்காக அமைந்துள்ள மலைப்பகுதி நகரான பன்டேபெக்கில் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவினால் 70 வதுக்கும் மேற்பட்ட மக்கள் சேற்றுக்குள் புதைந்து மரணமாகியுள்ளனர் என்றும், இவர்களில் ஒரு பள்ளி ஆசிரியரும் 14 மாணவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமான விபத்துக்களில் ஆசிய விமான நிறுவனங்கள் முதலிடம்

இந்தத் தசாப்தத்தில் இடம்பெற்றுள்ள விமான விபத்துக்களில் 9000 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அதிலும் ஆசிய விமான நிறுவனங்களின் விபத்துக்களினாலேயே அதிகளவிலான உயிரிழப்பு ஏற்பட்டுள்ளன எனவும் 'எவியேஷன் மகசின்' எனும் வார. இதழ் தனது புதன் கிழமை இதழில் தெரிவித்துள்ளது.

1990 முதல் 1999-ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விமான விபத்துக்களில் 8751 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 2,480 பேர்கள் ஆசிய விமானங்களின் மூலம் ஏற்பட்ட விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர் என கணிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆபிரிக்க விமானங்கள் மூலம் 1,530 பேர்களும் தென் அமெரிக்க விமானங்களால் 1391 பேர்களும் உயிரிழந்துள்ளனர். வட அமெரிக்க விபத்துக்களால் 877 பேரும் ஐரோப்பிய விபத்துக்களால் 811 பேர்களும் இவ்விதம் உயிரிழந்துள்ளனர்.

ஆசிய விமானங்களால் உயிரிழப்புக்கள் அதிகம் எனக் கூறப்பட்டபோதிலும், உலகின் பாதுகாப்பு நிறைந்த விமான நிறுவனங்களும் ஆசியாவில் உண்டென்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய பேருந்து விபத்தில் 16 பேர் மரணம்

(09.10.99)

இஸ்ரேலில் கடந்த சனியன்று இடம்பெற்ற பேருந்து விபத்து ஒன்றில் 16 பேர்கள் கொல்லப்பட்டு 36 பேர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். காயமடைந்த 36 பேரில் 10 பேர்களது நிலை கவலைக்கிடம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் மிக மோசமான வீதி விபத்து இது எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மத்திய இஸ்ரேலில் தீபேரியாஸ் நகருக்கும் நாசரேத்துக்கும் இடையே 52 பேர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த பேருந்தின் ஓட்டுநர் கட்டுப்பாட்டை இழந்ததாலேயே இவ் விபத்து ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப் பகுதியில் தொடர்ந்து கடும்மழை பெய்து கொண்டிருக்கின்றது என்றும் பாறைகள் வழுக்கும் நிலையில் உள்ளதால் போக்குவரத்து ஆபத்தான ஒன்றாகவே உள்ளதென்றும் கூறப்படுகிறது. வீதியில் சென்றுகொண்டிருந்த பேருந்து சுமார் 20 மீற்றர் கீழே சென்று தலைகுப்புறப் புரண்டுள்ளது.

ETC

# மீண்டும் நிமிடங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது

தேசத்தின் விடிவை விரைவாக்க
இதோ உங்கள் கரங்களில் புதிய
பொலிவுடன்
ஈழம் தொலைபேசி அட்டைகள்




**ஈழம் தொலைபேசி அட்டையின்
வாடிக்கையாளர்களுக்கு ஒரு மாபெரும் நற்செய்தி !**

உங்கள் ஆதரவுப் படிகளில் ஏறி நிற்கிறது ஈழம் தொலைபேசி அட்டையின்

## முன்னேற்றப் புதுப் பொலிவு!!

உலக விஞ்ஞானம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள
நவீன தொழில்நுட்பத்துள் காலடி எடுத்து வைக்கிறது

## ஈழம் தொலைபேசி அட்டை!!!

எவ்வித இடையூறுகளும் இல்லாத தெளிந்த ஒலிப் பொலிவையும்
தடையில்லாத நீண்டநேர இணைப்பையும் காக்கவைக்காத
உடனடித் தொடர்பையும் அதிசயிக்கும் வகையில் தரவிருக்கும்
நவீன வான் அலைநுட்பத்துள்
ஈழம் தொலைபேசி அட்டை இணைந்துகொள்ளுகிறது
என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்கு
அறியத்தருகின்றோம்!

ஆங்கிலமொழி விளக்கத்துடன்:
08001007234 / 069222210046

டொச் மொழி விளக்கத்துடன்:
08001007235 / 069222210047

ஆகிய புதிய இலக்கங்களுடன்—புதுப் பொலிவுடன்
தொடர்ந்தும் தனது பணியில்—முன்னேற்றப் பாதையில்
வெற்றிநடைபோடவிருக்கிறது ஈழம் தொலைபேசி அட்டை!

உங்கள் ஆதரவால் உயர்ந்துவரும் உங்கள் தொலைபேசி அட்டை

## ஈழம் தொலைபேசி அட்டை!

## EELAM TELECARD

இந்தியா 1மணி 55நிமிடம்
சீறீலங்கா 2மணி 05நிமிடம்
பாக்கிஸ்தான் 1மணி 55நிமிடம்
மலேசியா 4மணி 35நிமிடம்
தாய்லாந்து 2மணி 26நிமிடம்
சிங்கப்பூர் 4மணி 35நிமிடம்
கென்யா 1மணி 50நிமிடம்
பிரான்ஸ் 8ம 20நிமிடம்
இத்தாலி 7மணி 20நிமிடம்
நெதர்லாந்து 8மணி 20நிமிடம்
நோர்வே 8மணி 20நிமிடம்
அமெரிக்கா 9மணி 10நிமிடம்

சீறீலங்கா
2மணி 5நிமிடம்
இந்தியா
1மணி 55நிமிடம்

**EELAM TELECARD - Germany**
**Tel: 0173 2722846**
**0208 2053652**




ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# உறுதியை வெல்லுமா போர்வெறி

சிறீலங்கா அரசு தனது அடுத்த ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான முன்னறிவித்தலைப் பாராளுமன்றத்தில் கொடுத்துள்ளது. இம் முன்னறிவித்தலில் தமிழ் மக்களை அழித்துவரும் அதன் இராணுவ இயந்திரத்திற்கும் பொலிஸ் நிர்வாகத்திற்குமென 5243 கோடி ரூபாவிற்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. சமாதானம் எனப் பல்லவி பாடி ஆட்சிக் கதிரையைப் பிடித்த சந்திரிக்கா குழுவினர் தமது சமாதான முகமூடிகளைக் கழற்றி எறிந்துவிட்டு முழுமையான போர் வெறி கொண்டு நிற்பதற்கு இந்த வரவுசெலவு முன்னறிவிப்பு இன்னொரு சான்றாக அமைகின்றது. சர்வதேசத்திற்கு ஏய்ப்புக் காட்டுவதற்காக சமாதானம் -சகவாழ்வு, பிரச்சினைக்குத் தீர்வு என அடிக்கடி தெரிவிக்கும் சந்திரிகா குழாம் இவ்வருடத்தினை விட 243 கோடி ரூபாவினை மேலும் அதிகமாகத் தனது அடுத்தவருட போர்ச் செலவீனத்திற்கு ஒதுக்கியுள்ளது ஏனென்பது சிறுகுழந்தைக்குக் கூடப் புரியும் ஒரு விடயம்.

விடுதலைப்புலிகளை அழித்து தனது தேசிய அரசியலை முன்னேற்றிக் கொள்ளலாம் எனப் பகற் கனவுகண்ட சந்திரிகா அரசு இன்று அக்கனவு குலைந்ததால் போக்கிடம் தெரியாது தட்டுத் தடுமாறி இராணுவத் தீர்வினையே ஒரு தலைப்பட்சமாக நம்பியபடி தனது நொண்டிப் பயணத்தைத் தொடர முற்படுகிறது. சர்வதேசத்தின் முன் அரசியல் பேசியபடியே தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்புச் செய்த இச் சக்திகள் தனது இராணுவ மேலாதிக்க மனோபாவம் உந்துதலடைய காலத்திற்குக் காலம் செய்தித் தணிக்கைச் சட்டம், அவசரகாலச் சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம் என முகமூடிகளை அணிந்து போரினை நடாத்திச்செல்ல முனைகின்றது. பல படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இராணுவப் பாடங்களை தமிழர் தாயகத்திடமிருந்து சந்திரிகா அரசு சந்தித்தபோதும் அப்பாரிய அழிவுகளை மூடி மறைத்து போரில் கொல்லப்பட்ட இராணுவத் துருப்புக்களின் எண்ணிக்கையைக்கூட இன்னும் சரிவரக் கணக்கிட்டுத் தனது சிங்கள தேசத்திற்குக் காட்டமுடியாத கையாலாகாத் தனம்தான் அதன் ஐந்துவருட ஆட்சிக் காலத்தின் சாதனையாகும். ஆனால் இந்தப் 'பெருமை மிகு' சாதனையைத் தனது தேசத்திற்கு ஒழித்து போரில் வெற்றியென சிங்கள மக்களுக்கும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் காட்டுவதற்கு அரசு தனது பிரச்சாரப் பீரங்கிகளால் இயன்றவரை பாடுபடுகின்றது. வருடாவருடம் தணியாத போர்வெறியுடன் ஆயிரமாயிரம் கோடிகளை எவ்வாறுதான் ஒதுக்கினாலும் நவீன ஆயுத தளவாடங்களை வாங்கிக்குவித்தாலும் தமிழ்த் தேசியத்தின் வரலாற்று உறுதியின் முன் இவை அனைத்தும் தோல்வியையே தழுவிக் கொள்ளும் என்பது நிச்சயம்.




உங்களைப் பார்த்தால் ரொம்ப பாவமா இருக்கு! அடுத்த வருடசெலவு 29.187 கோடியே 86 லட்சத்து 13 ஆயிரம் ரூபாவாமே! எப்படி சமாளிக்கப் போறீங்க? இந்தாங்க ஏதோ என்கையில கிடைச்ச சில்லரை!

நன்றி: 'தினக்குரல்'

# அரசுகளுக்கிடையேயான உறவாக அமையட்டும்

## பார்வை

அமெரிக்க இராஜாங்க அமைச்சு தன் அரசியல் - இராணுவ - இராஜதந்திர நலன்களை மையமாகக் கொண்டு வெளியிடும் பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலை மீள வெளியிட்டுள்ளது. **இதில் புலிகள் மீதான தடையை மேலும் இரு வருடங்களுக்கு நீடித்து புலிகளை நெருக்குவதற்கான இராஜதந்திர ஆயுதத்தை பாதுகாத்துள்ளது.**

இவ்வாண்டு வெளியிட்டுள்ள பட்டியலில் அமெரிக்க ஆதரவு பெற்ற மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகளை ஆதரித்த காரணத்தால் ஒரு பாலஸ்தீனிய இயக்கத்தை பட்டியலில் இருந்து நீக்கியுள்ளது. இதேவேளையில் கமாஸ் எனப்படும் பாலஸ்தீனக் குழு தொடர்ந்தும் ஆயுதம் தாங்கிப் போராடுவதால் அதனை தடைசெய்ய அமெரிக்க இராஜங்க அமைச்சர் முடிவு செய்துள்ளார்.

**புலிகள் மீதான தனது தடையை மையப்படுத்தி வெளியிடப்பட்ட தகவலில் புலிகள் சிங்கள இராணுவ அரசியல் தலைவர்களை அழிப்பதை சுட்டிக்காட்டும் அமெரிக்க இராஜாங்க அமைச்சு, புலிகளின் செயற்பாட்டு பிரதேசம் பற்றிய தனது குறிப்பில் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் இருப்பதாகக் கூறியுள்ளது. 'இவ்வாறான பின்னணிக் குறிப்புக்களுடன் எடுக்கப்படும் முடிவு தவறானதாய் அமையும்' என்பதை ஊகிப்பது இலகுவானது.** புலிகளின் தலைமையகம் வன்னி என்பதைக் கூட சரியாக உள்வாங்காது எடுக்கப்பட்ட முடிவை தமிழ் மக்கள் விசனத்துடன் நோக்குகின்றனர். அமெரிக்கா எப்போதும் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கத்தில் இருப்பதில்லை என்ற சரித்திரத்தை கிழக்கு ஐரோப்பாவில் பாதிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அகதியாகச் சென்ற குடும்ப குல விளக்கான மெடலின் அல்பிரைட் (இராஜாங்க அமைச்சர்) நிரூபித்துள்ளார்.

**புலிகள், அமெரிக்க நீதிமன்றத்தின் முன்பாக 'தமிழர்களின் போராட்டத்தையும் புலிகளை ஒரு அரசு' என தெளிவுபடுத்தியிருந்தனர். ஆனால் அமெரிக்கா இன்னமும் அதனை ஏற்கவில்லை. தென்னாசிய அரங்கின் சதுரங்க பலகையில் தமிழர்களும் ஒரு சக்தி என்பதை தமிழ் மக்கள் நிரூபித்து அமெரிக்காவுடனான உறவை அரசுகளுக்கு இடையேயான உறவாக ஏற்க வைப்பர்.** நீதியான மக்களின் போர் தோற்காது.

★ ★ ★

கதிர்காமரின் அரசி விசுவாசம் அவரை சிக்கலில் மாட்டிவிட்டுள்ளது. நியூயோர்க்கில் நின்று கொண்டு ஐ.நாவை விமர்சித்தால் தன்னை சிங்கள மக்கள் விசிலடித்து ரசிப்பார்கள் என்ற மட்டகரமான சிந்தனையுடன் பேசிய **கதிர்காமரை ஒரு முட்டாள் என அனுரா பண்டார நாயக்கா விமர்சித்துள்ளார். சிங்கள – ஆங்கில ஏடுகள் கதிர்காமரின் முட்டாள்தனத்தை புலிகள் நுட்பமாகப் பயன்படுத்திவிட்டதை பகிரங்கமாக ஏற்கத் தொடங்குகின்றன.**

சர்வதேச தலையீடு ஏற்பட்டால் எந்த விடுதலை இயக்கத்தை பயங்கரவாதிகள் என விமர்சித்தாரோ அதே விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளை சரிசமனாக நடாத்தி இரு நாடுகள் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டிவரும் என்ற இராஜதந்திரக்காரணத்தை கதிர்காமர் கூற ஆரம்பித்துள்ளார். பிபிசி வானொலிக்கு அளித்த பேட்டியில் இரு நாடு பற்றிய கருத்தை இவர் கூறினார். இதே பேட்டியில் உங்களை துரோகி எனப் புலிகள் கருதுகின்றார்களே எனக் கேட்ட போது, வழமை போல நவீன சமூகம் பற்றி போதனை செய்ய முற்பட்ட போதும் தான் துரோகி இல்லை என மறுக்கவில்லை.

★ ★ ★

சந்திரிகா அரசு சம வாய்ப்பு சட்டமூலத்தை (equal opportunities bill) அறிமுகப்படுத்தியது. இதனை ஒரு புரட்சி என உலக சமூகத்திற்கு சந்திரிகா கூறினார். அமெரிக்கா இச் சட்ட மூலத்தை பாராட்டியது (ஆதாரம்: Daily News).

ஆனால் அப் பாராட்டுக்கள் சென்றடைந்த பின் சட்டமூலத்தை மீளப்பெறப் போவதாக அறிவிக்கப்படுகின்றது. எனெனில் இச் சட்டமூலம் தமிழர்களுக்கு உரிமை(?) வழங்கிவிடும் என சந்திரிகா கருதுவதாக பௌத்த பிக்குகளும் ஆளும் கட்சி — எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கருதுவதாக Sunday times கூறுகின்றது. அது சிங்கள நலன்களுக்கு எதிரானது என கூறப்படுகின்றது.

**அது என்ன சமவாய்ப்பு சட்டமூலம்?**

**தமிழர்கள் அறிய மாட்டார்கள். சந்திரிகாவின் அரச விசுவாசிகளான சம்பந்தர் கூட்டணி வாய்திறக்கவில்லை. ஆனால் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது – அமெரிக்கா பாராட்டியது – சட்டம் மீளப் பெறப்பட்டது என்பன மட்டுமே நாம் அறிவோம்.**

சட்டங்களை சந்திரிகா கொண்டுவருவது அவரது பரப்புரை நாடகத்தின் ஒரு பகுதி. தன்னை நல்லவராக திரும்பத் திரும்ப காட்டும் வித்தை இது. **காலத்திற்குக் காலம் இவ்வாறு சட்டங்களை அறிமுகப்படுத்துவதும் பின்வாங்குவதும் தகப்பன் பண்டாரநாயக்கா காலம் முதல் நாம் காணும் உண்மையாகும். இன்று இதனை நம்ப கூட்டணி மட்டுமே தயாராக உள்ளது.**

★ ★ ★

இராணுவச் செலவீனத்தை சந்திரிகா அதிகரித்தன் மூலம் போரிற்கான அறிவிப்பு விடப்பட்டு விட்டது. லேசர் குண்டு, ராடர் குண்டு என மாறிமாறி வீசி போரை வெல்ல அரச முயல்கின்றது.

ஆனால் போர் மூலம் தீர்க்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். இதனை அனுபவம் மூலம்(?!) அறிந்ததாக அவர் கூறுகின்றார்.

சந்திரிகா ஆட்சியை பிடிக்கும் போது, போர் மூலம் தீர்க்க முடியாது எனச் சொல்லியே வாக்குக் கேட்டார். போரை நிராகரித்த சந்திரிகா, போரை சொல்லி வாக்குக் கேட்கப் போகின்றார். இதற்குத்தான் இச் செலவீன அதிகரிப்பு.

**அடுத்த ஆண்டிற்கான மொத்த செலவீனம் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இராணுவ செலவீனம் கூட்டப்பட்டுவிட்டது. இக் குத்துக்கரணத்தின் பின்னால் உள்ள காரணம் 'கடன் பொலிடிக்ஸ்' ஆகும்.** உலக வங்கியிடமும் உலக நாணய நிறுவனத்திடமும் கடன் கேட்பதென்றால் சில அடிப்படை நிபந்தனைகள் உண்டு. அதில் அரச செலவீன கட்டுப்பாடும் ஒன்று. எனவே பிற செலவீனங்களை கட்டுப்படுத்தி செலவீனக் குறைப்பை அறிவித்த அரசு, இராணுவ செலவீன அதிகரிப்பை வெளிக்காட்டி சிங்கள மக்களுக்கு, போரின் எதிர்காலம் பற்றிய சமிக்ஞையை வெளியிட்டுள்ளது. **சிறீலங்காவின் தேர்தல் ஆண்டில் 'மக்களை வாக்குப் போடவைக்க' செலவீன அதிகரிப்பை ஒரு பொருளாதார உபகரணமாக பல கட்சிகள் பயன்படுத்த, மாறாத இராணுவச் செலவீன அதிகரிப்பு மூலம் மக்களை தன்னோடு நிற்க வைக்க அரசு தயாராகியுள்ளது.**

★ ★ ★

- ராஜா

சிறு கதை

# பட்டுவுக்கு வந்த கடிதம்

ந. மகேஸ்வரி...

(இருவாரக் கதை)

(சென்றவாரத் தொடர்ச்சி)

தேவகியம்மா படிக்க ஆரம்பித்தார்.

'பட்டு உனக்கு இப்போது வர வசதியில்லாவிட்டாலும் பரவாயில்லே. உன் இடத்திலே இருந்து மகள் மீனாவுக்கு நல்லபடியாகக் கல்யாணம் நடத்திவைப்போம். அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நானும் மாமாவும் மீனாவை எங்கள் மகள்போலப் பார்த்து எல்லாம் செய்வோம். உன் மாமா எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்....'

'நா சொன்னனில்லே..... அக்காவும் மாமாவும் குறை இல்லாம எல்லாம் செஞ்சிடுவாங்க....'

'அதுசரி! உன் ஒரே மகளோட கல்யாணத்தை நீ பார்க்கவேண்டாமா....? உனக்கு ஆசையா இல்லையா.... எந்தத்தாயாலேதான் முடியும்.....?

'அதையெல்லாம் பார்த்தா முடியுமாம்மா....? நான் இன்னும் கொஞ்சநாள் இங்கன வேலை செஞ்சா காசு பணம் அனுப்பலாம்.... மகளுக்கு நாலு நகநட்டு வாங்கிப்போடலாம்.... போற இடத்திலே நிம்மதியா சந்தோசமா இருக்குமே....'

தேவகியம்மா நெகிழ்வோடு நோக்கினாள். அழுவதா.... சிரிப்பதா? அடியே பேதைப்பெண்ணே! இப்படி நினைத்து பெற்றவர்கள் கொடுக்க ஆரம்பித்ததுதானே இன்று 'சீதனம்' என்ற பெயரில் விசுவரூபம் எடுத்துத் தலைவிரித்து ஆடுகின்றது....

'நம்ப பிள்ளைக்குத் தானம்மா....'

'இருப்பவர்கள் தங்கள் செல்ல மகளுக்கு ஆசையாக அள்ளிக் கொடுத்தனுப்புவார்கள்! உற்றார், உறவினர், ஊராரும் மெச்சிக்கொள்ளவும் கொடுத்தார்கள்! அந்த நினைப்புத்தான் இன்று பேராசைத்தியாகப் பற்றி எரிகிறது....! மருமகள் மண்ணெண்ணெயில் எரிந்து கொண்டிருக்கிறாள்....'

தேவகியம்மாளின் குரல் ஆத்திரத்தில் தொடங்கி அழுகையில் அடைத்துக் கொண்டது.

புரிந்தோ புரியாமலோ பட்டு திகைப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள்.

'கொண்டுவந்த சீர்வரிசையில் திருப்தி பெறாத கணவன் பிறந்த பச்சிளங்குழந்தையைச் சுவரில் அடித்துச் சாகடித்ததாக ஒரு தாய் போலிசில் புகார் செய்தாள்' என்று நேற்று நாளிதழில் வந்த செய்தியைப் பட்டு படித்திருக்கமாட்டாளே....!

'என்னம்மா ரோசனை....?

'இப்போ உடம்பிலே வலுவிருக்கு உழைக்கிறே! பின்னாலே உன் வயசான காலத்திலே உன் தேவைக்கும் ஏதாவது கொஞ்சம் சேர்த்து வெச்சுக்கோ பட்டு! இதுதான் நான் உனக்கு சொல்ல விரும்புறது....'

'என்னம்மா அப்படி சொல்லிட்டீங்க.... அங்க இருக்கிறவங்கஅந்நியமா அயலாரா....? எல்லாமே கூடப்பிறந்த பொறப்புங்க.... பெத்த பிள்ளைங்க...'

வீட்டுக்காரம்மா விரக்தியோடு சிரித்துக்கொண்டார்.

'இந்தக் காலத்திலே பெற்றவங்களையே பிள்ளைகள் பாரமாக நினைக்கிறாங்க...! அந்நியமா நடத்துறாங்க... முதியோர் இல்லத்திலே சேர்த்துவிட்டு எட்டிப்பார்க்காம இருக்கிறாங்க... கூடப்பிறந்தவங்க மட்டும் எப்படி...?

'என்னம்மா இப்படிச் சொல்லிப்புட்டீக....?

'நாலுகாசு நம்ப கையிலே இருந்தாதான் நம்மை யாருமே மதிப்பாங்க....! இல்லே அவ்வளவு தான்....!'

'அம்மா படிச்சவங்க.... நாலுந்தெரிஞ்சவங்க! நீங்க சொன்னா சரியாத்தான் இருக்கும்....'

'அது போகட்டும்! இன்னும் மிச்சமிருக்கு படிக்கிறேன் கேளு....'

'படிங்கம்மா... படிங்கம்மா...'

ஆவலாகக் கேட்டாள்.

'இந்தத் தையிலே



கல்யாணத்தை முடிச்சிடலாம் என்று பெரியவங்க எல்லாரும் முடிவு செய்திட்டதாலே தட்டமுடியவில்லை! நல்ல காரியத்தைத் தள்ளிப்போடக் கூடாதாம். நீயும் வரமுடிந்தால் சந்தோசந்தான். முடியாவிட்டாலும் பரவாயில்லை. நாங்கள் இருக்கிறோம்! மாமாதான் முழுமூச்சாக எடுத்துச்செய்வார்! மீனா கல்யாணத்தை ஊரே மூக்கில் விரல் வைக்கும்படியாக நடத்திக்காட்டுவோம் என்று மாமா சொல்லியிருக்கிறார். நீ எதற்கும்கவலைப்படாதே!

கல்யாணச் செலவுக்கு சீக்கிரமாக பணம் அனுப்பிவைத்தால் காரியங்களைப் பார்க்கத்தோதாக இருக்கும். அதோடு கேட்டுக்கொண்ட பொருள்களையும் அனுப்பி வைக்க மறந்துவிடாதே! அடுத்ததெரு வள்ளி வருவதாகச் செய்தி வந்திருக்கு தில்லையரசுக்கு வாங்கினமாதிரியே வாட்சு வேணுமென்று மகன் ஆசைப்படுகிறான். மீனா கல்யாணத்தின்போது தில்லை மாதிரி வைகையும் வாட்சுக் கட்டிக்கொண்டால்தான் மாமாவுக்கும் மரியாதையாக இருக்கும் என்று சொல்லுகிறார். மறந்துவிடாதே, தில்லையும் வைகையும் அவருக்கு இரண்டு கண்கள் மாதிரி, அவர்மனம் நோகக் கூடாது என்று நானும் நினைக்கிறேன். ஏனென்றால் அவர்தான் கல்யாணத்தை எடுத்துச் செய்யப்போகிறவர் மற்ற விவரங்களுக்கு அடுத்த கடிதத்தில் எழுதச்சொல்கிறேன். உன் நலமே எங்கள் நலம் என்று நினைக்கும் உன் அன்பை என்றும் மறவாத அக்கா. சொக்கம்மா.'

பட்டு சேலைத்தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள். மகளுக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்பதால் ஏற்பட்ட ஆனந்தப்பிரவாகமா...? அதில் கலந்துகொள்ள முடியாமல்– பார்க்க முடியாமல் போய்விடுமே என்ற இயலாமையா....?

அவ்வளவு பணத்தை எப்படித் திரட்டப் போகிறோம் என்ற அச்சமா....?

பணக்கஷ்டமா....

மனக்கஷ்டமா....?

எது அவளை இப்படி உலுக்கி இருக்கும்....? கடிதத்தின் இறுதி வரிகளில் படித்திருந்தது ஒருவகை மிரட்டல்தானே....?

பட்டுவுக்கு அதன் பொருள் புரிந்திருக்குமா......!

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மை திறனுமின்றி வஞ்சனை செய்வாரடி....'

பாரதியின் அந்தப்பாடல் வரிகள் தேவகியம்மாளின் நெஞ்சை நெருடியது. மனம் கசிந்தது.

(முற்றும்)

நன்றி: செம்பருத்தி

# வெள்ளித் திரையில் வறுமையும் வேலையின்மையும்

வறுமையும் வேலையின்மையும் சமுதாயத் துப்பாக்கியின் இரண்டு குழல்கள். ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாட்டைப் போல் (Theory of Relativity) இவை இரண்டும் ஒன்றினுள் ஒன்றாய் - ஒன்றுக்கொன்றாய் - ஒன்றோடு ஒன்றாய் பின்னிக் கிடப்பவை.

இயற்கையும் அதன் வளங்களும் வலியோருக்கு சொந்தமாகத் துவங்கியபோது, அங்கே வறுமைக்குக் கால்கோள் இடப்பட்டது. விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் துளிர்விடத் துவங்கியபோது அங்கே வேலையின்மைக்கு விதையூன்றப்பட்டது. மனிதனின் ஆசைக்கனவுகளையும், அவனது இதயத்தில் புதைந்து கிடந்த எண்ணற்ற எதிர்பார்ப்புக்களையும் ஈவிரக்கமில்லாமல் அடித்து நொறுக்கியது. இயல்பழக முகிழ்ந்து மலரவேண்டிய நல்லியல்புகளை நாசம் செய்தது. சொர்க்கமாய் செழிக்கவேண்டிய இந்த சமுதாயத்தை சவலைக் குழந்தையாக மாற்றி மரணப் படுகுழியில் தள்ளியது. கார்ல் மார்க்சின் வார்த்தைகளில் சொல்வதானால் புனிதமான மனித உறவுகள் அனைத்தையும் வெறும் பணஉறவுகளாய் மாற்றிப்போட்டது!

முருகனிடம் ஔவைப் பிராட்டி முறையிட்டதைப் போல் 'கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது....'

இத்தகைய வறுமையைப் பற்றி வாய்மொழி இலக்கியங்கள் வானளாவ சித்தரித்தன. நாட்டுப்புறப்பாடல்கள், தெருக்கூத்துகள், கதாகாலட்சேபங்கள், கொலை சிந்துகள் போன்றவை



கிராமங்களில் இன்றுகூட வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஏடறியா இலக்கியங்களில் பெரும்பாலானவை இறைவனுக்கு அடுத்தபடியாக இந்த வறுமையைத்தான் வர்ணித்தன. இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள் போன்றவற்றில்கூட வறுமையானது ஏதாவது ஒரு வகையில் சம்பந்தப்பட்டே வந்திருக்கிறது. அரிச்சந்திரன், குசேலன், நல்லதங்காள் போன்ற கதாபாத்திரங்கள் வறுமையால் ஆட்கொள்ளப் பட்டவர்கள்தான்.

வறுமையை விரட்டுவதற்கு வேறு வழியே தெரியாததால்தான் மணிமேகலையிடம் அட்சயப்பாத்திரத்தை வழங்கி அதன் மூலம் ஆத்ம திருப்தி பட்டுக் கொண்டார் சீத்தலைச் சாத்தனார்!

வறுமையின் கொடூரத்தை காலாகாலமாக மக்கள் மனதில் பதித்துவந்த கதைதான் 'நல்லதங்காள்'

இதர விடயங்களைப்போல் இந்த வறுமையும் நாடக மேடையிலிருந்து புறப்பட்டு வெள்ளித்திரைக்கு வந்துசேர்ந்தது. ஆனால் நாடகத்திற்கும் சினிமாவுக்கும் குறிப்பிடத்தக்க எந்த வேறுபாட்டையும் நம்மால் காண இயலவில்லை. கையாளப்பட்ட கருவிகளிலும், அரங்கேற்றப்பட்ட நடிப்பிலும் காணப்படும் பரிணாம வளர்ச்சியும், பக்குவமும் கதையின் சாராம்சத்தில் இல்லை.

பசியின் கொடுமையால் ஒருவன் எவ்வாறு துடிக்கிறான் என்பதைக்காட்ட வேண்டியது அவசியம்தான். ஆனால் அந்த பசிக்கு என்ன காரணம் என்று கண்டறிய வேண்டாமா? அதைக்களைய வேண்டாமா? அவ்வாறு களைவதற்குரிய சிந்தனையை ரசிகனிடம் தூண்ட வேண்டாமா? அத்தகைய தூண்டில் தமிழ்த் திரையில் உண்டா?

இது சம்பந்தமாக வந்துள்ள படங்களை மூன்றுவகையாகப் பிரிக்கலாம்.

1. வறுமையாலும், வேலையின்மையாலும் மடிந்து போகிற – அல்லது தற்கொலை செய்துகொள்கிற பாத்திரங்கள்.
2. இப் பிரச்சனைகளிலுருந்து சுலபமான அல்லது குறுக்கு வழியில் தங்களை விடுவித்துக் கொள்கிற கதாபாத்திரங்கள்.
3. எதிர்நோக்கியுள்ள வறுமையையும், வேலையின்மையையும் வீறுகொண்டு தனியாகவோ கூட்டாகவோ எதிர்த்துப்போராடும் வெற்றியையோ – தோல்வியையோ அடையும் கதாபாத்திரங்கள்.

வறுமையின் கொடுமையால் தன் குழந்தைகளையே கிணற்றில் தள்ளிக் கொல்லும் நல்லதங்காள்தான் தமிழகத்தின் முதல் வெள்ளித்திரை வடிவம். 1910-ம் ஆண்டுகளில் நாடகங்களில் பிரபலமடைந்து மக்களின் உணர்வுகளில் ஒன்றிப்போன இவள், திரையில் ஊமையாய்த் தோன்றினாள். 1935-ம் ஆண்டில் மீண்டும் இவள் இரண்டுமுறை வந்துபோனாள். துலாபாரம் (1969) படத்திலும் இவள்தான் நவீன அவதாரம் எடுத்தாள்.

வறுமையிலிருந்து ஏதாவது ஒரு வழியில் விடுபட முயன்ற படங்கள் பல உண்டு. இதற்கு கண்ணியமான- அதேநேரத்தில் சுலபமான தீர்வு ஒன்று உண்டு. இது சமுதாயத்தாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வு. அதுதான் வயோதிபனுக்கு இரண்டாம் தாரமாகவோ மூன்றாம் தாரமாகவோ வாழ்க்கைப்படுவது பெண்ணின் ஆன்மாவையும், அவளது உணர்வுகளையும் கசக்கிப் பிழியும் கொடூரமான தீர்வு இது!

வறுமையிலிருந்தும், வேலையின்மையிலிருந்தும் சுலபமாக விடுபடுவதற்கும் பெண்டாட்டிக்கு குறுக்குவழி ஒன்று உண்டு. அது தன்னையே மூலதனமாக ஆக்கிக்கொள்வது ஆகும். இதிலும்கூட இரண்டுவகை உண்டு.

1. வெறும் ஆடல் பாடல் போன்ற கலையோடு நிற்பது.
2. வேசித்தனத்திலும், விபச்சாரத்திலும் ஈடுபட்டு தன் உடலையே சிதைத்துக்கொள்வது.

படங்களில் நாயகனோ, நாயகியோ பணக்கார வீட்டிற்கு வாழ்க்கைப்படுவார்கள்.

வறுமையிலிருந்து விடுபடுவதற்கு கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபடக்கூடிய பாத்திரங்களுடன் சில படங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் இப்படங்களின் கதாநாயகர்கள் கொலை, கற்பழிப்புப் போன்ற செயல்களில் ஈடுபடமாட்டார்கள். திருடுவார்கள், கொள்ளையடிப்பார்கள். ஆனால் மனித நேயத்தோடும், காருண்ய உள்ளத்தோடும் இருப்பார்கள். எம்ஜிஆரின் கணிசமான படங்கள் இந்த ரகமானதுதான். மணிரத்தினத்தின் 'நாயகன்' 'தளபதி' (1991) போன்றவையும் இந்த வகையானதுதான். இப்பிரச்சினைக்கு டைரக்டர் சிறீதர் ஒரு வித்தியாசமான வழி காட்டினார்.

குடும்ப பாரங்களை சுமக்க முடியாமல் தத்தளிக்கும் கதாநாயகனை (ஜெமினிகணேஷ்) மாதாகோயிலில் தள்ளி வெள்ளை அங்கியை மாட்டி பாதிரியாக்கி விடுகிறார் (சுமைதாங்கி) (1962) சில வருடங்களுக்குப் பிறகு சுமலதாவும் இதே வழியைப் பின்பற்றி கன்னியாஸ்திரியாகி விடுகிறார். (திசைமாறிய பறவைகள்) (1979)

வெள்ளித்திரையில் மிகவும் சர்ச்சைக்குரிய முறையில் சித்தரிக்கப்பட்டு வரும் விடயம் வேலையின்மைப் பிரச்சினைதான். இந்த விஷயத்தை அதற்குரிய முக்கியத்துவத்தோடும், இயன்றவரை யதார்த்தத்தோடும், ஓரளவு சமூக ரீதியான கண்ணோட்டத்தோடும் இதுவரை தமிழில் எந்தப் படமாகிலும் வந்திருக்கிறதா?

வேலையின்மைப் பிரச்சினையால் இளைஞர்கள் எத்தகைய நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட சில படங்கள் வந்திருக்கின்றன.

வறுமையையும், வேலையின்மையையும் ஓரளவு யதார்த்தத்தோடும், சமூகக் கண்ணோட்டத்தோடும் சித்தரித்த படங்கள் தமிழிலும் சில உண்டு என்று ஆறதல் அடையலாம்.

சுவர் இல்லாத சித்திரங்கள், (1979) அந்த 7 நாட்கள் (1981) ஆகிய இரண்டு படங்களிலும் இயக்குநர் பாக்கியராஜ் வேலையின்மை பிரச்சினையை நல்ல முறையி



லேயே சித்தரித்திருக்கிறார்.

மௌலி கூட இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் கையாண்டிருக்கிறார். வழக்கம் போல் டைரக்டர் கே.பாலசந்தர் தான் இந்தப் பிரச்சினைகளை அதிகமான படங்களில் கையாண்டிருக்கிறார்.

எதிர்நீச்சலில் மாடிவீட்டு மாதுவாகவும், 'புன்னகை'யில் காற்றாடியைப்போல் அலையும் இளைஞனாக வரும் நாகேஷ், அரங்கேற்றத்தில் விலைமாதுவாக வரும் பிரமீளா, அபூர்வ ராகங்களில் தீவிரவாதியாக மாறும் கமல், தப்புத் தாளங்களில் விபச்சாரியாக மாறும் சரிதா, சமூக ரௌடியாக மாறும் ரஜினி காந்த், மனதில் உறுதி வேண்டும் படத்தில் முதலாளிக்கு வைப்பாட்டியாக வாழும் சுஹாசினியின் தோழி போன்றோர் வேலையின்மையாலும், வறுமையாலும் திசைமாறியவர்களே!

முழுக்க முழுக்க வேலையின்மைப் பிரச்சினையை வைத்து கே. பாலசந்தர், பாரதிராஜா, இராம, நாராயணன் ஆகியோர் முறையே வறுமையின் நிறம் சிவப்பு, (1980), நிழல்கள், (1980) பட்டம் பறக்கட்டும் (1981) என்ற படங்களை உருவாக்கினர்.

இன்றைய கல்வி



முறையையும், பட்டம் பதவிகளையும் எள்ளி நகைப்பதாகவே இப் படத்தின் முடிவு அமைந்திருப்பது உண்மைதான். ஆனால் அதேநேரத்தில் வேலையின்மை பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அரசின் பொறுப் பல்லவா? அதற்கு அரசியல், பொருளாதார காரணிகள் உண்டல்லவா? ஆனால் இந்த உண்மையே கே.பி. இப் படத்தில் ஓரம் கட்டிவிட்டார்! அரசையும், அதன் பிரம்மாக்களான அரசியல்வாதிகளையும், அவர்களுக்கு படியளக்கும் பெருச்சாளிகளையும் தப்பவிட்டுவிட்டார்!

வேலையின்மையின் விளைவுகள் என்று சொல்லிக்கொண்டு வழக்கம்போல் .காதலையே மையமாக வைத்து, நிழல்கள் படத்தில் எவ்வளவு குளம்ப முடியுமோ, அவ்வளவு குளம்பி, குளப்பிவிட்டார் பாரதிராஜா.

மேற்கண்ட இரண்டு பிரச்சினைகளைப் பற்றி இதுவரை வந்துள்ள எண்ணற்ற படங்களில் இரண்டு படங்கள்தான் ஓரளவு நிறைவைத் தந்துள்ளன என்று சொல்லாம்.

வறுமையைப் பொறுத்தவரையில் மனம் தளராமல், தற்கொலை செய்து கொள்ளாமல், கொலை, கொள்ளை,திருட்டு போன்ற சமூகக்குற்றங்களில் ஈடுபடாமல், விபசாரியாகவோ வைப்பாட்டியாகவோ மாறாமல், வாழ்க்கையை வெறுத்து சாமியாராகப் போகாமல்-உறுதியோடு நின்று எதிர்த்துப் போராடி இறுதியில் வெற்றியும் பெற்ற கதாபாத்திரம் கொண்ட படம் ஒன்று உண்டு. அது, கே. பாலசந்தரின் 'நிழல் நிஜமாகிறது!' (1978) உறுதியையும், விடாமுயற்சியையும் இப்படம் உணர்த்துகிறது.

வேலையின்மைப் பிரச்சினையைப் பொறுத்தவரை இராம நாராயணனின் 'பட்டம் பறக்கட்டும்' (1981) பாராட்டுக்குரிய ஒரு படமே.

பக்குவமற்ற-கலையம்சம் குறைந்த கரடுமுரடான தன்மைகொண்ட (Immatured, Crude and Raw) பிரச்சார வாடை ஓங்கி நிற்கும் படமாக இது பிரதிபலித்தது என்பது ஒப்புக் கொள்ளவேண்டிய உண்மையாகும். ஆனால் வேலை கிடைக்காததற்கு நாம் படித்த பட்டமா காரணம்? பட்டம் என்ன செய்யும்? பட்டம் தந்த பல்கலைக் கழகமும், அந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கிய பாடத்திட்டமும், அந்தப் பாடத்திட்டத்தை திட்டமிட்டு அங்கீகரித்த அரசாங்கமும், அந்த அரசாங்கம் உருவாக்குவதற்கு அடிப்படையாகத் திகழும் இன்றைய வாழ்வு முறையும்தானே உண்மையான காரணிகள்?

இந்தக் காரணிகள் மீது கோபமும், அவற்றை அகற்றுவதற்கான பக்குவ சிந்தனையும், தான் மட்டும் தனித்து நின்று எதிர்க்காமல் சமுதாயம் முழுவதையும் ஈடுபடுத்தக்கூடிய ஆற்றலையும் கொண்ட இளைஞர்கள் தான் புதிய வரலாற்றைப் படைக்கப் போகிறார்கள். அத்தகைய இளைஞர்கள் தமிழ்த் திரையில் எப்போது தோன்றுவார்கள்?

காத்திருப்போம்-காலம் மாறும்!

*டி.எஸ்.ரவீந்திரதாசின் கட்டுரையிலிருந்து...*

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி கஜனி ஞானராசா, செல்வன் ஈஸ்வர ஆனந்தன் அரிகரன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# கவிதை முற்றம்

## அறிவை நோக்கிய பாதை

வெள்ளைச் சீருடையுடன்
ஒரு மிகவும் நேர்த்தியான
கழுத்தணி அணிந்து
எந்நாளும் மறவாத
நீலநிறத் தோள் பையோடு
அழகான மரங்களினூடே
சின்னஞ் சிறுமி சிரித்த முகத்தோடு
பள்ளிக்கூடம் போகிறாள்.

கற்கள், மணல் நிறைந்த
மழையினால் சேறாக்கப்பட்ட
கோணலான நடைபாதைகள்
அவளின் புன்சிரிப்பை
தடுத்துவிடவில்லை.
ஆனால்...
இவற்றையெல்லாம் விட
அவள் திரும்ப வரும்பொழுது
அறிவானவற்றை ஆர்வமுடன்
அறிந்து வருகிறாள்.

ஜோயல் ருக்மா ரெஜினால்ட்
வயது 10–பிரான்ஸ்.

# குட்டிக்கதை படிப்போம்

## 'ஆ.. ஐயோ !'

முன்னொரு காலத்தில் மிகப் பெரிய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கஞ்சன். வேலையாட்களை வருத்தி வேலை வாங்குவான்; ஆனால் சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றுவான். இரக்கம் என்றால் என்ன என்பதே அவனுக்குத் தெரியாது.

மாதம் தொடக்கத்தில் வேலையாளை அமர்த்துவான். பெரிய தொகையைச் சம்பளமாகக் கொடுப்பதாகச் சொல்லுவான். வேலையாள் மகிழ்ச்சியாக வேலையில் சேருவான்; மாத இறுதி வரை கடுமையாக உழைப்பான்.

மாதக் கடைசி நாளன்று செல்வன் வேலையாளை அழைத்துக் கொஞ்சம் பணம் கொடுப்பான்.

கடைக்குப் போய் 'ஆ.. ஐயோ' வாங்கி வா; வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கிடைக்காது' என்பான் அவன்.

பணியாள் கடைத் தெருவுக்குச் சென்று எல்லாக் கடைகளிலும் விசாரித்து அவை கிடைக்காமல் திரும்பிவருவான். செல்வன் அவனுக்குச் சம்பளம் கொடுக்காமல் அனுப்புவான், எந்த வேலையாளும் அந்தக் கருமியிடம் சம்பளம் வாங்கியதே இல்லை.

இந்தச் செய்தியை அறிந்த ஒரு புத்திசாலி ஒரு நாள் கருமியிடம் சென்றான். அவன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலையில் அமர்ந்தான். நாட்கள் சென்றன. மாதத்தின் கடைசி நாள் வந்தது.

பணியாளை கருமி அழைத்தான். சிறு தொகையைக் கொடுத்தான்.

'கடைக்குப்போய் 'ஆ.. ஐயோ' வாங்கி வா! வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கொடுக்க மாட்டேன்' என்றான்.

'சரி ஐயா! வாங்கிவருகிறேன்; அவை விலையேறிவிட்டன. அதிக பணம் கொடுங்கள்' என்றான்.

கருமிக்கு ஒன்றும் புரியவில்லை. எப்படி அவற்றை வாங்க முடியும் என்று நினைத்தான். அவன் கேட்ட தொகையைக் கொடுத்தான். அவன் பணத்தோடு திரும்பி வரப்போகிறான் என்ற நம்பிக்கையோடு இருந்தான்.

வேலைக்காரன் கடைத்தெருவுக்குப்போய் இரண்டு சாடிகள் வாங்கினான்; ஒரு சாடியில் ஒரு பூரானையும் மற்றொன்றில் ஒரு தேளையும் போட்டுக்கொண்டு திரும்பி வந்தான்.

'ஐயா! இதோ நீங்கள் கேட்ட 'ஆ.. ஐயோ' என்று கூறிக்கொடுத்தான்.

கருமி ஆச்சரியத்துடன் ஒரு சாடியை வாங்கினான்.

'ஐயா, இதில் 'ஆ' இருக்கிறது' என்றான் பணியாள்.

அதில் என்னதான் இருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் கருமி அதனுள் கையைவிட்டான். தேள் கொட்டியது. வலி பொறுக்க முடியாமல் 'ஆ' என்று கத்தினான் கருமி.

'பார்த்தீர்களா ஐயா! அதுதான் 'ஆ' இதைப் பாருங்கள் இதில் 'ஐயோ' உள்ளது' என்றான் வேலையாள்.

'வேண்டாம் வேண்டாம்' என்று கத்தினான் கருமி.

வேலையாள் தன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு தன் வீடு திரும்பினான். கருமி மனம் திருந்தி நல்லவனானான்.

*- ஆபிரிக்கக் கதையின் தமிழாக்கம்*

# அறிவியல் முற்றம்

### சொற்சிதறல் எண் - 51

பிள்ளைகளே!
சொற்களைக் கண்டுபிடிக்க முயன்று பாருங்கள்.
முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | X 3 | 4 | 5 |
| X 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | X 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | X 24 | 25 |

**இடமிருந்து வலம்**

1. 1–2 பாதை என்றும் சொல்லலாம்.
2. 7–10 மனிதன் உயிர்வாழ இது அத்தியாவசியமானது.
3. 13–15 செல்வத்தைக் குறிக்கும். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
4. 16–20 சூரியனுக்கு இன்னொரு பெயர். இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.
5. 21–23 உறுதி என்றும் சொல்லலாம்.

**மேலிருந்து கீழ்**


6. 2–7 கடலைக் குறிக்கும் சொல். இங்கு கீழிருந்து மேலாக உள்ளது.
7. 11–21 தமிழீழ நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி போர்க்களத்தில் முதல் வீரமரணம் அடைந்த பெண் போராளி.
8. 8–23 காட்டைக் குறிக்கும் சொல்.
9. 4–19 எல்லையைக் குறிக்கும். வயல் வெளிகளையும் இதனைக் கட்டிப் பிரிப்பார்கள். [இங்கு எழுத்துக்கள் குழம்பியுள்ளது.]

**சொற்சிதறல் எண் ஐம்பதின் விடைகள்**


| | | | | |
|---|---|---|---|---|
| பூ | மி | ■ | பா | லை |
| க | ன் | று | ■ | வோ |
| ம் | மா | ய | ■ | கா |
| ப | ற் | ப | சை | ■ |
| ம் | றி | ■ | வ | ரி |

# சித்திரப் புதிர் முற்றம்

**பிள்ளைகளே!**
கீழே உள்ள நான்கு படவரிசைகளில் ஒவ்வொரு வரிசையிலும் ஒரு படம் ஏனைய மூன்று படங்களுடனும் பொருத்தமற்றுக் காணப்படுகிறது. அப்படம் எது? ஏன்? விடையைக் கண்டுபிடியுங்கள். முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.




# கண்டுபிடியுங்கள்




இங்குள்ள எண்களுள் ஓர் எண் மட்டும், மற்ற எண்களிலிருந்து வித்தியாசப்பட்டுள்ளது. அந்த எண் எது? எப்படி? முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

### கடந்தவார விடை

A அடுக்கில் உள்ள எண்களும், B அடுக்கில் உள்ள எண்களும், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் இடமிருந்து வலமாகவே உள்ளன. ஆனால் B அடுக்கின் மூன்றாவது வரிசையில் உள்ள 10,11,12 என்ற எண்கள் மட்டும் இடமிருந்து வலமாக இருப்பதற்குப் பதில் வலமிருந்து இடமாக இருக்கின்றன. இந்த வரிசையும், இதிலுள்ள எண்களும்தான் தவறு.



# வரலாறு தொடரும்...

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்து பாதையான கிளாலிப்பாதையை மூடிவிடும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட 'யாழ்தேவி' நடவடிக்கையில் பெரும் இழப்பை சந்தித்த சில நாட்களிலேயே மண்கிண்டிமலையில் அதனைவிட பெரும் இழப்பொன்றை சந்திப்போம் என்பதை சிங்களப்



படை எண்ணியிருந்திராது. ஆனால் புலிகளின் வீரஞ்செறிந்த தாக்குதலால் ஏராளமான படையினரை இழந்து, ஐந்து கோடிக்கு மேற்பட்ட ஆயுதங்களையும் புலிகளிடம் பறிகொடுத்தது மட்டுமல்ல பெறுமதிவாய்ந்த தொலைத்தொடர்பு கருவிகளையும் புலிகளிடம் இழந்தது. இதேவேளை சிங்களப் படையால் குடியேற்றப்பட்டு தாக்குதல் நடந்தபோது பாதுகாப்பு தேடி முகாமினுள் தஞ்சமடைந்திருந்த ஏழு சிங்கள குடியேற்றவாசிகள் புலிகளிடம் சரணடைந்திருந்தனர். தலைவரின் உத்தரவின் பேரில் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் சொந்த பிரதேசங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ் இதயபூமி ஒன்றின் வெற்றிக்கு உறுதியோடு போராடிய லெப்.திருமலைநம்பி- பெர்னாண்டோ (வரப்பிரகாசம் யுகதீபன் - கொழும்புத்துறை யாழ்.), லெப். நக்கீரன் - செந்தூரன் (சோமசுந்தரம் அரசரத்தினம்- பழுகாமம் மட்டு.), லெப்.காந்தி- அழகப்பன் (கதிரிப்பிள்ளை யோதிகாவலன்- ஏழாலை கிழக்கு யாழ்.), லெப்.விமலன் - வில்லவன் (கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி- தோப்பூர் மூதூர்), 2ம் லெப்.புகழரசன் (சின்னத்துரை கோணேஸ்வரன் - காரைநகர் யாழ்.), லெப். ஈழவேந்தன் (கந்தசாமி விமலேந்திரன் - கனகராயன்குளம் வவுனியா), லெப்.குயிலன் (சிவப்பிரகாசம் சாந்தகுமார் - மூளாய் தெற்கு யாழ்.), லெப். வாசன் (செல்லையா தேவா- யூனியன் வீதி மட்டு.), லெப். விக்ரம் (வைத்தியலிங்கம் தயானந்தன் - வட்டக்கச்சி கிளிநொச்சி), 2ம் லெப்சியாமணி (யோகச்சந்திரன் ரவிசங்கர் - சாந்திபுரம் சந்தி முல்லைத்தீவு) ஆகிய பத்துப் போராளிகள் வீரச்சாவைத் தழுவி இதயபூமி-1இன் வரலாறானார்கள்.

* * *

### லெப். கேணல் அன்பு வீரச்சாவு

இத்தாக்குதலை முன்நின்று வழிநடாத்திய மணலாற்றின் சிறப்புத்தளபதி லெப்.கேணல் அன்பு (பொன்னம்பலம் சரவணபவன்- பூநகரி) மண்கிண்டிமலை தாக்குதல் முடிவுற்று மூன்று மாதங்களின் பின்னர் (1993 கார்த்திகை) விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட பெரும் ஈரூடகத் தாக்குதலான பூநகரித் தளத்தின் மீதான 'தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கையில் அதனது வெற்றியின் இறுதிவரை நின்று போராடி, தன் சொந்த மண்ணினை ஆக்கிரமித்திருந்த படையினரை அழித்துவிட்ட



லெப். கேணல் அன்பு

பெருமையுடன் வீரச்சாவை தழுவிக்கொண்டார். அவரது விழிகள் மூடிக்கொண்டாலும் அவரால் உருவாக்கப்பட்ட துணைப்படை இன்று விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் எங்கும் பெரும் மக்கள் போர் அணியாக வளர்ச்சிபெற்று தமிழீழத்தின் காவலர்களாக வளர்ச்சி பெற்றுள்ளனர். 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்று லெப்.கேணல் திலீபன் கூறிய வார்த்தைகள் இன்று நிதர்சனமாகிக்கொண்டு வருவதற்கு அன்று மக்கள் துணைப் படையொன்றை உருவாக்கி அதனை வளர்த்தெடுக்க முன்நின்று உழைத்த லெப்.கேணல் அன்புவே காரணம்.

'மணலாறு ஒரு வீரவரலாறு' எனும் இவ் வரலாற்றுத் தொடர் இத்துடன் நிறைவு பெறுகின்றது. இது ஒரு தற்காலிக நிறைவு மட்டுமே. ஏனெனில் தமிழீழம் விடுவிக்கப்படும் வரை மணலாற்றில், மட்டுமல்ல தமிழீழம் எங்கும் புலிகளின் வீரம்செறிந்த வரலாறு தொடர்ந்துகொண்டே இருக்கும். இதயபூமி-2, இதயபூமி-3 என மணலாற்றிலும் அவை தொடரவே செய்யும்.

எஸ்.தீரன்

## மணலாறு






லெப். திருமலைநம்பி




லெப். நக்கீரன்



லெப். காந்தி



லெப். விக்ரம்



லெப். வில்லவன்



2ம் லெப். சியாமணி



லெப். ஈழவேந்தன்



லெப். வாசன்



லெப். குயிலன்



லெப். புகழரசன்

**நன்றி:**

- வணங்காமண்
- வீரவேங்கை
- விடுதலைப்புலிகள்
- எரிமலை
- ஒளிவீச்சு
- இதயபூமி-1
- மற்றும் போராளிகளின் நாட்குறிப்புகள்

**குறிப்பு:**

கடந்த 38 வாரங்களாக ஈழமுரசில் வெளிவந்த இம் 'மணலாறு ஒரு வீரவரலாறு' தொடர்பான உங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள். இதில் பல்வேறு சம்பவங்கள், வீரச்சாவடைந்த போராளிகளின் விபரங்கள் ஆதாரங்களுடன் கூடிய உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெறாமையால் பதிவுசெய்ய முடியாமல் போய்விட்டன. இத் தொடரில் இடம்பெறாமல் விடுபட்டுள்ள சம்பவங்கள் பற்றி உங்களுக்கு தெரிந்தால் அவற்றை எமக்கு எழுதி அனுப்பி வைக்கலாம்.

நீங்கள் எழுதும் விபரம்பற்றி ஆராய்ந்து அவை சரியென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவற்றை இத் தொடர், நூலுருவாக வெளிவரும்போது இணைக்க வாய்ப்பாக இருக்கும்.

### மணலாற்றில் 1990ற்கு பின்னர் இருந்த சிறீலங்கா இராணுவ முகாங்கள் (சிங்களம் சூட்டிய பெயர்களில்)

1- வெலி ஓயா தலைமை முகாம்
2- வெலி ஓயா உபமுகாம்
3- முந்திரிக்குளம் முகாம்
4- ஜாணகபுர [மண்கிண்டிமலை]
5- கோட்டைக்கேணி முகாம்
6- கொக்குத்தொடுவாய் முகாம்
7- தென்னமரவாடி முகாம்
8- சிங்கபுர முகாம்
9- கஜபாபுர முகாம்[சிலோன் தியேட்டர் பாம்]
10- 10ம் கட்டை [புல்மோட்டை அநுராதபுரம் வீதியில்]
11- 13ம் கட்டை [புல்மோட்டை அநுராதபுரம் வீதியில்]
12- கெம்பிலிய்ாவெவ முகாம்
13- கொன்வேவ [நெடுங்கேணிப் பகுதியில்]

#### மினி முகாங்கள்

1- கென்ற் பாம்
2- சாம்பன்குளம்
3- துவரன்குளம்
4- கும்பகர்ணன் மலை




# சமத்துவ அர்ச்சனை!

பொதுவாக இந்து சமயத்தில் பெண்களை இறைவனுக்கு அருகில் தீண்டத் தகாதவர்களாகவே பார்க்கப்படுகிறது. அதாவது கோயிலில் வந்து வழிபாடு செய்ய மட்டுமே இவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் கோயிலின் உட்பகுதிக்குச் செல்லவோ மற்றும் வேதங்களை உச்சரிக்கவோ உரிமை இல்லை. ஆனால் இந்தியாவிலுள்ள திருஈங்கோய்மலை என்னும் கிராமத்தில் பெண்களால் நடாத்தப்படும் ஒரு ஆலயம் இக் கட்டுப்பாடுகள் யாவும் அற்றதாக முற்றுமுழுதாக பெண் அர்ச்சகர்களாலேயே வழி நடத்திச் செல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, இக்கோயிலை வழிநடாத்துபவர்கள் தனியே ஆன்மீகப் பணிகளுக்கு மட்டுமல்லாது அதையும்தாண்டி வெளியே தம்மைச் சூழவுள்ள பெண்களின் நல்வாழ்விற்கும் ஆதரவளித்துவருகிறார்கள். அதாவது இந்த திருஈங்கோய்மலை கோயிலில் கிட்டத்தட்ட இருபது பெண் அர்ச்சகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்களல்லர். ஆனால் சந்நியாசத்தில் தியாகினி, சந்நியாசினி என்ற இரண்டு கட்டங்களையும் கடந்து இறுதி நிலையான யோகினி நிலையில் காணப்படுகிறார்கள்.

இவர்களால் நடாத்தப்படும் இக் கோயிலுக்கு பெண் அர்ச்சகர்கள் மட்டுமே கர்ப்பக்கிரகம் வரை சென்று பூஜை செய்கிறார்கள். ஆண்களுக்கு அனுமதி இல்லை. சமீபத்தில் சங்கராச்சாரியார் வந்தபோதும்கூட மூலஸ்தானத்திற்கு வெளியில் நின்றுதான் சுவாமி தரிசனம் செய்துள்ளார். இவ்வாறு தனியே ஆன்மீகத்துறையில் மட்டும் தம்மை அர்ப்பணிக்கவில்லை இப் பெண்கள். இதைவிட தம் அருகில் உள்ள கிராமப் பெண்கள் பலருக்கும் கல்வியறிவு மற்றும் வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கான கடனுதவி மற்றும் பெண் குழந்தைகளுக்கான பாடசாலை வசதிகள் ஊனமுற்றவர்களுக்கான தங்கும் இட வசதிகள் போன்றவற்றையும் உருவாக்கி வழிநடாத்தி வருகிறார்கள். இவர்களால் நடாத்தி வரப்படும் இக்கோயில் 50 வருடத்தைப் பூர்த்திசெய்துவிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





# ரஷ்யாவைத் தோற்கடித்த அமெரிக்க வீராங்கனைகள்

அமெரிக்காவில் நடைபெற்ற 'பெடரேசன்' கோப்பை ரென்னிஸ் போட்டியில் ரஷ்ய அணியைப் பலமாகத் தோற்கடித்து, பாரிய வெற்றியைச் சம்பாதித்துள்ளார்கள் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனைகள். அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள பாலோ அல்டோ நகரிலேயே இப் போட்டிகள் நடைபெற்றிருந்தன. தற்போது கிடைத்த வெற்றியோடு 16-வது தடவையாக இவ் வெற்றிக்கிண்ணத்தை அமெரிக்கா பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இவர்கள் வெற்றி பெறக்காரணம் பலமான முன்னணி வீராங்கனைகளைக் கொண்ட ரென்னிஸ் குழு இப் போட்டியில் பங்கு பற்றியதுதான் என்கிறார்கள், ரென்னிஸ் ரசிகர்கள். ஆனால் அதுவும் மறுப்பதற்கில்லை. ஏனெனில் அமெரிக்க தரப்பு ரென்னிஸ் குழுவில், உலகதர வரிசையில் 2-ம் நிலையிலுள்ள லின்-ட்சே டேவன்போர்ட் மற்றும் 3-ம் 4-ம் நிலை வீராங்கனைகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் மற்றும் 5-ம்நிலை வீராங்கனை மோனிகா செலஸ் ஆகியோரும் இடம்பெற்றிருந்தது இங்கு முக்கியமானதே.



இவ்வெற்றியைப் பற்றி டேவன்போர்ட் குறிப்பிடுகையில் எம் தாய் நாட்டுக்காக விளையாடி வென்றது ஒரு மகிழ்ச்சி என்றால் ரஷ்யாவைத் தோற்கடித்தது இரட்டிப்பு மகிழ்ச்சி என்று கூறுகிறார்கள். இவ் அமெரிக்கக் கூட்டணி ரஷ்ய வீராங்கனைகளை 4:1 என்ற அடிப்படையில் வென்றுள்ளது.

# பெண் மகவுகளின் பிறப்பு வீதம் வீழும்?

-ஜேர்மனைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர் லெர்ச்சி வெளியிட்டுள்ள குழந்தைகள் பிறப்புப் பற்றிய ஒரு அறிக்கை, பெண்கள் சமூகத்தையும் மற்றும் பெண் குழந்தைகளை விரும்பும் பெற்றோருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. காரணம் இவர் கடந்த 50 ஆண்டுகள் நடத்திய ஆராய்ச்சிகளின்படி இனிவரும் சில ஆண்டுகளிற்கு ஆண்குழந்தைகளின் பிறப்பே அதிகமாக இருக்குமென்பதே அவ்வறிக்கை. அதாவது ஜேர்மன் மியூன்ஸ்டார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இவ் ஆராய்ச்சியாளர் தான் 1945—1995 வரை பிறந்த குழந்தைகளையும் அவர்கள் பிறந்த காலநிலை வேறுபாடுகள் ஆராய்ச்சி ஒன்றையும் நடாத்தியுள்ளாராம்.

அதன்படி பூமியின் தட்ப வெட்பம் கூடிய காலத்தில் பெண்குழந்தைகள் பிறப்புக் குறைவாக7 இருந்துள்ளதாம். எனவே இனிவரும் கொஞ்சக் காலப்பகுதி பூமியின் தட்ப வெப்பம் அதிகரித்ததாக இருக்குமென்பதால், இக்காலத்தில் பெண்குழந்தைகள் பிறப்பும் மிகக் குறைவாகவே இருக்கும் என்கிறார் லெர்ச்சி.

ஆக இந்த ஆராய்ச்சியாளரின் அறிக்கை எவ்வளவு சரியானது என்பதை இனிவரும் காலம்தான் கண்டுசொல்லும்.

# பர்தா அணிந்தாலும்...

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களிற்குப் பலமான கட்டுப்பாடுகள் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அண்மையில் ஈரான் தன் நாட்டில் கொண்டாடிய இராணுவ தினத்தில், பர்தா அணிந்த பெண்கள் இராணுவம், ஆயுதமேந்தி அணிவகுத்த காட்சி பல முஸ்லிம் பெண்களிற்கும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

அதாவது அமெரிக்க வல்லரசு ஈரான் மீது தொடுக்கும் இராணுவ தாக்குதல்களை முறியடிக்கவே இன்று ஈரானில் பெண் இராணுவமும் பலமாக வரவேற்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் நாட்டை அமெரிக்காவிடமிருந்து காப்பாற்றுவது மட்டுமல்ல, தம் இனப் பெண்கள் சமூகத்திலுள்ள அடிமைத் தனங்களிற்கு எதிராகவும் இவர்களது வீரம் பாலமாக அமையுமா?

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்
யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Thomas Mann Str 21,53111 Bonn
உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.
தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985
GE-Pub.




# செச்சினியாவைக் கைப்பற்ற ரஷ்யா தயார்?



செச்சினியாவில் என்ன நடக்கிறது? ரஷ்யப் படைகள் செச்சினியாவிற்குள் பல முனைகளினூடாகவும் நுழைந்து தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றன. செச்சினியாவை ரஷ்யா கைப்பற்றப் போகின்றதா? கடந்த சில வாரங்களாக செச்சினியாவில் ஏற்பட்டுவரும் ரஷ்ய நகர்வுகள் அப்படியானதோர் தோற்றப்பாட்டினைத்தான் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் ரஷ்யப் பாதுகாப்புத் தளபதிகளோ தாம் ரஷ்யாவைப் பாதுகாக்கும் வகையிலான பாதுகாப்பு வலையமொன்றினை அமைப்பதுவே தமது நோக்கம் என்கிறார்கள். ஆனால் ரஷ்யப் பிரதமர் விளாது மீர் புற்ரீன் தமது படைகள் தேவை ஏற்படும் பட்சத்தில் செச்சினியத் தலைநகர் குறோஸ்னியைக்கூட கைப்பற்றும் என்றுள்ளார். இதற்கிடையே செச்சினிய அதிபர் அஸ்லான் மஸ்காடோவ் செச்சினியாவின் மீது ரஷ்யா நடாத்தும் தாக்குதல்களை நிறுத்தி அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்குமானால் தாம் தமது பிராந்தியத்தில் செயற்பட்டுவரும் ஆயுதக் குழுக்களை வெளியேற்றுவதாகக் கூறினார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் ரஷ்யப் பிரதமர் முதலில் ரஷ்யாவில் குண்டுத்தாக்குதல்களை நடாத்தி 293 பேரின் மரணத்திற்குக் காரணமானவர்களை ரஷ்யாவிடம் ஒப்படைத்தால் தாம் தாக்குதல்களை நிறுத்தத்தயார் என்றார். இருபக்க பேச்சுக்களும் சாத்தியமற்றவையே. காரணம் செச்சினியாவில் மஸ்காடோவின் அரசிற்கு பெரிதாகக் கூறக்கூடிய அளவிற்குப் பலமில்லை. அங்கு பலதரப்பட்ட சமூக அமைப்புக்களின் சட்டவிரோதக் குழுக்களும் இஸ்லாமிய ஆயுத அமைப்புக்களும்தான் அதிகாரத்தைக் கைக்குள் வைத்துள்ளன. ஆக மஸ்காடோவ் அதிகாரமிழந்த ஓர் அதிபராகவே அங்குள்ளார்.



அதேபோன்றுதான் ரஷ்யாவின் நிலைப்பாடும். கவ்க்காஸ் பிராந்தியத்தில் வலுப்பெற்றுவரும் இஸ்லாமியவாதத்தையும் ரஷ்ய எதிர்ப்பு வாதத்தையும் அழிப்பதும், செச்சினியக்குடியரசில் தனது கட்டுப்பாட்டைத் தோற்றுவிப்பதுமே ரஷ்யாவின் நிலைப்பாடாக உள்ளது. தெற்கு லெபனானில் இஸ்ரேல் அமைத்துள்ளதுபோன்று செச்சினியாவின் தெற்கு எல்லையில் பாதுகாப்பு வலையமொன்றினை ஏற்படுத்தி இஸ்லாமிய தீவிரவாதிகளாலும், சட்டவிரோதக் குழுக்களாலும் நிகழ்த்தப்படக்கூடிய தாக்குதல்களில் இருந்து ரஷ்யாவைப் பாதுகாக்க அதன் பாதுகாப்புத் தலைவர்கள் திட்டம்தீட்டியுள்ளனர். அவர்களது திட்டம் செயற்படுத்தப்பட வேண்டுமானால் செச்சினியாவில் ஆட்சிமாற்றமும் நிலையான ஓர் அரசும் ஏற்படுத்தப்பட வேண்டும். செச்சினியாவில் இஸ்லாமியக் குழுக்களில் ஒன்றினை தலைமையேற்று நடாத்தும் ஷமீல் பசாயேவ் ரஷ்யக் கூட்டமைப்பின் மற்றுமோர் நாடான டகஸ்தானில் தீவிர இஸ்லாமிய கொள்கைகளைக்கொண்ட அரசொன்றினை ஏற்படுத்துவதற்காக ரஷ்ய ஆதரவு அரச படைகளில்மேல் தாக்குதல்களை மேற்கொண்டார். இதனையடுத்து ரஷ்யா தனது படையணிகளையும் விமானங்களையும் டகஸ்தானுக்கு அனுப்பி அங்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் மேல் தாக்குதல்களை நடாத்தியது. இதில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு ரஷ்யா வெற்றிபெற்றது. ஆனால் இதன் விளைவுகள் ரஷ்யாவின் பல பகுதிகளிலும் ஏற்பட்டன. அதி சக்திவாய்ந்த மூன்று குண்டுவெடிப்புக்கள் அங்கு ஏற்பட்டதில் 293 பேர் கொல்லப்பட 500 இற்கும் அதிகமானோர் காயப்பட்டனர். இச் சம்பவங்களுக்குச் செச்சினியாவில் இயங்கும் ஷமீல் பசாயேவின் குழுவினரே காரணம் என ரஷ்ய உளவுத்துறையினர் கண்டுபிடித்தனர். குறிப்பாக ஷமீல் பசாயேவின் ஜோர்தானிய உதவியாளர்தான் இக் குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரியென ரஷ்யா தரப்பில் கூறப்பட்டது. இக் குண்டுவெடிப்புக்கள் ரஷ்யப் பாராளுமன்றத்தில் அரசின்மேல் கடும் கண்டனங்களை ஏற்படுத்தின. அரசு செச்சினியாவின் மேல் இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் வாதிட்டனர். அதேவேளை புதிதாக நியமனம் பெற்ற பிரதமரும் தனது பதவியை ஸ்திரப்படுத்திக்கொள்ள செச்சினிய விவகாரத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டார். இதன்பின்னரேயே செச்சினியத் தாக்குதல்கள் ஆரம்பமாகின.

1991-ம் ஆண்டு சோவியத் யூனியன் முறிவடைந்து புதிய நாடுகள் உருவாகியபோது ரஷ்யக்கூட்டமைப்பிற்குள் இருந்து செச்சினியாவும் சுதந்திரநாடாக மாற விரும்பியது. ஆனால் ரஷ்யா இப் பிரிவினையை ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று தொடங்கிய முரண்பாடுகள் 94-ம் ஆண்டு யுத்தமாக வெடித்தது. செச்சினிய கெரில்லாக்களுடன் ரஷ்ய படைகள் மோதிக்கொண்டன. பல மாதங்கள் இடம்பெற்ற இந்த யுத்தத்தின் இறுதியில் இரு பகுதியிலும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டிருந்தன. 96-ம் ஆண்டில் ரஷ்யா செச்சினியாவுடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்டது. செச்சினியா சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்படாது ரஷ்யக் கூட்டமைப்பின் ஓர் பிராந்தியமாகவோ அல்லது சுயாட்சிக் குடியரசாகவோ 2001-ம் ஆண்டு வரை இயங்கும் என அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டது. இக் காலகட்டத்தில் செச்சினியாவில் வாழ்ந்துவந்த 1,20,000 பூர்வீக ரஷ்யர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இருந்தும் முறையற்ற தலைமைகளைக் கொண்டிராத ரஷ்ய இராணுவம் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிக்கொண்டது. அதன்பின் செச்சினியா ரஷ்யக் கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொண்ட ஓர் அரசு போலவே இயங்கிவந்தது. ஆனால் செச்சினியாவில் முறையான ஓர் ஆட்சிமுறை இருக்கவில்லை. பல பிராந்தியங்களிலும் பல கொள்ளைத் தலைவர்கள் அதிகாரம் செலுத்தி வந்தனர். ரஷ்யாவில் இடம்பெற்றுவந்த கொள்ளைச் சம்பவங்களிலும் கடத்தல் சம்பவங்களிலும் இவர்களது தொடர்பே பிரதானமாக இருந்ததெனச் சொல்லப்படுகிறது. செச்சினியாவில் மாத்திரம் கடந்த 3 வருடங்களில் 1200 பேர் கடத்தப்பட்டு பெரும் பணயப் பணம் செலுத்தப்பட்டதன் பின் 700 வரையானோர் விடுதலையாகியிருந்தனர். ஏனையோருக்கு என்ன நடந்தது என்பதே தெரியவில்லை. பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்திருந்த காரணத்தினால் செச்சினியாவின் 2/3 குடிமக்கள் ரஷ்யக் கூட்டமைப்பிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இந்த மக்களையும் மீண்டும் செச்சினியாவிற்குள் குடியேற்றவேண்டிய நிலையும் ரஷ்ய அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இப்படியான பல காரணங்கள் இந்த செச்சினிய தாக்குதலுக்கு காரணமாகக் கூறப்படுகிறது.

செச்சினியாவை ரஷ்யப் படைகள் ஆக்கிரமிப்பதன் மூலம் ரஷ்யாவின் பாதுகாப்பு ஓர் வகையில் உறுதி செய்யப்படலாம். ஆனால் அங்கு நிலைகொண்டுள்ள ரஷ்யப் படைகள் பெரும் இழப்புக்களைச் சந்திக்க நேரிடலாம். ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பை . இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ரஷ்யா தனது படை நடவடிக்கைகளில் முற்றுமுழுதான இராணுவ இலக்குக்களே தாக்கியழிக்கப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளது. ஆனால் அங்கு பெரும் உயிர் சேதங்களும் பொது உடமை இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன என்பதை சுதந்திரச் செய்தியூடகங்கள் வெளியிட்டுள்ளன. கொசோவோவில் யூகோஸ்லாவிய படைகளுக்கெதிராக நேட்டோ தலைமையிலான படைகள் தாக்குதல் நடத்தியதைப்போன்று ரஷ்யப் படைகளும் இலக்குத் தவறாத தாக்குதல்களைச் செச்சினிய இராணுவ அணிகளின்மேல் நடத்துவதாக அந்நாட்டின் இராணுவ தலைவர்கள் கூறியுள்ளனர். ஆனாலும் ரஷ்யாவின் செச்சினியா மீதான இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் கண்டித்துள்ளன. ஆனாலும் ரஷ்யா தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவேண்டுமென எந்த நாடுமே கோரவில்லை. ஆனால் செச்சினியத் தாக்குதலில் ரஷ்யா தேவைக்கதிகமான இராணுவ உபகரணங்களை ஈடுபடுத்தியுள்ளதாக ஐரோப்பிய நாடுகள் குற்றஞ்சுமத்தியுள்ளன. செச்சினியா மீதான இராணுவ நடவடிக்கைகளுக்காக ரஷ்யா 600 இற்கும் மேற்பட்ட் யுத்த தாங்கிகளையும், 2000 இற்கும் மேற்பட்ட கனரக வாகனங்களையும் 1000 இற்கும் அதிகமான ஆட்டிலெறிகளையும் பயன்படுத்துகின்றது. மூன்று முனைகளினூடாக ரஷ்யப் படைகள் செச்சினியாவிற்குள் நுழைந்துள்ளன. இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி ரஷ்யாவின் விசேட படையணிகள் தலைநகர் குறோஸ்னிக்கு அண்மையில் நிலைகொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் கூறுகையில் இன்று செச்சினியாவில் நாம் ஓர் ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்த விரும்புகிறோம். உண்மையான ஓர் செச்சினியப் பிரஜை செச்சினியாவை மீட்டெடுக்கவேண்டுமெனக் கோரினால் அவர்களுக்காக நாம் அதனையும் செய்யத் தயாரா்க உள்ளோம். ஆனால் எமக்கு எமது பிராந்தியம் பாதுகாப்பானதாக இருக்கவேண்டும். அதனை அடிப்படையாக வைத்தே நாம் எமது நகர்வுகளை மேற்கொண்டுவருகிறோம் என்றார்.

அன்று முறையற்ற தலைமைகளின் கீழ் ரஷ்ய படைகள் செச்சினியாவில் தோல்வியைத் தழுவிக்கொண்டன. இன்று சீர்பெற்றுவரும் புதிய தலைமையுடன் நவீன மயப்படுத்தப்பட்ட தளவாடங்களின் உதவியுடன் புதிய இராணுவ நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருவேளை செச்சினியா மீண்டும் ரஷ்யாவினால் முற்றாக கைப்பற்றப்படலாம். அங்கு ரஷ்ய ஆதரவு அரசு ஒன்றும் ஏற்படுத்தப்படலாம். ஆனால் இந்த ஆக்கிரமிப்பின் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமா என்பது கேள்விக்குறி.


**மாவீரர் நாள் கவிதைப்போட்டி 1999**

**நெதர்லாந்து**

கவிதைத் தலைப்பு: 'மரணங்கள் மலிந்துவிட்ட பூமி'

**நிபந்தனைகளும் விதிகளும்:**

★ நெதர்லாந்தில் வாழும் தமிழர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

★ கவிதைகள் 200 சொற்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

★ முதல் மூன்று இடங்களைளைப் பெறும் கவிதைகளுக்கு மாவீரர் நாளன்று பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிக்கான இறுதிநாள்: 10.11.99

கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி:

**TACO**
**Postbus 343,**
**1740 AH Schagen.**

*தமிழர் கலை பண்பாட்டுக்கழகம்-நெதர்லாந்து*

தொடர்புகளுக்கு: 0224–217181

# நோயற்ற வாழ்வே...

## முதுகுவலி

இன்று அதிகரித்துவரும் வியாதிகளின் எண்ணிக்கையில் முதலிடத்தைப் பிடித்துவருவது முதுகுவலி என்று கூறினால் அது மிகையான கூற்றல்ல.

முதுகுவலி என்பது என்ன?, அதில் எத்தனை வகையுண்டு என்ற கேள்வி உங்கள் எண்ணங்களில் உதிக்கலாம்.


முதுகுவலி என்பது புறமுதுகுப் பகுதியில் உண்டாகும் வலி. இது குறைந்த நாட்கள் இருந்தாலும் அதிக நாட்கள் இருந்தாலும் இதைப் பற்றி மிகுந்த கவனமெடுக்கவேண்டும். முதுகுவலி ஏற்பட என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து அதனை நீக்கி அல்லது சரி செய்து நிவாரணம் பெறலாம்.

முதுகுவலியின் வகைகளைப் பார்த்தோமானால்;

1. முழு முதுகுவலி
2. கீழ் முதுகுவலி
3. நடு முதுகுவலி என வகைப்படுத்தலாம். இவற்றில் கீழ் முதுகுவலிதான் எம்மில் அனைவருக்கு தொல்லைகொடுப்பதாகும். கீழ் முதுகுவலி ஏற்படின் என்ன காரணங்கள் என்பதை ஆராய்ந்தோமேயானால் அக் காரணங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அதிக தூரம் பயணம் செய்வது. அல்லது அடிக்கடி உட்கார்ந்த நிலையில் பயணம் செய்வது.
2. அதிக அளவு பாரம் தூக்குவது.
3. அதிக வேலைப்பழு
4. அளவுக்கதிகமான உடற்பயிற்சி
5. வயது முதிர்தல்
6. எலும்பின் தேய்மானம்
7. உட்காரும்முறை சரியில்லாமை
8. நடக்கும்முறை சரியில்லாதமை. கடைசியாகக் குறிப்பிட்ட காரணம்தான் பெண்கள் முதுகுவலியினால் அவதிப்படுவதற்கு பிரதானமானதாகும்.

கீழ் முதுகுவலி ஏற்படுவதற்கு எலும்பின் தேய்மானமும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றது. அதிக அளவு எலும்புகளின் உராய்வினால் இத் தேய்மானம் ஏற்படுகின்றது. உட்காரும் பழக்கம் சரியில்லாதுவிடின் இவ் வலி ஏற்பட ஏதுவாகின்றது. சிலருக்கு முதுகுத் தண்டின் பிதுக்கத்தின் காரணத்தினாலும் இவ்வலி ஏற்படுகின்றது.



### முதுகுவலியின் அறிகுறிகள்

* கீழ் முதுகுவலியில் இரு இடுப்பு எலும்புகளிலும் இணைந்து வலியுண்டாகும்.
* குனிந்து நிமிர்ந்தால் வலி ஏற்படுதல்.
* படுத்து ஓய்விலிருந்தால் வலி குறைதல். முதுகுவலி ஆரம்ப நிலையில் இருந்தால் அதாவது சாதாரணவலியானால் நாமே வீட்டில் சரிசெய்து கொள்ளலாம். ஆரம்பநிலையானால்,

1. கற்பூரத் தைல வகைசார்ந்த கோமியோபதி மருந்துகளை வலியுள்ள இடங்களில் தடவி பின்னர் இதமான வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.
2. உட்காரும் இருக்கையில் ஓர் தலையணையை வைத்து உட்காரலாம்.
3. நாற்காலியில் உட்காரும்போது எப்பொழுதும் கால்களைச் சற்று உயர்த்தி நிமிர்த்தி உட்காரவேண்டும்.
4. தரையில் உட்காரும்போது நிமிர்ந்து உட்காரவேண்டும்.
5. மெத்தையில் உறங்குவதைத் தவிர்த்துக்கொண்டு தரைவிரிப்புகளில் தடித்த துணிகளை விரித்து அதன்மேல் படுத்துறங்குவதே நல்லது.
6. மாடிப் படிகளில் ஏறுவதையும் இறங்குவதையும் கூடுமான அளவில் தவிர்க்கவேண்டும். இவ் ஆலோசனைகளெல்லாம் ஆரம்பநிலை சாதாரண முதுகுவலிகளுக்கு மட்டுமே பொருந்தும். நடு முதுகுவலியாக இருப்பின் அவசியமாக மருத்துவரை அணுகி முதுகுத் தண்டின் பிதுக்கம் உள்ளதா என உறுதிசெய்து தகுந்த சிகிச்சை எடுக்க வேண்டும்.

# மீண்டும் நாகரிகத்தின் உச்சியில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் நாடாக பிரான்சே முன்னிற்கின்றது.

பிரான்ஸ் உலகிலேயே உல்லாசப்பிரயாணிகள் விரும்புகின்ற நாடு, வெளிநாட்டவர்களது வருகை இவ்வருட இறுதிக்குள் 75 மில்லியனாக இருக்கும் என பிரெஞ்சு வெளிநாட்டுத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. இது ஒரு சாதனையாகக் கணிக்கப்படுகிறது.

தேசிய வதிவிடக் காரியதரிசி Michelle Demessme என்பவர் 1999 இல் 72 மில்லியன் மக்கள் பிரான்சில் தங்குவதற்காகப் பதிவு செய்துள்ளனர் என்றும் இவர்களில் 22 வீதமான மக்கள் லண்டனைச் சேர்ந்தவர்கள் என்றும் அதாவது வெளிநாட்டவர்கள் வருகையில் முதலாமிடத்தைப் பெறுகின்றனர் என்றும் ஜேர்மன், அமெரிக்க நாட்டவர்கள் 13 வீதம் என்றும் அறியத்தந்துள்ளார். மற்றும் கொலன்ட், ஜப்பான், இத்தாலி நாட்டவர்களும் உல்லாசப் பிரயாணிகளாக வருகின்றனர்.

ஐரோப்பிய நாட்டவர்களே அதிகமாக பிரான்சிற்கு வருகின்றனர். ஆயினும் இவ்வார்வம் ரஷ்ய மக்களில் குறைவாகவே காணப்படுகின்றது. உலக உதைபந்தாட்டப் போட்டிக்குப் பின்னரும் பிரான்ஸ் ஒரு பிரயாணிகள் மையமாகவே இருக்கின்றது.

## பலதும் பத்தும்

1998-ம் ஆண்டில் முதல் முறையாக 70 மில்லியனுக்குக் கூடுதலான பிரயாணிகள் வந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளனர். இத்துடன் 100 மில்லியன் பிரான்ஸ் மக்கள் தங்கள் நாட்டிலேயே தங்கள் விடுமுறையைக் கழிக்கின்றனர். அதாவது 1/5 பகுதி பிரெஞ்சு மக்கள் தமது நாட்டிலேயே விடுமுறையைக் கழிக்கின்றனர். வெளிநாட்டவர் வருகையினால் 750 மில்லியாட் பிராங்குகளை பிரான்ஸ் பெற்றுள்ளது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கைப் பெறுகின்றது. இதன் காரணமாய் 423 மில்லியன் பிராங்குகளை (அதாவது 13.8%) உல்லாசப் பிரயாண விளம்பரத்திற்காக வெளிநாடுகளில் செலவளிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

Demessme இன் கூற்றுப்படி வடபிரெஞ்சில் இருக்கும் Rouan என்னுமிடத்திற்கு மட்டும் இவ்வருட கோடை காலத்தில் 10 மில்லியன் உல்லாசப்பிரயாணிகள் சென்றுள்ளனர். ஆயினும் வட பகுதி கிழக்குப் பகுதிகளில் உள்ள கவர்வுகளும் Bretagne இல் நடத்தப்படும் விழாவும் இவ்வருட கோடையில் இடமில்லாத அளவுக்கு உல்லாசப் பிரயாணிகளால் நிறைக்கப்பட்டிருந்தது.

இவ்வருடம் பிரான்சின் தலைநகரான பாரிஸ் 5 வீதத்திற்கும் கூடுதலான உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்தது. இத்தகைய மாற்றங்களினால் பாரிஸில் பலநூறு மில்லியன் பிராங்குகள் செலவிடப்பட்டுள்ளது. தற்பொழுதைய நிலையிலேயே பல நல்லதர விடுதிகளில் இடமில்லாது இருக்கின்றது.

– ஜெ. சியாந்தி

# 8ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஜேர்மனிப் பொறுப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் எங்களுக்கு விடுதலைக்காகச் செயலாற்றும் உறுதியைக் கற்றுத்தந்த **தூய்மையின்** திருவுருவான மாவீரர்

**மேஜர் சுரேந்தி (சுரேந்திரகுமார்)**

அவர்களதும்

**தமிழீழ விடுதலைப்பணியின்போது விபத்தொன்றில் அவருடன் விதையாகிப்போன**
தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் **அமரர் கிருஷ்ணகுமார் (குஞ்சன்)** அவர்கள்; தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியக மாநிலப் பொறுப்பாளர் **அமரர் சௌந்தரராஜன் (சௌந்தி)** அவர்கள்; அவரது மனைவி **விஜயகுமாரி**, மகள் **சபிலா** ஆகியோரதும் எட்டாவது ஆண்டு நினைவுநாள் ஒக்டோபர் 18-ம் திகதியாகும்.

*தமிழீழ விடுதலைப்பணிக்கான வெளிநாட்டுச் செயற்பாட்டில் நீண்டகாலம் உழைத்து தன்னலமற்ற சேவையினூடு விடுதலையை முன்னெடுத்து தலைவரின் தூய்மைக்கும் கண்ணியத்துக்கும் ஏற்ப பணியாளர்களாய்*

*உண்மையை உரைத்து கண்ணியம் காத்த உத்தமர்களே!*

**தாய்நாட்டின் விடுதலைக்காக வெளிநாட்டிற்பணிபுரிந்து விதையான எங்கள் செல்வங்களே!**

**உங்களைப் பற்றிய தூய நினைவுகளோடு உங்களைப்பணிந்து எங்கள் தலை நிமிர்கின்றோம்!!**

**உங்கள் வழி தொடர, உங்கள் நினைவுகள் எமக்குத் துணைசெய்யும்!!!**

*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*ஜேர்மனிப் பணியகம்.*

**உன் உயர்வுக்கு...**

மனிதனே: உன்மனதில் பட்டதை உடனே சொல்லிவிடு இல்லை என்றால் சில நாட்கள் கழித்து உன்கருத்தை வேறு ஒருவன் வாயிலாகக் கைகட்டி நின்று உபதேசமாக நீயே கேட்கவேண்டிவரும். எனவே உன்னை நீ மதி. அப்போதுதான் நீ உயர்வாய்.

**ஜேர்மனியில் புகழ்பெற்ற மொத்த வியாபார ஸ்தாபனம்**

இலங்கை, இந்தியா நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் -நண்டுகள் மற்றும் மளிகைப் பொருட்கள்
இவற்றுடன் கென்யா நாட்டில் இருந்து பசுமையான மரக்கறிகள்
இவை அனைத்தையும் சனிக்கிழமைகளில் Frankfurt Air port இலும்
ஞாயிற்றுக்கிழமைகளில் Store (Viersen) இலும் பெற்றுக்கொள்ளலாம்.

**Dero Trade International**

*Import & Export*

Schonskanter weg31,
41066 Mönchengladbach,
Germany.
கே.பிரேம்குமார்

Tel: 02161 - 809891-208365 / Fax: 02161-809895-650741

மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஸ்தாபனம்

**Premii Cash & Carry**

சகலவிதமான பொருட்களையும் மொத்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

*(Bahnhof க்கு அருகாமையில்)*
Eickner Str.7
41061 Mönchengladbach.
Tel: 02161-208365
Fax: 02161-650741

*உதாரணத்திற்குச் சில.....*

**மாபெரும் மலிவு விற்பனை**

| | | |
|---|---|---|
| அரிசிமா 4 pkt (4x 1 kg) | - | 9.90 DM |
| சம்பா அரிசி 3 pkt (3x 1 kg) | - | 9.90 DM |
| DERO மிளகாய்த்தூள் Box (3x500 Gr) | - | 12,75 DM |
| DERO மிளகாய்த்தூள் Bag (3x500Gr) | - | 11.99 DM |
| சம்பா அரிசி 5Kg | - | 16.90 DM |
| மரக்கறி (இலங்கை, இந்தியா, கென்னியா) | - | 6,90 DM |
| துப்பரவு செய்யப்பட்ட இந்தியன் நண்டுப்பெட்டி | - | 12.90 DM |


## ஈழமுரசு ஜேர்மனி சந்தா

Eelamurasu Weekly

## விண்ணப்பப் படிவம்

பெயர்: ........................................................

முகவரி: ........................................................

........................................................

........................................................

தொலைபேசி எண்: ........................................................

ஜேர்மனிக்கான சந்தா
(தபாற் செலவுடன்)

12 மாதம் ⟶ 160DM ☐

6 மாதம் ⟶ 80DM ☐

ஜேர்மன் தொடர்புகளுக்கு:

**Leama Import & Export Gmbh**
**Duisburger Str 168/170,**
**46049 Oberhausen.**
**Tél: 02082053650 / Fax: 02082053651**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

**"EELAMURASU"**
22, Rue Perdonnet, 75010 Paris, France.
Tél: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64
E.Mail-eelamurasu@aol.com




Pub. EN

# கலைந்த சொற்கள் எண்: 41

கீழ் உள்ளவற்றில் 139 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச் சொற்களைக் கண்டு பிடித்துக் கோடிடவும். இச் சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | வெ | வ | இ | த | ம் | ந | வெ | ம் | ப | ல் | இ | வ | யா | வ | தீ |
| ல | கொ | ல் | ல | ர் | ர் | ள் | ள | ர | ய | யா | ர | ரு | வ | க | ப |
| க | ல | த | ல | த் | ள | ர | ம் | க | யோ | தி | த் | உ | த | ய | ம் |
| ம் | ம | த் | த | ம் | ச | ப | கா | ண | கு | க | த் | ற் | ந் | ய | ச |
| க | ம் | ன | வ | பு | ரை | ர | ட | க் | வ | த | ள | ப | தி | ய | ம் |
| நே | ம் | சி | ன | பு | ண | ம் | ட | கு | ம | ம் | வ | த் | ப | வ | வ |
| சி | ங் | கா | ர | ம் | க | வ | ச | ன் | ண் | க | வா | தி | தி | ய | ர் |
| உ | ச் | ச | ம் | ல | வ | ணி | ன | ஞ் | ட | ட | ர | ர | ப் | ல் | க |
| னை | ப | ற் | க | சி | பு | வ | ச | பு | ப | வ | ர | ம் | பு | ன | ல் |
| வ | இ | ளை | ய | வ | ன் | ப் | ந | ம் | ம் | ர | த | ரா | த | ல | து |
| வு | றி | மு | க | மு | ர | ன | ர | ச | ண | வே | க | க | ல் | ல | றை |
| ற | வ | ண் | றை | கு | ட | ம் | ம் | வ | ரு | ற் | ர் | மெ | வ | வ | மு |
| உ | ட | ன் | பா | டு | க் | ம | பு | க | த | பு | ப் | வ | ர் | ல் | க |
| ம் | ட | வி | றை | ம | த | ழ | ரு | ன் | த | னி | பு | க் | க | ம் | ம் |
| ர | ப | ற் | ப | ம் | க் | லை | வ | வ | லி | த | க | ந | ள் | ற் | ல |
| பு | ப | சு | ப | க | ளி | ப | ம் | க | ல் | ம் | ன | த | வ | ரு | பு |
| ரி | ம | தி | ம் | யி | ய | ம | வ | வ | ப | லி | ரு | க | ன் | ர | அ |
| தி | ய | ரா | ம் | று | ற் | ட | ன் | ளி | க | ம | ன | ன | த | ம் | ன் |
| ம் | ய | வி | கா | ற | ப | ச் | சி | லை | ம் | ர் | ன் | ம் | ர் | ய | ய |
| ஆ | ண் | ட | வ | ன் | ன் | சி | சி | கா | வை | ம | வ | னா | டை | தி | டை |
| சா | தா | ர் | க | ர | த | ம | ல | ல | ய | ம் | ன் | இ | ர் | ம | ம |
| ன் | வி | ம் | ப | ம் | ம் | ம் | க | ம் | ம் | இ | டை | த் | த | ர | ம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உத்தமன் | பத்தியம் | உத்தியோகம் | உற்பத்தி | பத்திரம் | மகரம் | திரவம் | வம்சம் | சம்மதம் | தம்பதி | வரம்பு |
| வாத்தியம் | பதியம் | இருதயம் | களத்தில் | தளபதி | மன்னவன் | சின்னம | புதல்வர்கள் | தராதரம் | தகவல | கல்லறை |
| துறைமுகம் | வர்க்கம் | கம்பளி | கதியால் | வதந்தி | பதிப்பு | உதயம் | கமக்காரர் | கணக்கு | மகுடம் | வெம்பல் |
| காரணம் | வடக்கு | வரவேற்பு | புக்கம் | உடற்பயிற்ச்சி | மண்டபம் | வன்முறை | கர்வம் | கவசம் | இளையவன் | முயற்ச்சி |
| புனிதம் | புனிதன் | புதல்வன் | வல்லினம் | மறைவிடம் | கள்வன் | வதனம் | வரப்பு | நரம்பு | தகர்ப்பு | தகனம் |
| மன்னன் | மர்மம் | சிங்காரம் | மன்னார் | இன்னார் | புரதம் | இடையன் | மடையன் | இடைத்தரம் | மதியம் | தருமம் |
| மகளின் | பச்சிலை | புருவம் | புழக்கம் | தருணம் | மெல்லல் | மடச்சி | பரம்பரை | நர்த்தனம் | உச்சம் | மனனம் |
| மன்றம் | சிலம்பு | வழக்கு | சிநேகம் | பசுமதி | திராவிடர் | காவியம் | விவரம் | தரகர் | ஆண்டவன் | விம்பம் |
| திரிபுரம் | உடன்பாடு | கண்டம் | முகமுறிவு | மத்தம் | கணிசம் | பஞ்சம் | சினத்தல் | புவனம் | இல்லம் | திலகம் |
| வெல்லம் | சரளம் | கொல்லர் | வெள்ளம் | கற்பனை | வலது | உரல் | யாகம் | வேம்பு | புனல் | வேதம் |
| பல்லி | கற்பு | வதனி | கனம் | நகல் | வைகாசி | கலவை | காலம் | இனாம் | புலம் | அருள் |
| வையம | மழலை | கயிறு | பயறு | பற்றை | சுபம் | பரன் | ஆதாம் | ஆசான் | படகு | இதம் |
| குடம் | உறவு | தீபம் | வயல் | இவர் | புனல் | வலம் | | | | |

பெயர்: ........................................

முகவரி: ........................................

........................................

........................................

பிறந்த நாள்: ........................................

சந்தாதாரராயின் சந்தா எண்: ........................................


கலைந்த சொற்கள் எண்-41 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **22.10.1999**

(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>

கலைந்த சொற்கள்
**Eelamurasu**
**22, Rue Perdonnet, 75010 Paris, France**

## கலைந்த சொற்கள் எண்–40 விடைகள்



**ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 85 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தபோதிலும் இருவர் மாத்திரமே சரியான விடையெழுதியிருந்தனர். அவர்களின் விபரங்கள் வருமாறு.**

1) திருமதி ஜெகதீஸ்வரி பழனிநாதன்
01120 Montluel,
France.

2) சந்துரு சசிகலா
59939 Olsberg,
Germany.

இவர்களுக்கு ***Lune International*** நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் கலைந்த சொற்கள் எண்-41 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 42ம், 28 ஒக்டோபர் - 03 நவம்பர் 99 ஈழமுரசில் வெளிவரும்.

**கலைந்த சொற்கள் 40 இல், கலைக்கப்பட்ட எழுத்துக்களில் பல குறள்களும், பல பழமொழிகளும் இருக்கின்றன அவற்றில் சில..**

★ கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடு அல்ல மற்றயவை.
★ சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள்.
★ அனுபவம் அற்ற அறிவு பயன் படாது.
★ சந்தர்ப்பம் கிடைக்கும் போது கருமமாற்றி விடவேண்டும்.
★ அடாது செய்தவர் படாது படுவர்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**


# தமிழர் வித்தியாலயம்

**75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16**

Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 65

இந்த ஆசிரியரிடம் பிரெஞ்சு கற்றவர்கள் கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள். பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள். மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிகிறார்கள். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள். இலைமறைகாய் உண்மை வெளிவரும்.

★ தகைமை + அனுபவம் உள்ள ஆசிரியர்கள். தரமான கல்வி. கூடிய நேரம். குறைவான கட்டணம்

*தரமான கல்வியைத் தேடுவோர் நாடும் ஆசிரியர்*
**ச.சச்சிதானந்தம்**

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 16.10.1999**

<u>**பிரெஞ்சு மொழிப் பயிற்சி வகுப்பு** Cours de français</u>

*வேலை, மருத்துவம், கடிதம், குடியுரிமை போன்ற எதுவாக இருந்தாலும் உங்கள் காரியங்களை நீங்களாகவே செய்வதற்கு ஏற்ப கற்பிக்கப்படும் பிரெஞ்சு வகுப்புக்கள் ஆரம்பம் ஆகின்றன.*

- ஆறு மாத கால சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
- திங்கள் -புதன்-வியாழன்-வெள்ளி இடம்பெறும் மூன்று மாத கால வகுப்புக்கள்,
**காலை: 10.00 மணி–12.00 மணி அல்லது மாலை: 15.00 மணி –17.00 மணி**

இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.

<u>**நல்ல ஆங்கிலம்** Good English</u>

Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.

<u>**டியூசன் வகுப்புக்கள்** Soutien Scolaire</u>

CP தொடக்கம் Terminal வரை

ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.

**சனி, புதன், பிற்பகல், மாலை, ஞாயிறு காலை வகுப்புகள்**

ஆரம்பமாகும் <u>பிற வகுப்பு:</u>
★ நல்ல தமிழ்

Pub

# பிரிந்து கிடந்த பிரான்சை ஒன்றிணைத்த மாவீரன் நெப்போலியன் போனபார்ட்

**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவர உள்ளன.**



பிரான்சிலுள்ள கோர்சிக்கா தீவின் அஜெக்ஸ் என்னும் இடத்தில் 1769ல் பிறந்தவர்தான் நெப்போலியன் பொனாபார்ட். இவர் பிறப்பதற்கு 15 மாதங்கள் முன்னரே பிரான்ஸ் நாட்டினால் இத் தீவு கைப்பற்றப்பட்டது. இதனால் இதனை அறிந்தபின்னர் பிரான்ஸ் நாட்டவர்களை ஆதிக்கவாதிகள் என நினைத்து அவர்களை வெறுக்கத்தொடங்கினார். எனினும் போரியலில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக படைத்துறையில் தன்னை இணைத்துக் கொண்டார். 1785ல் தனது 16வது வயதில் பிரெஞ்சு இராணுவத்தில் துணை அதிகாரியாக பதவியேற்றார். இவர் பதவிக்கு வந்த நான்கு ஆண்டுகளில் (1789ல்) பிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. இதன்பின்னர் பிரான்ஸ் அயல் நாடுகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை விடுவிக்கும் போர் தொடங்கியது. அவ்வேளை 1793ல் தூலோன் நகரை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயருடனான போரில் நெப்போலியன் தனது திறமையைக் காட்டிப் போர் செய்து அதனை விடுவிக்க பீரங்கிப் படையின் தளபதியாக நின்று செயற்பட்டு, வெற்றியும் கண்டார்.

தூலோன் நகரின் வெற்றி அவருக்கு பதவி உயர்வை அளித்தது. அதன் மூலம் 1796ல், இத்தாலியில் பிரெஞ்சுப் படையின் தளபதியாக பதவி உயர்த்தப்பட்டார். அங்கும் பல வெற்றிகள் இவரால் சாதிக்கப்பட்டன. இரண்டாண்டுகளின் பின்னர் அங்கிருந்து பிரான்சிற்கு வந்து 1798ல் எகிப்து மீது படையெடுப்பொன்றை மேற்கொண்டார். தரைச் சமர்களில் வெற்றிபெற்ற நெப்போலியனின் படையணிகள் கடற்படையில் தோல்வியை தழுவிக்கொண்டன. ஆங்கிலேயர்களின் தாக்குதல்களில் பிரெஞ்சுக் கடற்படை பெரும் இழப்பைச் சந்தித்தது, எனினும் பலத்த இழப்புக்களுடன் தரைப் படை எகிப்தைச் சென்றடைந்தது. எகிப்தில் இருந்து பிரான்ஸ் திரும்பிய நெப்போலியன் பிரெஞ்சு மக்கள் தம் இத்தாலியப் படையெழுச்சியின் வெற்றிகளை மட்டும் நினைத்ததையும், எகிப்திய படையெடுப்பின் படுதோல்வியை மறந்து விட்டதையும் கண்டார். இதைப் பயன்படுத்திக் கொண்டு அவர் அபேசியேயுடனும் பிறருடனும் சேர்ந்து அரசாங்கத்தைக் கவிழ்த்தார். அதன் விளைவாக கொன்சல்களின் குழு ஆட்சி ஏற்பட்டது. நெப்போலியனின் படைத்துறை வல்லாட்சிக்கு ஒரு முகமூடியாகவே இருந்தது. அவரோ அரசாங்கத்தைக் கவிழ்த்த பிறரையும் விரைவில் விஞ்சினார்.

நெப்போலியன் வியத்தகு விரைவுடன் உயர் அதிகாரத்தைப் பெற்றார். ஒகஸ்ட் 1793-ல் தூலோன் முற்றுகைக்கு முன் அவர் யாருக்கும் தெரியாத பிரெஞ்சு குடிமகன் என்றுகூட சொல்ல முடியாத, 24 வயதுள்ள ஒரு கீழ் அதிகாரியாகவே இருந்தார். 6 ஆண்டுகளுக்குள்ளாக 30 வயதுள்ள அவர் பிரான்சில் ஈடற்ற தலைவரானார். அப்பதவியில் 14 ஆண்டுகளாக இருந்தார்.

நெப்போலியன் ஆட்சியிலிருந்தபோது பிரான்சின் ஆட்சித் துறையையும் சட்ட முறையையும் பெரிதும் திருத்தியமைத்தார். எடுத்துக்காட்டாக, அவர் நிதி அமைப்பையும், நீதித் துறையையும் சீர் திருத்தினார். பிரான்சின் வங்கியையும், பிரெஞ்சுப் பல்கலைக்கழகத்தையும் நிறுவினார். பிரெஞ்சு ஆட்சித் துறையை ஒழுங்குபடுத்தினார். இம் மாற்றங்கள், பிரான்சின் முக்கிய நிலையான விளைவுகளை ஏற்படுத்தியபோதிலும், உலகைப் பெரிதும் பாதிக்கவில்லை. ஆயினும், நெப்போலியனின் ஒரு சீர்திருத்தம் மட்டும் பிரான்சின் எல்லைகளையும் கடந்து பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது. அதுதான் 'நெப்போலியனின் சட்டத் தொகுப்பு' எனப்படும் புகழ்மிகு பிரெஞ்சு உரிமையியல் சட்டத்தொகுப்பு. பல வகைகளில் அச்சட்டத் தொகுப்பில் பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோள்கள் பொதிந்திருந்தன. எடுத்துக்காட்டாக, அச்சட்டத் தொகுப்பின்படி பிறப்பின் அடிப்படையில் எவர்க்கும் சிறப்புரிமைகள் இல்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஆயினும் இத்தொகுப்பு பழைய பிரெஞ்சு சட்டங்களையும் வழக்கங்களையும் ஓரளவு சார்ந்திருந்ததால் பிரெஞ்சு மக்களும் வழக்கறிஞர்களும் அதை ஏற்கவில்லை. பொதுவாக அது மிதமானதாகும். நன்கு தொகுக்கப்பெற்றதாகும். சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் எழுதப் பெற்றதாகவும் இருந்தது. ஆகவே, அச்சட்டத் தொகுப்பு பிரான்சில் நிலைத்து நின்றது. மட்டுமல்லாமல், ஓரளவு மாற்றங்களுடன் பல நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (இன்றைய பிரெஞ்சு உரிமையில் சட்டத்தொகுப்பு 'நெப்போலியன் சட்டத் தொகுப்பைப் போன்றேயுள்ளது.)

நெப்போலியன் எப்போதுமே தாம் பிரெஞ்சுப் புரட்சியின் பாதுகாவலரென்று வலியுறுத்தி வந்தார். ஆயினும் 1804 இல் அவர் தம்மைத் தாமே பிரான்சின் பேரரசராக்கிக்கொண்டார். மேலும் சகோதரர் மூவரை ஐரோப்பிய அரசுகளின் அரியணையில் அமர்த்தினார். இச் செயல்களைக் கண்டு பிரெஞ்சுக் குடியரசுவாதிகள் வெகுண்டனர். அவை பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோள்களையே சிதைத்துவிட்டதாக அவர்கள் கருதினர். ஆயினும் நெப்போலியனின் உண்மையான இடர்பாடுகள் அயல்நாட்டுப் போர்களினாலேயே எழுந்தன.

நெப்போலியன் 1802-ல் ஏமியன்சில் இங்கிலாந்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அது பத்தாண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்துவந்த போர்களுக்குப் பிறகு பிரான்சுக்கு ஓய்வளித்தது. ஆயினும் அடுத்த ஆண்டே அவ்வுடன்படிக்கை முறிந்தது. இங்கிலாந்துடனும் அதன் நட்பு நாடுகளுடனும் நீண்டகாலப் போர் தொடங்கியது. நெப்போலியனின் படைகள் நிலத்தில் வெற்றிகளைக் குவித்த போதிலும், இங்கிலாந்தை தோற்கடிப்பதற்கு அதன் கப்பற்படையை முறியடிக்க வேண்டியிருந்தது. ஆனால் 1805 இல் ட்ராஃபால்கர் போரில் ஆங்கிலேய கப்பற்படை மாபெரும் வெற்றி பெற்றது. ஆகவே, இங்கிலாந்தின் கடல் வலிமை கலையவில்லை. ட்ராஃபால்கர் போருக்கு ஆறு வாரங்கள் கழித்து நெப்போலியன் (ஒஸ்ரேலிட்ஸ்ஸில் ஆஸ்திரிய ரஷ்யப் படைகளை முறியடித்து) மாபெரும் வெற்றிபெற்ற போதிலும், கடற்போரில் அவர் அடைந்த தோல்விக்கு அதனால் ஈடுசெய்ய இயலவில்லை.

1808-ல் நெப்போலியன் பிரான்சை ஒரு நீண்ட பயனற்ற போரில் மூடத்தனமாக ஈடுபடுத்தினார். அப் போரில் பிரெஞ்சுப் படைகள் ஐபீரியத் தீபகற்பத்தில் நீண்டகாலமாக அழுந்திக்கிடந்தன. ஆயினும், நெப்போலியனின் மாபெருந் தவறு அவரது ரஷ்யப் படையெடுப்பே. 1807-ல் நெப்போலியன் ரஷ்ய மன்னரைச் சந்தித்தார். டில்சிட் உடன்படிக்கையின்படி இருவரும் அணையா நட்புறவு கொள்ள இசைந்தனர். ஆனால் அந்நட்புறவு நாளடைவில் நலிவுற்றது. ஜூன் 1812 இல் நெப்போலியன் தமது பெரும்படையுடன் ரஷ்யாவினுள் நுழைந்தார்.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

> தோல்வி என்பதே எனது வரலாற்றில் இல்லை
>
> —நெப்போலியன்

அதன் விளைவு அனைவர்க்கும் தெரிந்தவையே. ரஷ்யப் படைகள் நெப்போலியனுடன் நேரில் பொருதுவதைத் தவிர்த்தன. ஆகவே நெப்போலியன் விரைவாக முன்னேற முடிந்தது. செப்டெம்பரில் அவர் மொஸ்கோவைக் கைப்பற்றினார். ஆயினும் ரஷ்யர் நகரைக் கொளுத்திவிட்டனர். அதன் பெரும் பகுதி அழிந்துவிட்டது. 5 வாரங்கள் மொஸ்கோவில் தங்கிவிட்டு ரஷ்யர்கள் பணிந்து அமைதி வேண்டுவார்களென்று வீணாக நம்பி, இறுதியில் நெப்போலியன் பின்வாங்கத் தீர்மானித்தார். ஆனால், அதற்குள்ளாகக் காலம் கடந்துவிட்டது. ரஷ்யப் படைகளின் தாக்குதல்களும், ரஷ்யாவின் குளிர்காலத்தின் கடுமையும், பிரெஞ்சு படைகளின் உணவுப் பொருள் பற்றாக்குறையும் ஒன்று சேர்ந்து, பின்வாங்கிய பிரெஞ்சுப் படைகளை நிலைகுலைந்து ஓடச் செய்தன. நெப்போலியன் பெரும்படையில் பத்தில் ஒரு பகுதியினரே ரஷ்யாவிலிருந்து உயிருடன் வெளியேறினர்.

ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற பிற ஐரோப்பிய நாடுகள் பிரெஞ்சு ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய அதுவே தருணமென்பதை உணர்ந்தன. அவை ஒன்று சேர்ந்து நெப்போலியனை எதிர்த்தன. ஒக்டோபர் 1813ல் லீப்சிக் போரில் நெப்போலியன் மற்றொரு மாபெரும் தோல்வியைத் தழுவினார். அடுத்த ஆண்டு அவர் அரியணை துறந்தார். இத்தாலியக் கரைக் கப்பாலுள்ள சிறிய எல்பா தீவுக்கு அவர் கடத்தப்பட்டார்.

1815-ல் நெப்போலியன் எல்பாவிலிருந்து தப்பி, பிரான்ஸ் திரும்பினார். அங்கு மக்கள் அவரை வரவேற்று மீண்டும் ஆட்சியில் அமர்த்தினர். ஆனால், பிற ஐரோப்பிய அரசுகள் உடனே அவர் மீது போர் தொடுத்தன. மீண்டும் ஆட்சிக்கு வந்த நூறு நாட்களுக்குப் பிறகு வாட்டர்லு போரில் இறுதியாக முறியடிக்கப்பட்டார். வாட்ர்லூ போருக்குப் பிறகு ஆங்கிலேயர் அவரைத் தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலிலுள்ள செயின்ட் ஹெலினா எனும் சிறிய தீவில் சிறைப்படுத்தினர். 1821-ல் அவர் அங்கே புற்று நோயினால் இறந்தார்.

நெப்போலியன் ஒரு தன்னல வெறியர். அவரைப் பலர் ஹிட்லருக்கு ஒப்பிடுவர். ஆனால், அவ்விருவருக்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு. ஹிட்லர் ஒரு கொடிய கொள்கையினால் உந்தப் பெற்றவர். ஆனால், நெப்போலியன் ஒரு பேராவலுள்ள சந்தர்ப்பவாதி, பயங்கரப் படுகொலைகள் செய்வதில் அவருக்குத் தனி ஈடுபாடு கிடையாது. நெப்போலியன் ஆட்சியில் ஹிட்லரின் கொடிய சிறைமுகாம்கள் போன்றவை இல்லை.

நெப்போலியன் பிரான்சின் விரிவான ஆட்சித்துறை மாற்றங்களைச் செய்தார், ஆயினும் பிரெஞ்சு மக்கள் உலக மக்கள் தொகையில் எழுபதில் ஒரு ப்குதிதான். அந்த ஆட்சித் துறை மாற்றங்களை நாம் சரியான நோக்கில் பார்க்கவேண்டும். கடந்த இரு நூற்றாண்டுகளில் நிகழ்ந்துள்ள தொழில்நுட்ப மாற்றங்களைவிட அவை பிரெஞ்சு மக்களின் வாழ்க்கையைக் குறைவாகவே பாதித்துள்ளன.

பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் நிகழ்ந்த மாற்றங்களை உறுதிப்படுத்தி பிரெஞ்சு நடுத்தர வகுப்பினர் பெற்ற நலன்களை நிலைப்படுத்துவதற்கு நெப்போலியனின் காலம் தக்க காலமாக இருந்ததெனக் கருதப்படுகின்றது. 1815-ல் பிரெஞ்சு -குடியரசு இறுதியாகத் திரும்பவும் நிலைநிறுத்தப்பட்டபோது, இம்மாற்றங்கள் எவ்வளவு நிலை பெற்றுவிட்டனவென்றால், பழைய ஆட்சியின் சமூக நிலைக்குத் திரும்பிச் செல்வது நினைத்துக்கூடப் பார்க்க முடியாதிருந்தது. மிக முக்கியமான மாற்றங்கள் நெப்போலியன் ஆட்சி ஏற்பட்டபோது, புரட்சிக்கு முந்திய நிலைக்குத் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் நெப்போலியன் முடியாட்சி ஆர்வமுள்ளவராக இருந்தபோதிலும் பிரெஞ்சுப் புரட்சியின் குறிக்கோள்களை ஐரோப்பா முழுவதும் பரப்புவதில் முக்கிய பங்கேற்றார் என்பதில் ஐயமில்லை.

லத்தீன் அமெரிக்காவிலும் நெப்போலியன் ஆட்சியினால் ஏற்பட்ட பெரும் ஆனால் மறைமுக விளைவைக் காணலாம். அவர் ஸ்பெயின் மீது படையெடுத்ததினால் பல ஆண்டுகளாக ஸ்பெயின் அரசாங்கம் வலிமையிழந்தது. ஆகவே அது தனது லத்தீன் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. உண்மையாகவே அங்கு தன்னாட்சி நிலவிய அக்காலத்தில்தான் லத்தீன் அமெரிக்க விடுதலை இயக்கங்கள் தொடங்கின.

நெப்போலியனின் செயல்களுள் நிலையானதும் முக்கியமானதுமான விளைவு அவருடைய முக்கிய திட்டங்களுள் இடம் பெறாத ஒன்றாகும். 1803-ல் நெப்போலியன் அமெரிக்காவுக்கு ஒரு பரந்த நிலப்பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றுவதிலிருந்து தடுப்பதரிது என்று அவர் உணர்ந்தார். மேலும் அவ்ருக்குப் பணமும் தேவையாக இருந்தது. உலக வரலாற்றிலேயே மிக அமைதியான முறையில் மாற்றப்பட்ட நிலப்பகுதியான லூயிசியானாவை அமெரிக்கா வாங்கியதால், அமெரிக்கக் கண்டமளாவிய ஒரு நாடாக மாறியது. லூயிசியானாவை வாங்காவிட்டால் அமெரிக்கா எப்படி இருந்திருக்குமெனச் சொல்வது அரிது. இன்றிருப்பதைவிட மிகவும் வேறுபட்டதாக இருக்குமென்பது உறுதி. லூயிசியானாவை வாங்கியிராவிட்டால், அமெரிக்கா ஒரு வல்லரசாகியிருக்குமா என்பது ஐயத்துக்குரியதே..

# தாயால் பிறந்தேன் தமிழால் வளர்ந்தேன் காலம் விரைவாய் கழிகிறது

ஞாலமோ வேகமாய்ச் சுழல்கிறது
காலமே நில் என்றால் நிற்கவா போகிறது?
காத்திருக்க எதுவும் தயாராகவில்லை.

ஓடுகின்ற உலகுடன் நாமும் ஓடியே ஆகவேண்டும். நின்றோமெனில் நாம் நீண்ட காலத்திற்குப் பின்னிற்போம். சென்றேயாகவேண்டும்- ஓடியே போகவேண்டும்- நின்றன பொழுதுகள் என்றோர் நெடுங்கதை நாம் கேட்டோமா? இல்லையே- சென்றன காலங்கள் என்றதல்லவா நாம்கேட்ட கதைகள், அவற்றினிடையே கொன்றன கொடுமைகள், கொலைகள் புரிந்தன என்றனவாய் வாழ்வு கழிகின்றது-

இந்த நிலையில் எம்கேள்வி இப்படியாக அமைகின்றது. காலத்துடன் நாம் கை கோர்க்கப் போகின்றோமா? களத்துடன் நாம் கைகோர்க்கப் போகின்றோமா? ஓய்ந்து நாம் விழப்போகிறோமா? ஓயாது நாம் வெல்லப் போகிறோமா?

காலம் இப்படியாக ஆகையில் தோற்று நாம் வீழ்வோமா? தோல்வி என்ற சொல்லை நாம் அறிவோமா?

இல்லை என்று சொல்ல மிகுந்த ஆசை. ஆயினும் இந்த இடத்தில் சில இடர்கள் வருகின்றன.

இப்போது நாம் தனி மனிதர். தனிமனிதரால் செய்யத்தக்க சகல காரியங்களும் செய்ய வல்லோம்- உலகைப் புரட்டோம்-ஆயினும் புரட்ட ஓர் கை கொடுப்போம்.

மலையைத் தகர்க்கோம்-ஆயினும் தகர்ப்போரில் ஒருவரது நெஞ்சாய் நம் நெஞ்சும் இருக்கும்.

வானில் ஏறி விண்ணைமுட்டோம்-எனினும் முட்டும் விண்ணை நம் கையும் தொட்டுவிடும்.

காலத்தை நாம் தனித்து வென்றுவிடுவோம் என்ற தவறான எண்ணம் எமக்கு இல்லை எனினும், காலத்தைக் கடந்து செல்வோரில் நம் கால்களும் இணைந்திருக்கும்.

நாம் தனித்தவர், ஆயினும் கூட்டத்திலும் ஒருவர்- நமக்குத் தனித்த எண்ணம் உண்டு. ஆயினும் கூட்டத்தின் கோட்பாட்டுக்கும் நாம் ஆட்படுவோம்.

உலகில் அனைவரும் தனித்த மனிதர்களே. அதனைச் சொல்வதற்கு எந்தத் தயக்கமும் வேண்டியதில்லை. தனித்த குணாம்சங்களும், தனித்த விழுமியங்களும், தனித்த ஆளுமைகளும் தனித்த கற்பனைகளும், தனித்த திறமைகளும் கொண்டவர்களே. அதனைச் சொல்வதற்கு ஆருக்கும் அஞ்சவேண்டியதில்லை.

தனித்த வாழ்வு, தனித்த விருப்பு, வெறுப்பு, தனித்த உறவு, தனித்த உணர்வு, அனைத்தும் தன்னகத்தே கொண்ட தனித்த மனிதர் தாம் அனைவரும்-அது உண்மைதானே.

என் கற்பனை வேறு உன் கற்பனைவேறு -என் திறமை வேறு உன் திறமை வேறு-நான் எழுதுவேன்-நீ நன்றாகப் பாடுவாய்-நான் பந்தடிப்பேன்-நீ பறந்து பறந்து ஆடுவாய்.

ஒரு வார்த்தையை நான் சொல்வதற்கும்-நீ சொல்வதற்கும் எத்துணைவேறுபாடு-அந்த மலரைப் பார்; உன் பார்வைவேறு என் பார்வை வேறு-மழை பெய்கிறது-உன்னைச் சோகம் சூழ்கிறது என்கிறாய். நானோ மகிழ்வால் குதூகலிக்கிறேன். மலையின் உயரம் உனக்கு பிரமிப்பூட்டுகிறது. நானோ பயந்து போகிறேன்-கடலின் ஆழம் உன்னைக் களிப்புக்கொள்ள வைக்கிறது. நானோ கலங்கித் தவிக்கிறேன்.

அன்பை நீ வெளிப்படுத்தும்விதம்-அதுவேறு-உன் பார்வையில் அது புரியும்-கண்களால் நீ கருணை பொழிவாய்-நான் காட்டும்விதம் வேறு-செயலினால்தான் கருணையையும், அன்பையும் நான் காட்டுவேன்.

ஒன்றை மாத்திரம் நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்-அனைவரும் தனித்த மனிதர். வெவ்வேறு குணாம்சம் கொண்டவேற்று மனிதர்.

சகலரின் ஆளுமைகளையும், திறமைகளையும். உணர்வுகளையும், படைப்புக்களையும், கற்பனையையும், ஆற்றலையும்-அனைவரும் மதித்தல்-ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் திறமையானவர்.

சகலரும் ஏதோ ஒரு விதத்தில் கலை ஆளுமைகொண்டவர் என்று உணர்தல், சிலரால் தம்மை அந்த விதமாக வெளிப்படுத்தத் தெரியாததனால் தயங்கி நிற்கிறார்கள் என்று அறிதல்.

அனைவரும் கலைஞர்களே-அனைவரும் ஆற்றல் மிக்கவரே-அனைவருக்குமான களத்தினை நாம் கண்டு பிடித்தல்-கண்டு பிடித்த களத்தில் அவருக்குரிய இடத்தினை வழங்கல்-இதுவே இப்போது தக்க, தகுதிவாய்ந்த சொல் என்றாகிறது.

இதே அடிப்படையில் இப்போது நாம் வேறோர் கேள்விக்குச் செல்கிறோம்.

கலைஞர்கள் யாவரும் தனித்த மனிதர்களா? அவர்களது செயற்பாடுகள் தனித்து இயங்குவதா? இந்த இடத்தில் மனிதர்க்கும் கலைஞர்க்குமிடையிலான உறவு எத்தகையது? இந்தக் கேள்விகள் பெரிதும் அர்த்தம்

**காலத்தைப் பதிவுசெய்து மாயோன் எழுதுவது**

பொதிந்த கேள்விகள் அல்ல. இது மிக இயல்பாக எழுகிற கேள்விகள்தான். கலைஞர்கள் எப்போதும் தனித்த மனிதர்கள்தான். அவர்களது ஆளுமையும் அத்தகைய ஒன்றுதான். திறமையும் செயற்பாடும் அங்ஙனம் வாய்த்ததுதான்.

**கவிஞன் கட்டற்றவன்** என்றார் புரட்சிக் கவி பாரதிதாசன். அது உண்மைதான். மகா உண்மை. இந்த வார்த்தை அனைத்துக் கலைஞர்கட்கும் பொருந்தும். கலைஞர்கள் கட்டற்றவர்கள். கட்டு இருந்தால் அவர்களால் கற்பனை பண்ண முடியாது.

**கொக்குப் பறக்கும், புறாப் பறக்கும்**
**குருவி பறக்கும் குயில் பறக்கும்**
**நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்**
**நான் ஏன் பறப்பேன்?**

இவ்வாறு சொன்னார் ஒரு கவிநாயகர்.

கொக்குப் பறக்கும், புறாப்பறக்கும், குருவி பறக்கும், குயில் பறக்கும்-இவற்றுடன் இழிந்தோராகிய நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்-இவைபோல நான் பறக்க முடியுமா?

இவ்வாறு சொன்னார் ஒரு கவிஞர். நான் பறக்க முடியாது-என் கற்பனை பறக்கும். சிறகு கட்டிப் பறக்கும். இவற்றுள் ஒன்றாக நான் ஆகிவிடமுடியாது-நான் தனித்தவர்- என் ஆளுமை வேறு.

இது தலைக் கனம் அல்ல; வித்துவச் செருக்கு அல்ல, ஆணவம்; அகம்பாவம் என்று எந்தச் சொல்லும் இதற்குப் பொருந்தாது. கலைஞர் அதற்குத் தக்கவர். ஏனெனில் ஒரு இனத்தின் கலாச்சாரத்தை, பண்பாட்டைத் தீர்மானிப்பவர் அவர். வரலாற்றைத் தீர்மானிப்போர் வீரராயிருந்தாலும் கலாச்சாரத்தைத் தீர்மானிப்போர் கலைஞர்.

அதனால்தான் கம்பரும் '**அரியாசனத்தில் அரசரோடென்னைச் சரியாசனம்**' தரச் சொல்லிக்கேட்டார். தந்தது கண்டு புளகித்தார்-தன் தகுதி தெரிந்தது கண்டு ஆனந்தித்தார்-அதுவே கலைஞரின் பெருமிதம்-பெருமிதம் செருக்கல்ல- ஆணவம் அல்ல; அகம்பாவம் அல்ல; தலைக்கனம் அல்ல, சற்றே தவறு நிகழின், அது குற்றமாய் ஆகின், சினம் கொள்வர்; சீறிப்பாய்வர், எந்தக் கொம்பனானாலும் என்ன எதிர்த்து நிற்பர்-அடங்கிப் போகார்; அடிமையாய் ஆகார். விடங்கக்கும் பாம்பாய் சீறி எழுவர்.

சீற்றம் ஒன்று கேட்போமா?

**மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ?**
**உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்- என்னை**
**விரைந்தேற்றுக்கொள்ளாத வேந்துண்டோ?**
**உண்டோ குரங்கேற்றுக்கொள்ளாத கொப்பு-**

கம்பர் கடுங்கோபத்தில் கூறிய வார்த்தைகள் இவை- சக்கரவர்த்தியாக-சாம்ராச்சியத்தைக் கட்டியாண்ட-சூழ உள்ள நாடுகளில் தம் அதிகாரத்தை விரிவு படுத்திய சோழச் சக்கரவர்த்தியை நோக்கி கம்பர் கூறிய வார்த்தைகள் இவை.

இப்படிக் கேட்கும் வலிமை-கலைஞனுக்கு மாத்திரம் உண்டு. எல்லா மனிதர்க்கும் இப்படிக்கேட்க வேண்டிய தேவை உண்டெனினும் கலைஞர் அதனைத் தட்டிக்கேட்டுவிடுவார்.

உன்னத கலைஞரை எப்போதும் இந்த சமூகம் மனிதராகக் கருதுவதில்லை-மனிதராக அல்ல; அதற்கு மேம்பட்டவராக, சாதாரண ஒருவராக அல்லாதவராக உணர்வதனை யாரும் அறிவர்.

அதனால்தான் -மகாகவி இந்த விதமாய்ச் சொல்கின்றார்.

**அஞ்சுகிறேன் அப்பா! உது மனித சாதனையை மிஞ்சியது! தெய்வம் இல்லையேல் பிசாசுதான்.**

மனிதருக்கு மேம்பட்டவர் கலைஞர்-தெய்வம் அல்லது பிசாசாக இருக்கலாம்.

இதனையே நாம் ஞானச் செருக்கு, வித்துவச் செருக்கு என்கிறோமா?

வித்துவச் செருக்கு இருக்கத்தான் வேண்டும் என்ற விழல் கதைகள் கூறுவதுமுண்டு. செருக்கு உள்ளவர், ஆணவம் மிகுந்தவர், அகம்பாவம் நிறைந்தவர் கலைஞரே அல்லர்-அவர்கள் மனிதனாய் இருக்கத் தகுதி அற்றவர்.

ஆனால் ஆத்திரம் கொண்டால் அது ஆணவமோ அகம்பாவமோ அல்ல. ஒரு முறை பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தனக்குப் பணம் தராத படமுதலாளியை நோக்கி-

**தாயால் பிறந்தேன்**
**தமிழால் வளர்ந்தேன்**
**நாயே நீயார் என்னை**
**நடுத் தெருவில்' நில்லென்பதற்கு**

என்று ஆத்திரப்பட்டார்-அவர் கவிதை

அவர் கலை ஆளுமை அந்த ஆத்திரத்தை அவருக்குக் கொடுத்தது.

இந்த விதமாய் கலைஞர் இருந்ததனால்தான் எந்தப் பொழுதிலும் அவர்கள் கலைஞராக வாழ்ந்து கடந்தனர்-வாழ்வினை வென்று நிமிர்ந்தனர்.

கலைஞரின் தனித்துவம், தகுதி கருதி நாம் இங்ஙனம் கதை வளர்க்கிறோம்-ஆனால் கலைஞரும் மனிதரே என்ற உண்மையை நாம் ஏற்கத்தான்வேண்டும்.

எமது இறுதிப்பகுதி இதுவே- கலைஞர் மனிதர்- சமூகத்தில் ஒருவர்-சமூகத்திலிருந்து கற்றவர்- சமூகத்திற்கு அதனை வழங்கியவர்- சமூகத்தின் சகல சொத்திற்கும் உரித்தானவர்-நான் தனித்தவன், என் ஆத்மாவின் திருப்தியே என் திருப்தி- எனது கலை எனக்கு உரியது-என் கலை ஆளுமை என்னால் தீர்மானிக்கப்படுவது.

இந்த விதமாய் கலைஞர் கதை கூறுவாரெனில்; அவர் கலை வாழாது-காலப்போக்கில் அவர் கலை கழிந்துபோகும்-கலைகள் யாவும் மக்களுக்கானவை- மக்களை மேம்படுத்தவேண்டியவை.

கலைஞன் கட்டற்றவன்

என்ற வார்த்தை வலிமையானதுதான்-கலைஞரது கற்பனைக்குக் கட்டுக்கிடையாது-அதனை வெளிப்படுத்துவதற்குக் கட்டுக் கிடையாது-ஆனால் அதன் நோக்கத்திற்குக் 'கட்டு உண்டு.'

தம்மைக் குறுகிய வட்டத்துக்குள் குறுக்கிவிடமுடியாது-விரிந்த பார்வை-விரிந்த தளம்- இதனையே கட்டற்றவன் எனும் சொல் குறிக்கும்.

கலைஞர் மனிதர்தான்-கலைகள் மனித சமூக மேம்பாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும். அப்போதுதான் கலை வாழும்; கலையால் மனிதர் வாழ்வர்.


NÆRKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்
இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் சூ Mony Exchence

புதிய முகவரி
NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®
Nærkøb Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள்
கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட்
(Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு
செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற
ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30ª திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr
மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India
(திருவனந்தபுரத்திற்கு) -
3800 Kr + Tax 185 kr

# எம்மை இளமையாக நினைத்துக்கொண்டால்தான் குரலும் இளமையாக இருக்கும்!

## – ஈழமுரசிற்காக ஹரிகரன்

**பலகோடி ரசிகர்களின் மனதில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் காந்தக்குரலோன் ஹரிஹரன் அவர்கள் அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழிற்காய் வழங்கும் 'மெல்லினிய மாலை' நிகழ்ச்சிக்கென கணினி தகவல் பக்கம் (Web-Site) ஒன்றினைத் திறந்து வைக்கும் முகமாக லண்டன் வந்திருந்தார். 24.09.99 அன்று 'மெல்லினிய மாலைக்கான Web-site உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் அவர் பிரத்தியேகமான பேட்டி ஒன்றினை ஈழமுரசின் வாசகர்களுக்காக ஐ.பி.சி கலையகத்தில் அளித்தார்.**

**கேள்வி: ஐ.பி.சி தமிழின் மெல்லினிய மாலைக்கு என்னென்ன பாடல்களை? எந்த வகைப் பாடல்களை பிரதானமாகப் பாடப் போகின்றீர்கள்?**

**பதில்:** ரசிகர்களுக்குப் பிடித்த பாடல்கள்; இரு குரலிசைப் பாடல்கள், தனிப்பாடல்கள்.

பாட்டுகள் எல்லாமே தமிழ்ப் பாட்டுகள். இனிமையான இணைப் பாடகி. மேடை நடனத்திற்காக 10 பேர் 15 பக்கவாத்திய கலைஞர்கள் சிறப்பான நிகழ்ச்சித்தொகுப்பாளர். எனவே மெல்லினியமாலை விசேடமான ஒரு விழாவாக, ரசிகர்களின் மனதில் நிச்சயம் இடம்பிடிக்கும் என நம்புகிறேன்.

**கேள்வி: பலர் உள்ளங்களையும் கொள்ளைகொண்ட பாடல்களைப் பாடும் உங்களைக் கொள்ளைகொண்ட பாடல்கள் எவை?**

**பதில்:** K.J. ஜேசுதாஸ் அவர்களது 'அதிசய ராகம் ஆனந்த ராகம்'. இது எனக்கு ரொம்பவும் பிடித்தது. S.P. பாலசுப்பிரமணியம் அவர்களது முதல்பாடல் 'ஆயிரம் நிலவே வா'. அன்றிலிருந்து அவரது ரசிகன். நான் மற்றும் P.B. ஸ்ரீனிவாஸ் அவர்களது பாடல் ஒன்றும் எனக்கு மிகவும் பிடித்தது. 'நாளாம் நாளாம் திருநாளாம்' (பாடல் வரிகளைப் பாடிக்காட்டுகின்றார்.)

M.S விஸ்வநாதனின் இசையில் வந்தது அந்தப்பாடல்.

நான் பாடிய பாடல்களில் 'நிலா காய்கிறது' பாடல். அத்தோடு விசேடமாக 'உயிரே' பாடல் எனக்கு விருப்பம். இளையராஜா அவர்களின் இசையில் ஒரு நல்ல பாடலை அவருக்காகப் பாடியிருந்தேன், 'மீட்டாத ஒரு வீணை' அதுவும் பிடித்தமான பாடல். மகாலட்சுமியோடு பாடியது.

**கேள்வி: சரி, பாடகராக அடையாளம் காணப்பட்ட நீங்கள் எப்போது திரைப்பட பாடகராக அறிமுகமானீர்கள்?**

**பதில்:** 1978 இல் முதலில் எனக்கு ஹிந்திப் படங்களில் ஸ்ரீஜெயதேவிஜி என்ற இசையமைப்பாளர்தான் சந்தர்ப்பம் வழங்கினார். படத்தில் பாடிய முதலாவது பாடலே Gazel தான் உருது மொழியில் அமைந்தது. மெகதிஹசன் என்ற பிரபல்யமான பாடகர் பாகிஸ்தானில், அவருடைய குரல்-காதல் உணர்ச்சியை அப்படியே வெளிக்கொணரும் தன்மை வாய்ந்தது என்பது எனது ஆழ்ந்த கருத்து அவருடைய குரலில் என்னை மிகவும் பாதித்திருக்கிறார். நிச்சயமாக என்னுடைய பாடல்களிலும் அவரது பாதிப்பு உங்களுக்கும் தெரியும்.

**கேள்வி: நீங்கள் தமிழ் நாட்டவரா?**

**பதில்:** சந்தேகமேயில்லை. தமிழன்தான். ஆனால் பிறந்து வளர்ந்தது மும்பையில்-எனவே அந்த வடக்குக் கலாச்சாரமும் என்னில் இருக்கிறது. ஹிந்தி, உருது மொழிகள் பரிச்சயமானவை.

**கேள்வி: சற்றே சங்கடமான கேள்வி! உங்களுக்கு இணையாகப் பாடக்கூடிய பாடகிகள் என்று யாரைக். கருதுகிறீர்கள்?**

**பதில்:** ஐயோ! மிகவும் சங்கடமானதுதான். எனக்கு அதிகமாக இணைந்து பாடக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது, ஆஷா போஸ்லே அவர்களுடன்தான். அவருக்காக ஒரு Gazal Album கூட இசையமைத்துக் கொடுத்திருக்கிறேன். ஆப்ஷாரே Gazal என்று அவருடன் இணைந்து பாடியிருக்கிறேன். லதாஜி அவர்களோடு இணைந்து பாடிய சந்தர்ப்பங்கள் குறைவு. நான் என்ன சொல்லுவது!- மிகப் பெரிய பாடகி அவர். அவருடன் இணைந்து பாடியது எனக்கு மிகப்பெரிய வாய்ப்பு!

தமிழில் சித்ராவுடன் இணைந்து நிறையப் பாடியிருக்கிறேன். மிகவும் சுவாரஷ்யமான பாடகி. ஹரிணி பற்றிச் சொல்ல வேண்டுமானால் மிகவும் திறமையானவர்-மிக நல்ல எதிர்காலம் அவருக்கு உண்டு. ஸ்ருதி சுத்தமாய்ப் பாடும் வல்லமை கொண்டவர்.

**கேள்வி: இன்றைய இசையமைப்பாளர்களில் யாருடன் பணிபுரிவது இலகுவாக இருக்கிறது? அவர்களுடன் பணியாற்றிய போது ஏற்பட்ட அனுபவங்கள்?**

**பதில்:** இதில் நான் ஒரு தத்துவத்தைக் கடைப்பிடிக்கிறேன். யாருடனாவது இணைந்து வேலை செய்வதானால் முதலில் அவர்களுடன் சினேகமாக வேண்டும் என்பது. அப்படியானால்தான் இலகுவாக பணியாற்ற முடியும். இல்லையென்றால் முடியாது. காரணம் ஒரு பாடலைப் பாடுவதென்றால், அது அவர்கள் பாட்டு இல்லை, எனது பாட்டும் இல்லை. நம் பாட்டு -எனவே இருவருக்குமே 50-50 வீதம் பங்கிருக்கிறது.

ரஹ்மான் அவர்களுடன் பணிபுரிவது மிகவும் இலகுவானது. அத்தோடு நல்ல தயாரிப்பாளரும் கூட-பாடகரை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது அவருக்குத்தெரியும். ஒரு மெட்டினைச் சொல்லித்தருவார். பாடச் சொல்வார். பின்னர் பாடகருக்குப் பிடித்தமாதிரிப் பாடுங்கள் என்பார். பாடகர் திருப்தியாக உணரும் வரை மிகவும் அக்கறை எடுத்துக் கொள்வார்.

இளையராஜா அவர்களோடும் பணிபுரிந்திருக்கிறேன். முதலாவது பாடலில் உணர்ச்சிவசப் பட்டவனாக இருந்தேன். மேதையல்லவா!



யாருடனாவது இணைந்து வேலை செய்வதானால் முதலில் அவர்களுடன் சினேகமாக வேண்டும் என்பது. அப்படியானால்தான் இலகுவாக பணியாற்ற முடியும். இல்லையென்றால் முடியாது. காரணம் ஒரு பாடலைப் பாடுவதென்றால், அது அவர்கள் பாட்டு இல்லை, எனது பாட்டும் இல்லை.

'எனைத் தாலாட்ட வருவாளோ' பாடல் முதலாவது. இத்தனை பெரிய மேதை. அவரிடம் நான் என்ன செய்யப்போகிறேன் என்ற பயம். அவரிடம் முதலிலேயே சொல்லிவிட்டேன். சார், நான் உங்களுக்கு மிகவும் பணிந்தவன்! எனவே தவறு ஏதும் ஏற்பட்டால், மன்னியுங்கள். சமாளித்து விடுங்கள் என்று. அது மிகவும் அருமையான சந்திப்பு. இப்பொழுது நிறையப் பாடல்கள் அவருடைய இசையில் பாடுகிறேன்.

தேவா அவர்களுடன் பணியாற்றுவதும் மிகவும் இலகுவானது. S.A. ராஜ்குமார், வித்யாசாகர் எல்லோருமே அப்படித்தான்.

அடிப்படையில், இசையமைப்பாளர்களுக்கு இசையில் என்ன வேண்டும் என்பது புரிந்து அதனைக் கொடுத்துவிட்டால், பிரச்சினை இல்லை. அவர்கள் அனைவருமே மிகவும் நல்ல மனிதர்கள்.

**கேள்வி: நீங்கள் பாடியவற்றில் உங்களை மிவும் பாதித்தது என்று சொல்லக்கூடிய பாடல்?**

**பதில்:** 'உயிரே' பாடல்- பாடலில் உள்ளேயே சென்று உணர்ந்து ரசித்துப்பாடியது. அது போல நல்ல பாடல்கள் எல்லாமே- பாடலுக்குள் சென்று அனுபவித்து அந்தப்பாடலைப் பாடவில்லை என்றால் சத்தியமாகாது. உணர்வு முக்கியம். தொழிலில் ஆழ்ந்து போதல் என்பது அவசியம்.

**கேள்வி: மிகவும் கஷ்டப்பட்டுப் பாடிய பாடல்? அதாவது, பல தடவைகள் ஒத்திகை பார்த்துப் பாடியது?**

**பதில்:** 'மீட்டாத ஒரு வீணை'- சுவாரக்ஷயமான பாட்டு அது. தாளமும் மெட்டும் மற்றைய பாடல்களில் இருந்து சற்றே வேறுபட்டது. ஒலிப்பதிவின் போது சாரீரமும் ஒத்துழைக்கவில்லை என்று நினைவு, அதனால் கொஞ்சம் அதிகமாக நேரம் எடுத்துக்கொண்டேன்.

**கேள்வி: நீங்கள் பாடிய பாடல்களை நினைவு வைத்துக் கொள்வீர்களா? அல்லது அப்படியே மறந்து போய்விடுமா?**

**பதில்:** சிலது மறந்து போய்விடும். எல்லாவற்றையும் நினைவு வைத்துக்கொள்வதில் ஒரு சிக்கல் இருக்கிறது. நினைவில் வைத்துக் கொண்டால் பாடும் பாடல்களில், பாடிய பாடல்களின் பாதிப்பு- அதில் பிரதிபலிக்க வாய்ப்பு இருக்கிறது. ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று பாடல்கள் பாடுகையில் மூன்றாவதாகப் பாடும் பாட்டில் முதலாவது, இரண்டாவது பாடல்களின் பாதிப்புக்கூட ஏற்படலாம்.

**கேள்வி: புதிதாகப்பாடும்போது, இசைக்குறிப்புகளை எழுதி வைத்துப்பாடுவது வழக்கமா?**

**பதில்:** இல்லை நினைவிருக்கும்.

**கேள்வி: புதிய பாடகர்களுக்கு நீங்கள் முன்னோடியாக இருப்பது போல உங்களுக்கு?**

**பதில்:** என்னுடைய குரு குலாம் ஸ்வாஹாசரப் அதற்கு முன் என்னுடைய தாயார் தான். அவரிடமிருந்துதான் கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக் கொண்டேன். பின்னர் மொகதி ஹசன் அவர்கள்தான் என்னை ஈர்த்தவர்.

**கேள்வி: குரலை இளமையாக வைத்துக்கொள்ள என்ன செய்கிறீர்கள்?**

**பதில்:** குரலை இளமையாக வைத்துக்கொள்ள வேண்டுமாயின் நாம் இளமையாக நினைத்துக்கொள்வது அவசியம். இதயத்தில் இளமையானவராக உணர வேண்டும். இது தவிரவும் ஐஸ்கிறீம் எனக்கு ஒத்துக்கொள்வதில்லை- எனவே சாப்பிடுவதில்லை. ரொம்பவும் கண்டிப்பாக இருப்பதில்லை. கால நிலைக்கேற்ப உடலைப் பாதுகாத்துக்கொள்வேன்.

**கேள்வி: உங்கள் மறுபாதி பற்றி...?**

**பதில்:** என்னுடைய மனைவி லலிதா. 'மெல்லினியமாலை' நிகழ்ச்சிகளைக்கூட அவர்தான் தயாரிக்கிறார். என்னுடைய முகாமையாளரும் அவர்தான். மிகவும் திறமைவாய்ந்தவர். இரண்டு குழந்தைகள் 13 வயது அக்ஷய், 7 வயது கரன்.

**கேள்வி: பழையபாடல் போல புதிய பாடல்கள் இல்லை என்று குறைபட்டுக் கொள்பவர்களுக்கு உங்கள் பதில் என்ன?**

**பதில்:** இன்று பாடலை யார் கேட்கிறார்களோ- அவர்களது பாட்டனார் காலத்தில் அவர்கள் எப்படி இருந்திருப்பார்கள்? இப்போது நாம் எப்படி இருக்கிறோம். அந்த வித்தியாசம் இல்லாமல் ஒரே மாதிரி அன்றும் இன்றும் ஏன் இல்லை? அதே போலத்தான் சமுதாயம் மாறமாற, பாடலும் அதற்கேற்றாற் போல மாறி வருகிறது. கலை என்பதே சமுதாயத்தின் பிரதிபலிப்புத்தானே? Internet பற்றிய பாடல்கள் ஏன் இப்பொழுது வருகின்றன என்றால் இப்போதுதான் நம்முடன் Internet இருக்கிறது. அந்தக் காலத்தில் நிச்சயம் வந்திருக்க முடியாது. எனவே மாறுபடும்- ரசனைகள், இயற்கையாகவே இடம்பெறும் மாறுதல்கள். என்னைவிடவும் எனது குழந்தைகள் வித்தியாசமானவர்கள். அப்படித்தான் எல்லாம் இருக்கும். கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டு தமிழா தமிழா' பாடலைப் பாடிக்காட்டுகிறார். ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்ற கேள்விக்கு,

உங்கள் எல்லோரையும்- தமிழர்களை October 30-ம் திகதி நான் சந்திக்கப்போகிறேன். வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன் நன்றி என்று கூறி விடை பெறுகிறார்.

*நேர்காணல்:*
*சுமதி சுரேஷன்*

# ஜே.என்.டிக்ஸிற்றின் வாக்குமூலம் 7

**'அசைன்மென்ட் கொழும்பு' என்ற நூலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டது.**

பங்குனி மாதத்தில் திரு.ஜெயவர்த்தனா, பாகிஸ்தானிற்கு, அரசாங்க விஷயமாகச் சென்றிருந்தபோது திரு. பண்டாரி அவர்களின் அறிக்கையை வாசித்துக்கொண்டு, அதன் அடுத்த நடிவடிக்கையாக திரு. பண்டாரியின் இவ் அறிக்கையைச் சிறீலங்காவில் செயலாற்ற முடியாது என்பதை அவரின் பேச்சாளர் மூலம் தெரியப்படுத்தினார். திரு. ஜெயவர்த்தனாவின் இக் கூற்று, தமிழர் மத்தியில் பெரும் திகிலை எழுப்பியது. நான் திரு. பண்டாரியின் அறிக்கையில் வாசித்து உணர்ந்தது யாதெனில், சிறீலங்காத் தமிழ் இனத்தின் நோக்குப்படி தமிழ் இனம் பிரிந்து வாழச் சில சமயங்களில் வழிவகுக்கச் சாத்தியம் உண்டு என்பதேயாகும். நான் ஆடி 27 முதல் ஆவணி முதல் மட்டும் இவை பற்றிய விளக்கங்களைப் பரிசீலிக்க டெல்கி அழைக்கப்பட்டிருந்தேன். அப்பொழுது திரு. ராஜீவ் காந்தி, திரு. புார்த்தசாரதி, மந்திரிசபைக் காரியத்ரிசி, 'றோ'வுடைய காரியதரிசி, திரு.சச்சன் போன்றோருடன் இவைபற்றி ஆலோசனைக் கூட்டங்கள் நடாத்தினேன். இதன் நோக்கம் யாதெனில், சிறீலங்காவில் வாழும் தமிழர்களுக்கு, அவர்களின் முக்கிய அடிப்படை உரிமைகளைக் கொடுத்து உதவவேயொழிய, இத் தீவைப் பிரிப்பது அல்ல. திரு.பண்டாரி ஆவணி 8, 1985 வர இருப்பதால் நான் திரு.ஜெயவர்த்தனா அவர்களுக்கு இக்கூட்டத்தின் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டிருந்தேன். இதன் பிற்பாடு நான் ஆவணி 2-ம் திகதி, டெல்லியில் இருந்து கொழும்பிற்கு வந்து, அன்றுமாலை 7 மணி அளவில், வாட்ஸ் பிளேஸில் உள்ள திரு. ஜெயவர்த்தனாவின் இல்லத்துக்குச் சென்றேன். அப்போது சிறீலங்காப் பாதுகாப்பு மந்திரி திரு.அத்துலத்முதலியும் இருப்பதை அவதானித்தேன். நான் இந்தியாவின் நிலைப்பாட்டைப் பற்றியும், திம்புப் பேச்சுவார்த்தையில் ஓர் சமரசம் காணாததால் இந்தியாவின் வேதனை பற்றியும் கூறி, இந்தியா பிற்பாடு நடாத்திய கூட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்தேன். இவ் அறிக்கையின்படி, 'சிறீலங்கா தமது கொள்கையில் இருந்து சற்றே விலகித் தமிழ் சமூகத்திற்கு நன்மைகள் வரக்கூடிய விதத்தில் செயலாற்றவேண்டும்' எனக் குறித்திருந்தது. இவ் இந்தியாவின் அணுகுமுறையை திரு.அத்துலத் முதலி ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், இந்தியா தமிழ்ப் போராளிகளுக்கு ஆதரவு அளிக்கின்றது, அடுத்ததாக இந்தியா ஓர் பக்கமாகத் தமிழருக்கு மட்டும் ஆதரவு அளிக்கின்றது என அவரின் கருத்துக்களை உரைத்தார். எமது பேச்சுக்களை அவதானித்த சிறீலங்கா ஜனாதிபதிதான், நான்கொடுத்த அறிக்கைகளை திரு.ஹரி ஜெயவர்த்தனாவிற்குக் கொடுக்கப் போவதாகவும், அவர் திம்புவில் நடக்கவிருக்கும், இரண்டாவது சுற்றுப்பேச்சு வார்த்தையின் பொழுது இதைப் பற்றி மேலும் விளக்கங்கள் கொடுப்பார் என்றும், இப் பேச்சுவார்த்தையில் சமூகம் அளிக்கவிருக்கும் திரு. பண்டாரி அவர்களும் முக்கிய கவனம் செலுத்தி, ஓர் நல்ல முடிவைச் செயலாற்றவேண்டு மென்று உரைத்தார்.

திரு. பண்டார்ரி அவர்கள் ஆவணிமாதம் எட்டாந்திகதி வந்து, திரு. J.R. ஜெயவர்த்தனாவையும், வெளிநாட்டு அமைச்சர் திரு.ஹமீதையும் உத்தியோக பூர்வமாகச் சந்தித்தார். அவரின் முக்கிய கலந்துரையாடல் திரு. ஹரி ஜெய்வர்த்தனாவுடன் இருந்தது. திரு.ஹரி ஜெயவர்த்தனாவின் கலந்துரையாடல்களில், 'சிறீலங்காவில் தோன்றியுள்ள கலவரங்களின் சரித்திரச் சான்றுகளைத் தவிர்ப்பது நல்லது' என்பதைச் சுட்டிக்காட்டினார்; அத்தோடு தான் மகாநாட்டுக்கு வரும்போது ஓர் நல்ல திட்டத்துடன் சமூகம் அளிப்பேன் என்பதையும் உணர்த்தினார். அதே ஆவணி 8-ம் திகதி மாலை திருமதி பண்டாரநாயக்காவையும் சந்தித்த பொழுது அவரின் கருத்துக்கள் யாவும், முன்பு ஆடிமாதம் மத்திய பகுதியில் கூறிய விதமே அமைந்தது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் 'அதிகமாகத் தமிழ் மக்களுக்குச் செய்யப்போவதாக இல்லை' என்பதையும் தெளிவுபடுத்தினார். பின்பு ஆவணி 9-ம் திகதியும், திரு.பண்டாரி, திரு.அத்துலத் முதலியைச் சந்திக்கும் பொழுது, அத்துலத் முதலி அவர்கள், வடக்குக் கிழக்கு மாகாணத்தை ஒன்று இணைப்பதிலும், அங்குள்ள காணி அபிவிருத்திக்கான நிதி நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் சிங்களப் பொதுமக்கள் 'ஒருபோதும்' ஒத்துப்போகமாட்டார்கள் எனவும் கூறினார். திரு. பண்டாரியின் இறுதிச் சந்திப்பு ஆவணிமாதம் 9-ம் திகதி, பிரதமமந்திரி திரு. பிரேமதாசாவுடன் அமைந்தது. திரு. பிரேமதாசா அவர்கள் தான் ஓர் காந்தீயத் தத்துவக்கொள்கை உடையவர் என்றும், இந்தியாவுடன் என்றும் நேசக் கரம் நீட்டியவர் என்றும், ஆனால் தமிழ் போராளிகளின் வேகம் கூடுமானால் இப்பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வுக்காணுவது கடினம் என்பதையும் கூறி, சிங்கள மக்கள் இந்தியா, இவ்விடயத்தில் நல்லெண்ணத் தூதுவர்களாக இருந்தபோதும், அவர்களின் ஆர்வமும், அன்பும், இந்தியாமேல் குறுகிக்கொண்டு போவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்பதையும் தெளிவுபடுத்தினார். இச் சந்திப்பின் பொழுது திரு.ரல்ப் புல்ஜீஸ் என்பவரையும் சந்திக்க நேர்ந்தது. இவரை நான் ஆவணி 4-ம் திகதி முதன்முதலில் சந்தித்தேன். இவர் தான், திருமதி பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஜெயவர்த்தனா, காலம் சென்ற இந்திராகாந்தி அம்மையார் போன்றோருடன் நல்ல உறவுகள் வைத்திருந்ததாயும், சிறீலங்காவில் தற்பொழுது விளைந்துள்ள நிலைமைகளுக்குத் தன்னால் நல்ல சமாதானத்தை நிலைப்படுத்த முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

திரு. புல்ஜீஸ் ஆவணி மாதம் 8-ம் திகதி மால்லை, என்னைத் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு, பண்டாரி அவர்களுக்கு ஓர் இரவுப் போசன விருந்தைத் தமது இல்லத்தில் அளிக்க விரும்புவதாகவும், அவ்விருந்தில் ஜனாதிபதியின் மகன்-ரவி, ஜெயவர்த்தனாவும், பெறாமகன் திரு. எஸ்மொண்ட் விக்கிரமசிங்காவும் கலந்துகொள்ளப் போவதாகவும், காரணம் அவ்வேளையில் இப்போது சிறீலங்காவில் தோன்றியுள்ள இப் பிரச்சினைகள் பற்றி மனம் திறந்து எண்ணங்களைப் பரிமாற வாய்ப்பு உண்டு என்பதேயாகும் எனப் பரிந்துரைத்தார். நான் இவ் விருந்தில் பங்குபற்றுவதை சிறீலங்கா ஜனாதிபதி அவ்வளவாக விரும்பவில்லை என்பதையும் அவர் பேச்சில் உணர்த்தப்பட்டது.



*(வளரும்)*

தொகுப்பு:
சி.சொக்கநாதன் பிரான்ஸ்

---

# தமிழர் நடந்த பாதை

## 13

## தமிழோடு தமிழாய் வாழும் ஆபிரிக்க மொழிகள்-1

*பேரா.கு.அரசேந்திரன்*

இருண்ட கண்டம் என ஆங்கிலேயர் ஆபிரிக்கக் கண்டத்தை அழைத்தனர். இக் கண்டத்தின் முழுத் தன்மைகள் வெளி உலகிற்குச் சரியாகத் தெரியாதபடியாலேயே இவ்வாறு கூறினர்.

பெல்ஜியம், இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, போர்த்துக்கல் ஆகிய ஐந்து நாடுகளும் 1880 தொடங்கி ஆபிரிக்காவைக் கூறுபோட்டுச் சுரண்டின. இக்கண்டத்தின் கருப்பின மக்கள் வரலாற்றில் பட்ட துன்பங்களும் பட்டு வரும் இன்னல்களும் நெஞ்சை உருக்கும். புதிய விடியலோடு அடிமை விலங்கொடித்து விடுதலை பெற்றுவரும் ஆபிரிக்க மக்களின் அனைத்துக் கூறுகளையும் நாம் தமிழியத்தோடு உறவுபடுத்தி ஆய்ந்து பார்க்க வேண்டும். உலகின் முதுமொழியான தமிழை உலகின் தொன்முது மொழிகளோடும் உலகின் தொன்முது நாகரிகம் படைத்த தமிழர் நாகரிகத்தை, உலகின் தொன்முது நாகரிகங்களுடனும் ஆய்ந்து பார்ப்பது உலக வரலாற்றுக்குப் புத்தொளி கிடைக்க வழி வகுக்கும்.

ஐம்பது கோடி மக்களைக்கொண்ட ஆபிரிக்கக் கண்டத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் உள்ளன. இந்நாடுகளில் பேசப்படும் மொழிகள் ஆயிரத்துக்கும் அதிகம் என முந்தைய தொடரில் கூறினோம். ஆபிரிக்கவியல் அறிஞர்கள் ஆபிரிக்காவில் உள்ள சில நூறு மொழிகளையே ஆய்விற்கு உட்படுத்தியுள்ளனர். பெரிய அளவிலான முயற்சியில் ஆபிரிக்க மொழிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவான தரவுகள் திரட்டப்பட்ட பிறகே நாம் சரியாக ஆய்வு செய்யமுடியும். நேரடித் தரவுகள் கிடைக்கும்வரை இரண்டாவது நிலையில் கிடைத்த தரவுகளைக்கொண்டாவது நாம் ஆய்வு செய்யத்தான்வேண்டும். அவ்வகையில் நாம் முயற்சி மேற்கொள்ளும்போதுகூட தமிழ், ஆபிரிக்க மொழிகளில் கலந்து நிற்பதை நன்றாகக் காண முடிகின்றது.

மேற்கு ஆபிரிக்காவில் திம்மினி (Tomne) என்றொரு மொழி வழங்குகிறது. 'சியாரோ இலியோன் (sierra leone) என்னும் நீக்ரோ மக்களினத்தால் இம் மொழி பேசப்படுகிறது. இம் மொழியில் எத்தனை சொற்கள் தமிழாக உள்ளதென்று நமக்குத் தெரியவில்லை. இம்மொழி பற்றிய அகராதிகளோ தரவுகளோ நமக்குக் கிடைப்பின் தமிழாய்வில் மூழ்கலாம். ஆனால் இம் மொழியில் புழங்கும் சொற்களில் ஒரு தூய தமிழ்ச்சொல்லை ஆங்கில அகராதிவழி அறிந்து இங்கு குறிப்பது பொருத்தமாகும். Coca-Cola உலகம் அறிந்த சொல். இச்சொல்லில் உள்ள 'Cola' என்பது மேற்குறித்த ஆபிரிக்க மொழியில் புழங்கும் தூய தமிழ்ச் சொல்லாகும். கறுப்பின மக்களின் திம்மினி மொழியில் அங்குள்ள ஒரு மரம் 'காளா மரம்'எனப்படுகிறது. இம் மரம் இவ்வாறு அழைக்கப்படுதற்கு இதன் விதை கருமை நிறம் உடையதாக இருப்பதே காரணமாகும்.

Cola -)Also Kola. Kolla. Goora in

1. Negro laungs of W. Africa)

A genus of trees. Natives of western tropical Africa.

Its Seed called Cola-nutor Cola Seed about the size of a chestnut brownish and bitter. is largely used for chewing as a condiment and digestive.

2. A carbonated soft drink Flavoured with dried coca leaves and cola nut seeds.

என்பது ஆக்சுபோர்டு பேரகராதி தரும் விளக்கமாகும்.

• Kola nut-a brownish seed its extract is used in soft drinks என்பது 'இராண்டாம் ஹவுஸ்' ஆங்கில அகராதி தரும் செய்தி.

காளமேகம்-கரியநிறமுகில்; காளான்-கருமை நிறம் கலந்த குடைக்காளான், காளி-கரிய நிறமுடைய பெண் தெய்வம் போல் பலப்பல சொற்களின் அடிப்பகுதி 'காள்' என்பதே. கருமை என்பதே இதற்குப் பொருள். தமிழின் இதே காள்-காளம் என்ற சொல்லே கருமை நிற விதையைக்கொண்ட மரத்திற்கு மேற்கு ஆபிரிக்காவில் 'காளா மரம்' என அழைக்கப்படுவதற்குக் காரணமாகியது. 'காளா' என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலேயர் காலா-'கோலா' என்றே அழைப்பர். ஆரிய மொழிகட்கு 'ளகரம்' இல்லை. மேலும் தமிழின் அகர ஒலி மிகுதியும் ஒகர ஒலியாக மாறி அவர்கள் மொழியில் ஒலிக்கிறது. கயிறு coir எனப்பட்ட அண்மை வழக்கில் கூட இதனைக் காணலாம். இவ்வகையில்தான் ஆபிரிக்காவில் புழங்கிய 'காளா விதை' என்பது ஆங்கிலேயர் வாயினில் 1865-70 ஆம் ஆண்டளவில் Cola nut என்பதாகச் சொல்லப்பட்டு அவர்கள் மொழியில் சென்றேறியது.

மேற்கு ஆபிரிக்காவில் வாழும் திம்மினி மொழிக்கும், தமிழுக்கும் உள்ள உறவு எத்தனை ஆயிரம் ஆண்டுகட்கு முந்தையதாக இருக்க முடியும் என்று நம்மால் இப்பொழுது நினைக்கவும் முடியாது.

ஆபிரிக்கக் கண்டம் முழுதும் சென்று தரவுகள் தேடித்தொகுத்து அவற்றை வெளியிட வேண்டியபணி எதிர்காலத் தமிழ் ஆய்வாளர்கட்கு உண்டு. திரு. சாத்தூர் சேகரன் என்பார் தாம் மேற்கொண்ட ஆபிரிக்கச் செலவில் ஆபிரிக்க மொழிகளைப் பற்றிப் பல தரவுகளைத் தந்துள்ளார். அவரின் ஆபிரிக்க மொழிகள்-ஓர் அறிமுகம் என்னும் ஆங்கிலநூலில் அக்கண்டத்து ஊர்ப் பெயர்களில் தமிழ்க்கூறுகள் கலந்திருப்பதை ஓர் தலைப்பில் தொகுத்துத் தந்துள்ளார். ஊர்ப் பெயர்கள் ஒரு நாட்டின் தொன்மை மிகு வரலாற்றைத் தெரிவிக்கும் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும். அவ்வகையில் சாத்தூர் சேகரன் நூல் வழி சில தமிழ் ஆபிரிக்க ஊர்ப்பெயர் ஒற்றுமையை இவண்காண்போம்.

ஆற்றின் ஓரம் உள்ள ஊர்கள் தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும் 'கரை' என்னும் ஈறுபெற்று அழைக்கப்படும்.

எடுத்துக்காட்டு: மணக்கரை, திருவக்கரை, மல்லியக்கரை, அணைக்கரை (தமிழகம்) ஓடக்கரை, வாகரை, புளியன்கரை(தமிழீழம்) இதே 'கரை' நைஜீரியாவில் Agra owris and Agra Tahll (அக்கரை) என்பதாக ஊர்ப்பெயரில் அழைக்கப்படுவதாக சாத்தூர் சேகரன் கூறுகிறார்.

'அறை' என்பது மலையைக் குறிக்கும் தமிழ்ச் சொல், ஒழுகறை, திருவெள்ளறை (திருச்சிமாவட்டம்) என்னும் தமிழ்நாட்டு ஊர்களில் மலையைக் குறிக்கும் 'அறை' உள்ளது.

Arakaa (hill Garden)

Ararom-எனும் நைஜீரிய ஊர்ப் பெயரும்

Aratane-(Hill tane)எனும் மறுதானியா ஊர்ப்பெயரும் மலையைக் குறிக்கும்' 'அறை' வழி வந்ததாக அறிகிறோம்.

'வாடி' என்பது ஓர் ஊர்ப்பெயர் ஈறு. 'பாடி' என்னும்முல்லை நில ஊரைக் குறிக்கும் சொல்லே வாடி எனத்திரிந்தது கடம்பாடி ஈச்சம்பாடி போன்ற இடத்தில் பாடி உள்ளதை அறியலாம். பாடியின் திரிபான வாடியும் தமிழ்நாட்டில் பிச்சைவாடி, -குமாரவாடி, கீரைவாடி என ஊர்ப்பெயரில் வழங்குகின்றது.

ஆபிரிக்காவில் எகிப்தில் உள்ள ஊரான Ain-el-wadi என்பது தமிழின் 'வாடி' எனச் சாத்தூர் சேகரன் கூறுவார்.

'ஊர்' என்னும் பெயரீறு உலகெங்கும் பலப்பல மொழிகளிலும் வழங்கப்பெறுகிறது. அரியலூர், தஞ்சாவூர் போல ஊர்களைச் சொல்லவே வேண்டாம்.

திரு.சாத்தூர் சேகரன் Torye-Ur; Tamb-ura; Mu-ur; kunta-urkau-ur;mbo-ur;ache-go-ur damt-uru;Aam-uru என்பன போல் ஊர்ப்பெயரில் இடம் பெறும் 'ஊர்' ஈறுகள் பல ஆபிரிக்காவில் உள்ளதைச் சுட்டியுள்ளார். ஆபிரிக்கா முழுவதிலும் உள்ள ஊர்ப் பெயர்களில் 'ஊர்' என்னும் ஈறு ஐயாயிரத்திற்கும் குறையாமல் இருக்கும் என இவர் கூறுவார்.

'குளித்தலை' போல் பல தலைகள் தமிழ் ஊர்ப் பெயர்களில் உண்டு. Meeg-dala; Abbots dala; Alice-dala;Kay-dala;Ban-dala; போலப் பல தலைகள் ஆபிரிக்க ஊர்களிலும் உண்டு.

'திருவானைக்கா' போலப்பல காக்கள்(சோலைகள்) தமிழ் நாட்டில் உண்டு. ஆபிரிக்காவில் Maghe-gha;Bekodo-kaa;Moramanga;oua-ka போலப் பல சோலைக் காக்கள் ஊர்ப்பெயர்களில் உண்டு.

*(வளரும்)*

## தொடங்கிய இடத்துக்கு திரும்புகின்றார் ராகுல் டாவிட்



இந்திய கிரிக்கட் அணியின் நுட்பமான ஆட்டக்காரன் ராகுல் டாவிட்டுக்கு இங்கிலாந்து மைதானங்கள் என்றால் ஒரே ராசி. அவர் தனது சர்வதேச கிரிக்கட் நுழைவை மேற்கொண்டது இங்கிலாந்தில் தான். அத்தோடு கடந்த உலகக் கிண்ணப்போட்டியிலும் கூடிய ஓட்டங்களைக் குவித்த வீரரான இவரை இங்கிலாந்துக்குள் கட்டிப்போடவேண்டும் எனப் பல கழகங்கள் கங்கணம் கட்டிக் கொண்டன. ஆனால் வெற்றி பெற்றது கென்ட் (Kent) மட்டும் தான். 2000 ஆண்டு காலப்பகுதிக்காக கென்ட் ஒப்பந்தம் செய்த வெளிநாட்டு வீரன் ராகுல் ராவிட், 26 வயதான கர்நாடக துடுப்பாட்ட வீரன் 29 டெஸ்டில் 2395 ஓட்டங்களையும் 103 ஒருநாள் போட்டிகளில் 3230 ஓட்டங்களையும் பெற்றிருக்கிறார். இவருக்கு கைகொடுக்கும் இங்கிலாந்து திடல்களில் இவரின் ஆட்டத்தை எதிர்பார்க்கும் ரசிகர்களுக்கு ராவிட் காட்டப்போவது எப்படியான துடுப்பாட்டம்?

## படுமோசமான ஆரம்பம் கபில்தேவுக்கு ஏமாற்றம்



நலிந்து மெலிந்து கொண்டிருக்கும் இந்திய கிரிக்கட் அணியைத் தூக்கி நிறுத்துவார் என்ற எதிர்பார்ப்புடன் கபில்தேவ் புதிய பயிற்சியாளராக்கப்பட்டார். வந்ததும் பணிக்கு அணியை அத்திவாரமிடும் நோக்கில் பழையவர்கள் நீக்கப்பட்டு அல்லது பின்தள்ளப்பட்டு புதிய இரத்தம் பாச்சப்பட்டது. மேற்கு வங்காள ஆரம்ப துடுப்பாட்டவீரன் தேவங்கார்தி ஆந்திராவின் விக்கட் காப்பாளர் பிரசாத் கர்நாடகா சகலதுறை வீரன் பரத் வாஜ் அணிக்குக் புகுத்தப்பட முன்னாள் அணித் தலைவர் முகமட் அசாருதீன், விக்கட் காப்பாளர் மொங்கியா கழற்றிவிடப்பட்டனர். கிட்டத்தட்ட சராசரியாக 25 வயது இந்திய அணி 10.10.99 அன்று நியூசிலாந்தை முதலாவது டெஸ்டில் எதிர்கொண்டு மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது 4வீரர்கள் ஓட்டமேனும் பெறாமல் ஆட்டமிழந்தனர். வெறும் 83 ஓட்டங்களுடன் அணியின் மூச்சுப் போய்விட்டது. இம்முடிவானது புதிய பயிற்சியாளர் கபில் தேவ்க்கு மட்டுமன்றி புதிய தேர்வாளர்கள், கட்டுப்பாட்டு சபையினருக்கும் மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கின்றது. 13 வருட சரித்திரத்தில் இந்திய மண்ணில் அணி கட்டிக்காக்கும் டெஸ்தொடர் வெற்றிகளைத் தொடர்ந்தும் பாதுகாக்க முடியுமா? உள்ளூரில் சூரர்கள் என்பதுகூட இனிமேல் இந்திய அணிக்கு ஒத்துவருமா?

நிலைமை இப்படி ஊசலாடிக்கொண்டிருக்கையில் 6 கர்நாடகவீரர்கள் அணியில் இடம்பிடித்திருப்பதையும் பலர் விமர்சிக்கத்தவறவில்லை. இது ஒரு தேசிய அணியா? மாநில அணியா? என்பதுகூட குழப்பமாகிவிட்டது. அதுமட்டுமன்றி ரமேஸ், பிரசாத் குழப்பமாகிவிட்டது. அது மட்டுமன்றி ரமேஸ், பிரசாத் உட்பட மொத்தம் 8 தென்னிந்தியர்கள் 11 பேருக்குள் அடங்கியதும் விமர்சனத்திற்குள்ளாகத் தவறவில்லை.

முன்பைவிட படுமோசமான இந்நிலையிலிருந்து அணியை விடுவிக்கும் புதிய முயற்சிகளை எவ்வாறு கபில்தேவ் கையாளப்போகின்றார் என்பதைப் பொறுத்தே அசாருதீன் மொங்கியாவின் எதிர்காலம் அமையப்போகின்றது. எடுத்த எடுப்பில் புதியவர்களை வைத்து டெஸ்ட்போட்டிகளில் வென்றுவிடலாம் என்பதை வேறு ஒரு கோணத்தில்கூட கபில்தேவ் மாற்றியமைக்கக்கூடும். எதற்கும் மூன்று டெஸ்ட் போட்டிகளும் முடிந்தபின்பு விடயம் தெரிந்துவிடும்.

## எத்துறையிலும் ஆண்களை எதிர்கொள்ள பெண்கள் தயார்

பெண் அடிமைத்தனம் தகர்த்தெறியப்பட்டு ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். பலமான ஒருசில விடயங்கள் பெண்களுக்கு எட்டாமல் போயிருக்கலாம். ஆனால் அதிலும் பெண்களே முன்னணி அடைவார்கள் என்பதை 09.10.99 அமெரிக்காவில் நடைபெற்ற ஆண் - பெண் குத்துச் சண்டைப் போட்டி நிரூபித்துள்ளது.

33 வயதான லோய் ஷா என்பவரை எதிர்கொண்ட 36 வயதுப் பெண்மணி மாக்ரெட் மெக்ரீகர் முதல்முறையாக ஆண்-பெண் பலப்பரீட்சையை ஆரம்பித்தனர்; இவ் ஆண் - பெண் மோதலை பல சமூக மனிதவள அமைப்புகள் வன்மையாகக் குறைகூறியதோடு இப்போட்டியைத் தடை செய்வதற்கும் கடும் முயற்சி செய்தன.

ஈற்றில் சகல எதிர்ப்புக்களையும் மீறி குறிப்பிட்டபடி போட்டி நடைபெற்றது. இதில் மாக்ரெட் வெற்றிபெற்று பெண்களுக்கு மேலும் உற்சாகத்தைத் தூண்டிவிட்டுள்ளார்.

## ஐரோப்பிய கிண்ண மோதலுக்கு முக்கிய நாடுகள் ஆயத்தம்

2000 ஆண்டு கோடைகாலத்தில் பெல்ஜியம், நெதர்லாந்து இணைந்து நடாத்தவுள்ள ஐரோப்பியக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் மோதுவதற்கு 12 நாடுகள் ஆயத்தமாக உள்ளன. போட்டியை நடாத்தும் பெல்ஜியம், நெதர்லாந்து உட்பட தற்போதைய ஐரோப்பிய சம்பியன் ஜேர்மனி உலக சம்பியன் பிரான்ஸ். இத்தாலி, நோர்வே, சுவீடன், ஸ்பெயின், ருமேனியா, யூகோஸ்லாவியா, செக்குடியரசு, போர் துக்கல் தகுதியைப் பெற்றுவிட்டன. 9 குழுக்களாக நடைபெற்ற தெரிவுப்போட்டிகளிலே முதல் இடத்தைப் பெற்ற நாடுகளும் 2-ம் இடங்களில் மிகச் சிறந்த புள்ளியைக்கொண்ட போர்த்துக்கல்லும் விசேட தெரிவுகளான பெல்ஜியம் நெதர்லாந்து ஆகிய ஆயத்த நாடுகளுடன் இரண்டாம் இடத்திலுள்ள மற்றைய 8 நாடுகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்று இன்னும் 4 நாடுகள் சேர்த்துக்கொள்ளப் படும். மொத்தம் 16 நாடுகள் கலந்துகொள்ளும் இவ் ஐரோப்பியபோட்டியானது ஐரோப்பியர்களுக்கு ஒரு மினி உலகக் கிண்ணம் போன்றதாகும். இங்கிலாந்து இப்போட்டியில் கலந்துகொள்ளவேண்டுமானால் 2-ம் நிலை தேசங்களுக்கான போட்டியில் வென்றாக வேண்டும். அவ்வாறு வெற்றி இல்லாவிட்டால் ஐரோப்பிய கிண்ணத்தில் தவறும் முக்கியநாடு என்ற முத்திரையும் குத்தப்படலாம்.

## புதிய சைக்கிள் ஓட்ட உலகசம்பியன்



10.10.99 நடைபெற்று முடிந்த சைக்கிள் ஓட்ட உலகசம்பியன் போட்டியில் ஸ்பானியாவின் ஒஸ்கார் பிறைகொமெஸ் (Oscar Freire Gomez) முதலாம் இடத்தைத் தட்டிச் சென்றார். 260 கிலோ மீற்றர் (161.2 மைல்) தூரத்தை 6 மணி 19 நிமிடம் 29 செக்கனில் கடந்து இப்போட்டியை வெற்றிகொண்டார். 23 வயதான ஒஸ்கார் இவ்வெற்றியைப் பெறும் இரண்டாவது ஸ்பானியர் ஆவர். இதற்குமுன் 1995 இல் அப்றாம் லுலானோ வெற்றிபெற்றார். சென்ற வருடம் 17-வது இடத்தைப்பெற்ற ஒஸ்கார் 1997ம் ஆண்டு 23 வயதுக் குட்பட்டோர் ஓட்டத்தில் இரண்டாவதாக வந்தார்.

சுவிசின் மார்கோஸ் சூலூர்க் 4 செக்கன் பிந்தியதால் இரண்டாம் இடத்தைப் பெற்றார் பிரான்சில் றொபின் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

## பிரான்ஸ் சம்பியன் துடுப்பெடுத்தாட்ட இறுதிப் போட்டிக்கு ஈழத்தமிழர் கழகம் தெரிவு

வருடா வருடம் பிரான்ஸ் துடுப்பொடுத்தாட்ட சம்மேளனம் (Federation de Cricket Francais) நடாத்தும் பிரான்ஸ் சம்பியன் துடுப்பெடுத்தாட்டப் போட்டிக்கு ஈழத்தமிழர் கழகமான நொதேன் (Nothern) விளையாட்டுக்கழகம் தெரிவாகியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்ற இப்போட்டிகளின் அரையிறுதி ஆட்டம் 10.10.99 ஞாயிறு அன்று நீஸ் (Nice) இல் கப்றிஸ் (Cabris) துடுப்பெடுத்தாட்ட அணியுடன் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கப்றிஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 40 பந்து மாற்றங்களில் 216 ஓட்டங்களை எடுத்தார்கள், கெல்கி 65 ஓட்டங்களையும் மாட்டீன்-51 ஓட்டங்களையும், பட்டல் 35 ஓட்டங்களையும் எடுத்தார்கள். அலக்சாண்டர் லின்டன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும், கரன், ரவிக்குமார், மதன் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் வீழ்த்தினார்கள். பதிலுக்காடிய நொதேன் அணி 5 விக்கட் இழப்பிற்கு 31 பந்து மாற்றங்களில் 218 ஓட்டங்களை எடுத்தார்கள். அலெக்ஸ்சாண்டர் லின்டன் 50 ஓட்டங்களையும் அருள்நிதி 40 ஓட்டங்களையும், ரஞ்சித் 20 ஓட்டங்களையும், பாஸ்கரன், ராஜ்குமார் ஆட்டமிழக்காமல் முறையே 38,40 ஓட்டங்களை எடுத்து தமதணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார்கள்.

பிரான்ஸ் சம்பியன் இறுதிப் போட்டி எதிர்வரும் 17.10.99 ஞாயிறு அன்று Chateau Thoiry எனும் இடத்தில் PUC அணியுடன் இறுதிப்போட்டியில் மோத உள்ளார்கள். இந்த ஆண்டுடன் இவ் அணி நான்காவது தடவையாக இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது. ஒரு தடவை பிரான்ஸ் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கி உள்ளார்கள். இந்த முறையும் இக் கிண்ணத்தை தமதாக்கிக்கொள்ள ஈழமுரசு வாழ்துகின்றது.

## புலிக்கு பிறந்தது பூனையாகுமா?

உலக குத்துச்சண்டை ரசிகர்களிடம் தனியான ஒரு இடத்தைப் பதித்துக்கொண்ட முகமது அலி, தற்போது குத்துச்சண்டைப்போட்டிகளில் தோன்றாவிட்டாலும் அவரின் வாரிசு ஒன்று களத்தில் குதித்திருக்கிறது. வாரிசு அதுவும் குத்துச் சண்டைக்கு என்றால் ஆணாகத்தான் இருக்குமென முடிவு செய்துவிடாதீர்கள். அந்த புதிய வாரிசு யாருமல்ல முகமது அலியின் மகள் லைலா அலி தான். 08.10.99 நியூயோர்க் நகரில் நடைபெற்ற நடுத்தர எடையினரக்கான போட்டியில், போட்டி தொடங்கியதுதான் தாமதம் லைலா கொடுத்த அடியில் எதிரியானவள் சுருண்டு விழுந்தது எழும்பவே, இல்லை. இதனால் 31 செக்கன்களில் லைலா வென்றுவிட்டார்.

## அவுஸ்திரேலியாவை நோக்கும் காமன்வெல்த் போட்டி

புதிய நூற்றாண்டின் கன்னி ஒலிம்பிக் போட்டிகளுக்காக மாதங்களை எண்ணிக்கொண்டிருக்கும் அவுஸ்திரேலியா. 2006-இல் நடைபெறப்போகும் காமன் வெல்த் போட்டியையும் நடாத்தும் நிலையையும் பெற்றுவிட்டது. சிட்னிக்கு அடுத்து பெரிய நகரான மெல்பேர்னில் இவ் 2006-இன் காமன் வெல்த் போட்டி நடைபெறவுள்ளது. போட்டியை நடாத்துவதற்கு வெலிங்டனும், மெல்பேர்னும் போட்டி போட்டுக்கொண்டிருக்கையில் வெலிங்டன் தனது விண்ணப்பத்தை விலத்திக் கொண்டதால் மெல்பேர்னுக்கு அதிர்ஷ்டம் வீசியது.

1956-ம் ஆண்டில் ஒலிம்பிக்கை நடாத்தியும் 1992-ம் ஆண்டில் உலக கிரிக்கட் இறுதிப்போட்டியை நடாத்தியும் பெருமையைத் தட்டிய மெல்பேர்னுக்கு காமன் வெல்த் போட்டிகள் மூலம் 72 நாடுகளிலிருந்து 6,000-க்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# புகலிட நிகழ்வுகள்

## பரதநாட்டியம் ஒரு பொதுமொழியா?

புலம்பெயர்வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பரதநாட்டிய அரங்கேற்றங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றன ஜேர்மன் கனோவர் நகரில் நடைபெற்ற செல்வி.பிரவீனா பொன்னுத்துரையின் அரங்கேற்றமும் அந்தவரிசையில் முக்கிய இடத்தைப்பிடிக்கின்றது.



கடும் பயிற்சி, முயற்சி, ஆசிரியையின் கற்பித்தல்திறன் அனைத்தும் ஒன்றிணைந்து முழுமையானதொரு பரதநாட்டிய அரங்கேற்றத்தை செல்வி பிரவீனா பொன்னுத்துரை வழங்கினார்.

கனோவர் 'லங்கன் காகன்' என்ற இடத்தில் 05.09.99 சனியன்று நடைபெற்ற இவ் அரங்கேற்றத்தை அமைதி வணக்கத்தையடுத்து திரு.திருமதி வரதராஜா தம்பதிகள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். தலைமைவகித்து உரையாற்றிய 'மண்' சஞ்சிகையின் ஆசிரியர் திரு வ.சிவராஜா, தமிழரின் தொன்மைக்கலை புலம்பெயர்ந்தாலும் தமிழரின் தாயகத்தை நினைவூட்டும் என்பதற்கு இந்த அரங்கேற்றம் சிறந்த சான்றாகும் எனக்குறிப்பிட்டார்.




நாட்டியசாந்தி செல்வி பவித்ரா செல்வகாந்தன் ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியை. அத்துடன் போட்முண்ட் பவித்திரக்கலாலய நடன ஆசிரியையுமாவார்.

செல்வி பிரவீனா பொன்னுத்துரையின் நடன ஆசிரியை செல்வி பவித்ரா செல்வகாந்தன் அவர்களது ஐந்தாவது மாணவியின் அரங்கேற்றமும் இது. ஜேர்மனியில் திறமைமிக்க நடன ஆசிரியைகளில் செல்வி பவித்ரா செல்வகாந்தனும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

செல்வி பிரவீனா பொன்னுத்துரை அரங்கேற்றம் காணும் புதிய நடனமணியாகத் தென்படவில்லை. பரதநாட்டியத் துறையில் அனுபவம்மிக்கவரை போல் அனாயாசமாக நடனமாடினார். மேடைக்கூச்சம், பயம் ஆகியவை எதுவுமின்றி நடனத்தோடு ஒன்றிப்போனார். நடனத்திற்கு அழகுதரும் புன்னகை அரங்கேற்றம் முடியும்வரை பிரவீனாவை விட்டு விலகவில்லை. என்பதை இங்கு சிறப்பாக கூற முடியும்.

பரதநாட்டியத்தின் முக்கிய உருப்படிகளான புஸ்பாஞ்சலி, அலாரிப்பு, நடராஜகவுத்தம், ஜதீஸ்வரம், வர்ணம், பதம், மயில் நடனம், தில்லானா, குறத்தி என புன்னகைமாறாமல் நடனம் ஆடினார் செல்வி பிரவீனா பொன்னுத்துரை. தாயகநினைவுகளுக்காகவும் நடனம் ஒன்றை வழங்கினார்.

பாடல்களை தமிழீழம் இசைக்குழுவின் இசையமைப்பாளரும் ஜேர்மன் தமிழர் கலைபண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளருமான திரு.கண்ணனும், திருமதி பத்மலோசனி குமாரச்சந்திரனும் பாடினார்கள்.

ஆசிரியை செல்வி பவித்ரா செல்வகாந்தனின் நட்டுவாங்கத்திற்கு மிகவும் இலகுவாக தாளம் பிசகாமல் நடனமாடினார் செல்வி பிரவீனா மிருதங்கம்: சங்கீதரத்தினம் திரு. ச. பிரணவநாதன், வயலின்: திரு. மயில்வாகனம் தேவராஜா, கடம், மோர்சிங்: திரு. அ. சிவரூபன் ஆகியோர் பக்கவாத்தியங்களை வழங்கினர்.

இவ் அரங்கேற்றத்திற்கு சிறப்புவிருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்ட புளோரா வானொலியின் அனைத்துலகப் பிரிவின் ஆசிரியர் குசைன் நகிபூர் உரையாற்றுகையில் 'நடனம் மொழிப்பிரச்சினைக்கு அப்பாற்பட்டதொன்றாகும். எந்த மொழிக்காரரும் நடனத்தை புரிந்துகொள்ளமுடியுமென்பதால் நடனம் ஒரு பொது மொழி என்றும், புளோரா வானொலி 30 மொழிகளை உள்ளடக்கியதென்றும் அதில் தமிழ்மொழியும் ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக உலகத் தமிழர் இயக்கத்தின் பொதுச்சொயலாளர் திரு. இ.சோமஸ்கந்தனும், பிரதம விருந்தினராக ஜேர்மன் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு.கா.சிவநாதனும் கலந்துகொண்டனர்.

*– வீ.ஆர்.வரதராஜா*

## தியாகதீபம் திலீபன் நினைவு நாள் டென்மார்க்-99

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் 25.09.99ல் தியாக தீபம் லெப்டினன் கேணல் திலீபன் அவர்களின் 12-வது ஆண்டு நினைவு நாள் ராண்டஸ் (Randers) நகரில் கொண்டாடப்பட்டது.

மாலை 5 மணியளவில் முன்னாள் மன்னார் பிராந்தியத் தளபதி லெப்டினன் கேணல் விக்ரர் அவர்களின் தந்தையார் சந்தியாப்பிள்ளை குத்துவிளக்கேற்றி வைக்க, நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து கொடி வணக்கப்பாடல் அரங்கை அலங்கரிக்க மக்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தி அமர்ந்தனர். பின்னர் விடுதலைப் போரில் விதையாகிவிட்ட மாவீரர்களுக்கும் மற்றும் மரணித்துவிட்ட மக்களுக்குமாக இரு நிமிட நேர அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து ஈகைச்சுடர் ஏற்றல் நிகழ்ந்தது.

இவற்றைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் கவிதையுடன் தொடர்ந்து சென்றது. இது எங்களின் தேசம் எனும் தலைப்பில் கவிதையை செல்வி தமிழினி கிருஷ்ணன் தந்து செல்ல, திலீபனின் இரண்டாம் நாள் உரையைச் செல்வி தர்சினி சந்திர சேகரம் எமது காதுகளில் ஒப்படைத்துப் போக, தியாக தீபம் திலீபன் எனும் தலைப்பிலான கவிதையைச் செல்வி கிருபாயினி வேலுப்பிள்ளை வழங்கிச்சென்றதுடன், மேடையை அலங்கரிக்க நடனங்கள் தயாராகின. ஆசிரியை சசி



தேவி சத்தியமாலாவின் மாணவிகள் 'கொண்டாடுவோம் வெற்றியைக் கொண்டாடுவோம்' 'நல்லூரில் அருளாட்சி நடக்குது' எனும் பாடலுக்கும் அபிநயம் தந்து சிறப்பித்தனர். தொடர்ந்த வகையில் காயத்திரி மகாலிங்கத்தின் மாணவிகள் பாடும் பறவைகள் வாருங்கள் எனும் பாடலுக்கு அபிநயம் செய்து சிறப்பித்திருந்தனர். இங்கே இடையில் செல்வன் திலக்சன் விஜயகாந்தனால் தமிழீழம் மலர்ந்திடும் எனும் தலைப்பில் கவிதை பிறந்



திருந்தது.

தொடர்ந்து சிறப்புரை வழங்க மேடைக்கு துரைராஜா அருண் அழைக்கப்பட்டார். இவர்களது உரையில் தியாகி திலீபனுடைய ஆரம்ப வாழ்க்கை நிகழ்வுகளை



யும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் திலீபன் இணைந்துகொண்டு செயல்பட்ட விடயங்களையும் விபரித்தார்.

தொடர்ந்து ஆசிரியை சசிதேவி சத்தியமாலாவின் மாணவிகள் 'காற்றினை அழித்திட முடியுமா' எனும் பாடலுக்கு திறம்பட அபிநயம் செய்து சிறப்பிக்க, திலீபனின் கனவு எனும் தலைப்பில் செல்வன் பிரசன்னா நவனீதராஜா பேச்சு வழங்கினார். தமிழில் பழமொழி ஒன்று உண்டு 'ஐந்து விரலும் ஒரே மாதிரியா?' அதேபோல்தான் நாமும் என்று சொல்லியே ஒன்று சேர்தலை தவிர்த்து விடுகின்றோம். அதை விடுத்து ஐந்து விரலும் ஒரே மாதிரி அமையாத இடத்தும் அவை சேர்ந்து செயல்படுவதால் தான் காரியம் நிறைவேறுகிறது. ஆகவே நாமும் சேர்ந்தே செயல்படவேண்டும் எனும் தலைப்பில் பேசிச்சென்றார். இடைவேளையைத் தொடர்ந்து 'நவீன காத்தாள்' மேடையில் மிகவும் சிரத்தை எடுத்து ஒன்பது சிறார்களை பழக்கி எடுத்து மேடையில் தந்திருந்தார். திரு.திரவியம் அவர்களுடைய சிறந்த இந்த முதல் முயற்சி மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்றே சற்று நேரம் கூடியிருந்தமை இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாயினும் சிறார்களை வைத்து இந்த புதிய முயற்சி மென்மேலும் வளரட்டும். இதில் பங்கேற்றிருந்த அனைவரும் சிறப்புடன் செய்திருந்தனர். இதில் ஒரு பாடலை இணைத்திருந்தார்கள் 'நாளை எங்கள் ஈழம் மலரும்....' என்ற பாடலே அது.

தொடர்ந்து காயத்திரி மகாலிங்கத்தினுடைய இரு நடனங்கள் மேடையை அலங்கரிக்க,

மீண்டும் மேடையில் பெரியவர்களின் 'நேற்று என்பதை மற' எனும் தலைப்பில் நாடகம் திரு. யோகராஜா நெறியாழ்கையில் அரங்கேறியது. இந் நாடகத்தில் புகலிடம், கொழும்பு, வன்னி என்ற மூன்று நிலையில் கதை சொல்லப்பட்டிருந்தது.

தொடர்ந்து தமிழீழ இசைக்குழு திலீப கானங்களை இசைக்க முதலாவதாக 'ஊரெழுவில் பூத்தகொடி' எனும் பாடலுடன் தொடங்கி இறுதியாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் எனும் பாடலுடன் மக்களும் இணைந்து கர ஒலி எழுப்பி பாடலை சிறப்பிக்க நிகழ்வுகள் நிறைவு பெற்றன. இந்நிகழ்வுகளைத் தொடுத்து வழங்கியவர் அன்பு மயில் என்பது குறிப்பிடத்தக்கது.

# எழுச்சி நினைவு நாள்

தியாகி திலீபன் அவர்களின் பன்னிரண்டாம் ஆண்டு எழுச்சி நினைவு நாள்.

வீடு வீடாய் வீதி வீதியாய் விடுதலையின் விலாசமுரைத்தவன், ஊரைக் கூட்டிச்சென்று சேர்த்து ஒற்றுமையின் பலத்தைக் காட்டியவன், தான் தேய்ந்து தேய்ந்து தமிழ் மக்களுக்காய் தலைவனின் வேதமுரைத்தவன். பரந்தாமன் விடையளிக்க, பார்த்திபன் பட்டினிப்போர் தொடுக்க மூதாட்டி முத்தமிட்டனுப்பினாள். வெற்றித் திலகமிட்டனுப்பினாள். வெற்றியுடன் விடைபெற்றான். விண்ணில் விடிவெள்ளியாய் மண்ணில் வழிகாட்டியாய் எம்மில் பகையெரிக்கும் பெரும் நெருப்பாய், கண்ணில் ஒளி தந்து நெஞ்சில் குடிகொண்ட எங்கள் காவிய நாயகனின் பன்னிரண்டாம் ஆண்டு எழுச்சி நினைவுநாள் 26.09.99 ஞாயிற்றுக்கிழமை 16.30 மணிக்கு நுவசிலு கிறோன் என்னுமிடத்தில் மிகவும் எழுச்சி மிக்கதாய் நடைபெற்றது.

இவ் எழுச்சி நினைவு நாளில் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டு தியாக தீபம் திலீபன் அவர்களுக்குத் தங்களது வணக்கத்தைச் செலுத்திக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து தியாகி திலீபன் அவர்களின் நினைவு சுமந்து 'எழுச்சி மாலை 99' கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குறிப்பிட்ட நேரத்தில் (16.30 மணி) நேரதாமதமின்றி எழுச்சிமாலை 99 ஆரம்பமானது. தியாகி திலீபன் அவர்களின் திருவுருவப் படத்தின் முன் தமிழ்ப்பெண்கள் அமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகள் மங்கல விளக்கேற்றி வைத்து எழுச்சி மாலையை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட விடுதலைப் போராளிகளுக்கும் உயிர் நீத்த பொதுமக்களுக்கும் அனைவரும் எழுந்து நின்று அமைதி வணக்கம் செலுத்திக்கொண்டனர். மக்களின் எழுச்சியினைக் காணப் புன்னகையோடு திருவுருவப் படமாய் வீற்றிருந்த காவிய நாயகனுக்கு கவிதாஞ்சலியோடு மக்கள் மனமுருகி மலர்தூவி வணக்கம் செலுத்தினார்கள். தங்களுக்காகத் தன்னுயிர் தந்த தனையனை வாழ்த்தி வணங்கினார்கள்.

வரவேற்பு நடனமாகவும், வாழ்த்து நடனமாகவும் 'மலர் தூவ வாருங்கள்' என்ற பாடலோடு நடனமும் சேரத் திரை விலகியது. தமிழர் கலைபண்பாட்டுக் கழக நடனப் பிரிவு மாணவிகளின் நடனத்தைத் தொடர்ந்து, 'கல்லறையில் விளக்கேற்றி', 'சிங்களம் எங்களைக் கொன்று குவிக்கும்' என்ற பாடல்களுக்கு நுவசிலு கிறோன் தமிழ்ச்சோலை மாணவிகள் நடனமாடினர். அதனைத் தொடர்ந்து தமிழ்ச்சோலை ஆசிரியர்களின் கவிதாஞ்சலியும் இடம்பெற்றன.

சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப்பணியக பிரதிநிதி அவர்கள் கூறுகையில், தியாகி திலீபனின் மன உறுதியையும், அவர் கொள்கை மீது கொண்ட உறுதியையும் பற்றிக் கூறினார். இன்றைய எமது நாட்டின் தேவையையும், அதற்காக புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் வசிக்கும் நாங்கள் செய்யவேண்டிய கட்டாய கடமைகளையும் விளக்கிக் கூறினார். திலீபன் அவர்கள் உண்ணாவிரத மேடையில் இருந்த போதும்கூட, 'எல்லாம் உங்கள் கையில்தான் இருக்கிறது, உங்களால்தான் முடியும், நீங்கள்தான் செய்யவேண்டும்' என்று திரும்பத் திரும்பத் கூறினார். மக்கள் சக்தி பெருகவேண்டும், மக்கள் எழுச்சி பொங்கவேண்டும் என்று வலியுறுத்திக்கூறினார். உண்மைதான், மக்களால்தான் முடியும், மக்கள்தான் செய்யவேண்டும், அவர் கனவினை நனவாக்க வேண்டும். அதற்காக நாமும் உழைக்கவேண்டும். இங்குள்ள மக்களாகிய எம்மால் நிதியுதவிதான் செய்யமுடியும். அதை அவர்களுக்குத் தேவையான நேரத்தில் கொடுப்பதன் மூலம் எமது விடுதலையை மிக விரைவாக்கலாம். வழிநடத்தவும், போராடவும் அங்கு தயாராக உள்ளனர். அவர்களுக்கு எமது பங்களிப்பினைப் பெருக்கி எமது விடுதலையை வெல்வதன்மூலம் திலீபன் போன்ற எமது மாவீரரின் கனவுகளை நனவாக்கமுடியுமென்றார்.

அவரைத் தொடர்ந்து தமிழீழத்தில் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் 1999-ம் ஆண்டினை சிறுவர் மேம்பாட்டு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதையும் அதற்காக அங்கும் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் செய்யப்படவேண்டிய திட்டங்களைப் பற்றி தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி எடுத்துக்கூறினார். மேலும் போரினாலும், சிறீலங்கா அரசினாலும், சமூக சச்சரவினாலும் சிறுவர்கள் பெரும்பாதிப்பிற்குள்ளாகி வருவதைக் கருத்தில்கொண்டு அதற்கான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கோடே, இவ் ஆண்டு தலைவர் அவர்களால் சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் கேடயம் என்னும் ஒரு விவரணப்படமும் காண்பிக்கப்பட்டது. கேடயமாய் எம்மைக் காத்த எம் மக்களே வாளாகவும் நீங்கள் மாறுங்கள் என்றதுபோல், தமிழீழத்து மக்கள் வாள்களாக மாறியதை அந்த விவரணப்படம் காட்டியது. தமிழீழத் தேசியத் சேவை என்னும் பணியில் தமிழீழத்து மக்கள் வயதுபால், வேறுபாடின்றி தம்மைக் காத்திட தக்க சமயத்தில் தங்கள் நாட்டினைக் காத்திட தற்காப்புப் பயிற்சி எடுக்கின்றனர். தள்ளாடும் வயதினிலும் தாங்கள் விட்ட பிழைகளை உணர்ந்து தாயகத்தைக் காத்திடத் தளராது உழைக்கும் முதியவர்களின் முகங்களைப் பார்க்கும்போது தாயக விடியல் வெகு தூரமில்லை என்பது தெரிகின்றது.

முப்பதாயிரம் மக்களுக்கு மேல் முதல் சுற்றாக இப் பயிற்சியினை மேற்கொள்வதும், ஒரு திருவிழாக் கோலம்போல் கொண்டாடுவதும், உண்மையில் தியாகி திலீபன் அவர்களின், 'மக்கள் எழுச்சி கொள்ளவேண்டும், மக்கள் எழுச்சி கொள்ளவேண்டும்' என்ற ஏக்கமும் கனவும் ஈடேறிக்கொண்டிருப்பது தெரிகின்றது. அதனைத் தொடர்ந்து 'பொய் முகம்' என்னும் தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தின் நாடகப் பட்டடையில் இருந்து பிறந்த ஓர் உணர்வுள்ள உருக்கமான நாடகம் ஒன்று அரங்கேறியது. எங்களில் எத்தனை பேர்கள் பொய் முகங்களோடு வாழ்கின்றோம் என்பதை எங்களை நாங்கள் கேள்வி கேட்பதன் மூலமே சுலபமாகப் புரிந்து கொள்ளலாம், திருத்திக்கொள்ளலாம். புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது சிறார்களின் அவல நிலையை அது எடுத்துக் காட்டியது. பிள்ளைகள் கெடுவது பெற்றோர்களினாலும்தான். தவறான வழிநடத்தலில் வளரும் பிள்ளை தவறாகவே வளரும். எமது நாடு பற்றிய விளக்கங்கள் எங்களது மொழி, எங்களது பண்பாடு, எங்களது பழக்கவழக்கங்கள் என்பன சிறுவயதிலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். அவ்வாறு தெரியாமல் பிள்ளைகளை வளர்ப்பது எவ்வளவு தவறு என்பதையும் நாம் அவர்களுக்கு இளைக்கும் தவறுகளையும் சுமத்தும் சுமைகளையும் பழிகளையும் பொய்முகம் கிழித்துக் காட்டுகிறது. நாட்டுப் பற்று இலட்சியத்திற்காக உயிர் கொடுத்த மாவீரர்களின் வீட்டுப்பற்று இவைகளை எம் எதிர்காலச் சந்ததியினர் அறியப்படுகின்ற அவா போன்றவற்றைப் பார்க்கும்போது பலரது பொய் முகங்கள் மாற்றமடையும் என்பதில் மகிழ்ச்சி.

இதனையடுத்து தமிழீழ இசைக்குழுவின் எழுச்சிகானங்கள் இடம்பெற்றன. தமிழீழ எழுச்சிப் பாடல்களை இசையுடன் நன்றாகப் பாடினார்கள். இறுதியாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற நம்பிக்கையான பாடலை எல்லோருமாகப் பாடி தியாகி திலீபனின் பன்னிரண்டாம் நினைவாண்டில் அவரின் கனவினை நனவாக்க நாமும் உழைப்போம் என உறுதிகூறவும் எழுச்சிமாலை 99 நிறைவுகண்டது.

– சுபா.கு

# பேர்லின் தமிழாலய மாணவியின் பரதநாட்டியம்

பெர்லினைச் சேர்ந்த செல்வி அர்ஜலினா மனோகரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் 27.08.99 அன்று பெர்லின் MUSEUM DAHJLMMDORF மண்டபத்தில்




நடைபெற்றது. இவர் 'கானப்பிரியா நர்த்தனாலய' ஆசிரியை திருமதி மேனகா சுரேசகுமாரின் மாணவியாவார்.

பெர்லின் தமிழாலய மாணவியான இவர் ஜேர்மனியில் நடைபெற்ற விடுதலை அமைப்பு எழுச்சிக் கலைநிகழ்ச்சிகளில் நடனமாடி வருபவர். செல்வி அர்ஜலினா மனோகரனின் அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக வானதி வாணி நர்த்தனாலய அதிபர் திருமதி வானதிதேசிங்குராஜா கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டியக்கலா மன்ற அதிபர் திருமதி சாவித்திரி இம்மானுவேல் கலந்துகொண்டார். ஜேர்மனியின் பிரபலமிக்க இரண்டு நடன ஆசிரியைகள் கலந்துகொண்டது ஒரு முன்மாதிரி என்றுதான் குறிப்பிடவேண்டும்.

பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கு நடன ஆசிரியர்களே பிரதம சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வது மிகப்பொருத்தமானது. ஆடற்கலையில் நுண்ணிய உணர்வலைகளை குறிப்பிட்டுக் கூறக்கூடிய திறமை அவர்களிடம் உண்டு.

செல்வி. அர்ஜலினா தனது அரங்கேற்றத்தின்போது நடன அஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், நவரசம், வர்ணம், கீர்த்தனம், பதம், தில்லானா, குறத்தி என ஒன்பது நடன உருப்படிகளை வழங்கி சபையோரின் பாராட்டைப் பெற்றார்.

இவ் அரங்கேற்றத்திற்கு பாரிஸில் வெளியான 'முகம்' திரைப்பட தயாரிப்பாளர், திரு. சிதம்பரம்பிள்ளை நவரட்ணம் தலைமைதாங்கினார். அரங்கேற்றம் கண்ட செல்வி அர்ஜலினா மனோகரன் லண்டன் ORIENTAL FINE ARTS ACADEMY நடாத்திய நடனப்பரீட்சையில் மூன்றாம் தரத்தில் திறமைச் சித்திபெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


பிரெஞ்சுப் புகலிட மண்ணில்
வளரும் நம் சிறார்களின்
வெளிப்பாடுகளால் கோர்க்கப்பட்ட
தமிழ்ச்சோலை மாலை




17.10.1999
15.00 மணி – 19.30 மணி
Salle Jeanne d'Arc
50, Rue de Torcy,75018 Paris.
Metro: Marx Dormoy
தொடர்பு:
தமிழ்ச்சோலைப் பள்ளிகள் சார்பாக
தலைமைப்பணியகம்
22, Rue Perdonnet,
75010 Paris, France.
அனுமதி இலவசம்
அதிர்ஷ்டக் குலுக்கல்: 18.00 மணி
தொலைபேசி இலக்கம்: 01 40 37 68 68

## தேசத்தின் தென்றல்

கலைத்துறையிலே வெள்ளி விழாக் காணும் கோவிலூர் செல்வராஜனின் இவ்வாண்டுக்குரிய படைப்பான 'தேசத்தின் தென்றல் (தாயக உணர்வுப் பாடல்கள்) இசைத்தட்டை, ஜேர்மனி நொய்ஸ் நகரத்தில் கடந்த 02.10.99 அன்று முத்தமிழ் கலை மன்றத்தினர் வெளியிட்டு அவரை கௌரவித்தார்கள். பாரிஸ் நகரில் 10.10.99 அன்று பாரிஸ் நலன்புரிக் கழகத்தினரின் ஆதரவில் தேசத்தின் தென்றல் வெளியீட்டுவிழா நடைபெற்றது. பாரிசிலும் வெள்ளிவிழாக் கண்ட கலைஞர் கௌரவிக்கப்பட்டார். எதிர்வரும் 16.10.99 அன்று ஒஸ்லோவில் 'நோர்வே தமிழ் மக்கள்' இணைவு கூடமும், 'தமிழ் நாதம்' வானொலிச்சேவையும் இணைந்து கலைஞர் கோவிலூர் செல்வராஜனை கௌரவிப்பதோடு, இசைத்தட்டையும் வெளியிடுகின்றார்கள். தேசத்தின் தென்றல் இசைத்தட்டு வெளியீட்டு விழாக்கள் கனடா, இலண்டன், டென்மார்க், சுவிஸ் போன்ற நாடுகளிலும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் நடைபெற இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.





# அல்ஃபா ரெலிகொம்
# மற்றும் லூசியம்
# தங்கமாளிகை
# ஆதரவில்
# IBC தமிழ் வழங்கும்

# மெல்லினிய

# MILLENNIUM CONCERT மாலை

## ஹரிகரன் - சித்ரா - சுஜாதா
## ரோஜா - குஷ்பு - அப்பாஸ்

**டான்ஸ் மாஸ்டர் கலாவின் தலைமையின் கீழ் பத்து நடனமாந்தர், மொத்தம் 40 பேரடங்கிய குழு சென்னையிலிருந்து வருகிறது.**

## *30 October 1999*
## *6.00 P.M.*

## ALEXANDRA PALACE - LONDON

**Ticket hot line and information 0171 463 2090**
**Ticket Centres : KRS Enterprises Wembley-0181 902 4590**
**Venkadeswara Tooting-0181 767 6495,**
**Welcome Centre, Eastham-0181 552 2727**

# பௌத்த பிக்குகளின் ஏற்பாட்டில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(10.10.99)

கொழும்பு ஆனந்தா, நாலந்தா கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆனந்தா கல்லூரிக்கு முன்பாக வியாழன் காலை 8.30 மணி தொடக்கம் 10.45 மணி வரை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 3000ற்கு மேற்பட்ட மாணவர்களும் பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குகளும் கலந்து கொண்டனர். கொழும்பு ஆனந்தா கல்லூரியில் முஸ்லிம் மாணவர்களுக்கு இருபது வீதம் இட ஒருக்கீடு வழங்கப்பட வேண்டும் என அண்மையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஸ்ரப் அமைச்சரவையில் கோரிக்கையை முன்வைத்திருந்தார். அதனையடுத்தே இவ் ஆர்ப்பாட்டம் சிங்கள மாணவர்கள் மத்தியல் இன உணர்வை தூண்டுவதற்காக பௌத்த பிக்குகளால் ஏற்பாடு செய்யப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ் ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள் தமிழ், முஸ்லீம் மாணவர்களுக்கு எதிராக எதிர்ப்புக் கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னின்று நடத்தியுள்ளனர்.

## தமிழகத்தில் 3வது அணி தோல்வி

(11.10.99)

தமிழகத்தில் காமராஜர் ஆட்சியை மீண்டும் கொண்டுவருவோம் என முழக்கமிட்டு புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்த மூப்பனாரின் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்ததன் மூலம் தமிழகத்தில் 3வது அணி தோல்வி அடைந்துள்ளது.

போட்டியிட்ட இடங்களில் ஒன்றுதானும் இவர்களுக்கு கிடைக்கவில்லை. தலித் மக்களின் ஆதரவுடன் சில ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என இந்த அணி நினைத்திருந்தபோதும் முன்னாள் நிதியமைச்சர் பசிதம்பரம் உட்பட அனைவருமே தோல்வியடைந்துள்ளனர். இக் கூட்டணியின் தோல்வி பற்றி கருத்து தெரிவித்த ஆய்வாளர்கள் தமிழகத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் ஏறக்குறைய துடைத்தெறியப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## வன்னி.......

வாழ்ந்த காலம் மாறி இன்று நாம் போர்க்களத்தில் ஆண்களுக்கு சமமாக நின்று சமர் புரியும் அளவுக்கு முன்னேறி உள்ளோம், அந்நியரின் அடக்குமுறைக்குள் மாத்திரமின்றி சாத்திர சம்பிரதாயங்கள், சீதனம் என்றெல்லாம் அஞ்சி ஒடுங்கிய காலம் மாறி பெண்கள் புதிய சரித்திரம் படைக்கத்தொடங்கி விட்டனர். பெண்களின் தொகை அதிகம் அவர்களின் தீர, வீர தியாகம் கண்டு பெண்கள் எழுச்சி தினத்தை எமது தலைவர் பிரகடனப்படுத்தி கௌரவப்படுத்தி வருகின்றார் என தெரிவித்தார். இந் நிகழ்வில் மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

# வவுனியா பேருந்து நிலையத்தில் குண்டுவெடிப்பு - 11 பேர் காயம்

(11.10.99)

வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை ஏழு மணியளவில் குண்டொன்று வெடித்துள்ளது. இக் குண்டுவெடிப்பினால் அங்கு நின்ற 11 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். மாலை ஏழு மணியளவில் பேருந்து நிலையத்திற்கு அருகில் இருந்த கடையொன்றின் வாசலிலேயே இக் குண்டு வெடித்துள்ளது. இதனால் கடையினுள் நின்ற இருவர் காயமடைந்தனர். இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றதை அடுத்து நகரம் பெரும் பரபரப்புக்கு உள்ளானது. உடனடியாக அப் பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இக்குண்டு வெடிப்பில் காயமடைந்த பொதுமக்கள் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## இலட்சக்.......

மர் ஆகியோருக்கு கருணை மனுக்களை அனுப்பி வைப்பதுடன் அதன் பிரதிகளை ஐ.நா மனித உரிமை பணியகத்திற்கும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**முகவரி விபரங்கள்:**

President K.R.NARAYANAN
Office of the President
Rashtrapati Bhavan
NEW DELHI 110 001
INDIA

Prime Minister ATAL BEHARI VAJPAYEE
South block gate No-6
NEW DLHI 110 001
INDIA
Fax - 0091 11 30 19 817

Ms Mary ROBINSON
Office of the United Nations high Commissioner for Human Rights
Palai des Nations
8-14 Avenue de la paix
CH 1211 GENEVA 10
SWITZERLAND
Fax - 00 41 22 91 70 213

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## விடுதலைப்.......

பில் விடுதலைப் புலிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் விடுதலைப்புலிகள் அமைப்பில் 10,000 பேர் இருப்பதாகவும், அதில் 6,000 பேர் வரை போரிடும் பயிற்சி எடுத்தவர்கள் எனவும் கணிசமான அளவு நாட்டுக்கு வெளியிலான ஆதரவினையும் பண உதவியினையும் பெற்றுக்கொள்ளும் இவ் அமைப்பு வெளிநாடுகளிலும் பிரச்சாரங்களை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளது. இவ் அறிக்கையில் விடுதலைப்புலிகளின் தலைவர் யாழ்ப்பாணத்தில் தலைமை அலுவலகம் அமைத்து தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளது.


SUN AND COIFFEUR

16, Rue Perdonnet,
75010 Paris.
Métro: La Chapelle *or* Gare du Nord

சிகையலங்காரத்தில் 10 வருட அனுபவமும் நிபுணத்துவமும் மக்களின் பாராட்டையும் பெற்ற சந்திரனின் கை வண்ணத்துடன், மக்களின் நலன் கருதி அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 01.10.99 அன்று *'Sun and coiffeur'* இல் தனது சேவையை குதூகலமாக ஆரம்பித்துள்ளார் என்பதை நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
சந்திரன்

Pub






தமிழர் தொலைபேசி நிலையம்

இலங்கை-50 / இந்தியா-50
1 Card - 90Frs
சனி, ஞாயிறு, திங்கள் தினங்களில் ஒரு அட்டை வாங்கும்போது அன்பளிப்பையும் கேட்டு வாங்குங்கள், கைத்தொலைபேசிகள் திருத்திக் கொடுக்கப்படும்
புதிய படப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

itineris SFR Bouygues Telecom

ALLO BOX
59, Rue d'Avron,
75020 Paris
Tel: 01 43 73 76 83 - Fax: 01 43 73 96 31
M°: Maraîchers / Buzenval
Bus: 26
Pub. Fra

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# இலட்சக் கணக்கான தமிழர்களின் உணர்வுடன் நான்குபேரின் உயிரைக் காப்பாற்றுவோம்

## - நெடுமாறன் -

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்குபேரினதும் மறு ஆய்வு மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்தாலும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உணர்வுடன் இந்த நான்கு தமிழர்களினதும் உயிரைக் காக்க தமிழர் காப்புக்குழு தொடர்ந்து போராடுமென தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கின்றார். தற்போதைய் நிலையில் இந் நால்வரினதும் தூக்குத் தண்டனையை. கருணை அடிப்படையில் இரத்துச் செய்யுமாறு கூறும் மனுக்கள் உலகத் தமிழர்களிடமிருந்து இந்திய ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களும் அவர்களின் அமைப்புக்களும் இக் கருணை மனுக்களை அனுப்பி வைத்து வருகின்றனர். உச்ச நீதி மன்றம் மறு ஆய்வு மனுக்களைத் தள்ளுபடி செய்தமை குறித்து கருத்துத் தெரிவித்த பழ. நெடுமாறன் அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் இந் நடவடிக்கையானது பெரும் துக்கத்தைத் தருகின்றது. எனினும் நான்கு தமிழர்களின் உயிரைக் காக்க தமிழர் காப்புக்குழு தொடர்ந்து போராடும். இவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைத்திடக்கோரி ஜனாதிபதியிடம் கருணை மனுக் கொடுக்கவுள்ளோம். பேராசிரியர்கள் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பெருமக்களிடம் தமிழ் நாடு மட்டுமன்றி இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கருணை மனுவில் கையெழுத்துக்களைப் பெற்று அளிக்கவுள்ளோம். எதை வைத்துச் தடாச்சட்டம் பொருந்தாது என உச்ச நீதிமன்றம் சொன்னதோ, அதே தடாச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் நான்கு பேரின் மரண தண்டனையை உறுதிப்படுத்தியுள்ளது என்பது வேதனை அளிக்கிறது. இது சரியல்ல என்பதே எனது கருத்தாகும். எனினும் நான்கு தமிழர்களின் உயிரைக் காப்பாற்றிட அனைத்து விதமான முயற்சிகளை நாங்கள் இங்கே தொடங்கிவிட்டோம். என நெடுமாறன் கூறினார்.

புகலிடத் தமிழர்களும் இந்திய ஜனாதிபதி, இந்தியப் பிரத

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# வன்னி - மட்டு பகுதிகளில் தமிழீழ பெண்கள் எழுச்சி தினம்

(11.10.99)

வன்னி மற்றும் மட்டக்களப்பில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் எங்கும் தமிழீழப் பெண்கள் தினம் எழுச்சிகரமாக கொண்டாப்பட்டது. 2ம் லெப். மாலதி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தினமான நேற்று வன்னியில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பிளாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் எழுச்சிநிகழ்வுகள் நடைபெற்றன.

கரடியனாறு, போரதீவு, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் இருந்து கடுக்காமுனைக்குச் சென்ற பொதுமக்கள் அங்கிருந்து அம்பிழாந்துறை வரையும் ஊர்வலமாகச் சென்றனர். இந்த எழுச்சி ஊர்வலத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

மாலை 5.40 மணியளவில் ஊர்வலம் அம்பிலாந்துறையை வந்தடைந்ததை தொடர்ந்து ஈகைச்சுடர்களை ஏற்றிவைக்கப்பட்டது. அதன் பின்னர் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் பானு உரையாற்றுகையில் பெண்கள் அடக்குமுறைக்குள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# அம்பாறையில் 50 தமிழர்கள் கைது

(11.10.99)

அம்பாறை, அக்கரைப்பற்றில் நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 50 தமிழ் மக்கள் சிறீலங்கா பொலிசாரினால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இம் மக்கள் அரிசி ஆலைகளில் கூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சிறீலங்கா கடற்படையினரால் மூதூரில் வைத்து கடந்த சனிக்கிழமை மூன்று மீனவர்கள் கைது செய்ப்பட்டுள்ளனர் இவர்கள் பற்றிய விபரங்களும் இன்னும் தெரியவரவில்லை என இவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். மூதூரிலிருந்து சுமார் 500 யார் துாரத்தில், இறால்குழி கிராமத்திற்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை, அங்கு அதிவேக படகுகளில் வந்த சிறீலங்கா கடற்படையினர் சுற்றி வளைத்துச் சோதனைக்கு உட்படுத்தினர். சோதனை முடிவில் மூன்று தமிழ் மீனவர்களை கடற்படையினர் கைது செய்து தங்கள் படகுகளில் ஏற்றிச் சென்றதைச் சக மீனவர்கள் கண்டுள்ளனர்.

# சிறீலங்காவில் தங்க தமிழர்களுக்கு 40 நாள் மட்டுமே அனுமதி

(10.10.99)

தமிழீழப் பகுதிகளில் இருந்து தென் பகுதியான கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளுக்கு செல்லும் தமிழ் மக்கள் குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே அங்கு தங்கியிருக்க முடியும் என சிறீலங்கா படையினர் புதிய அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர். கொழும்பில் விடுதலைப் புலிகள் அதிகளவில் ஊடுருவல் மேற்கொள்வதையும் கரும்புலிகளும் முக்கிய இலக்குகளை குறிவைத்து நீண்டகாலம் கொழும்பில் தங்கியிருப்பதையும் தடுப்பதற்காகவே இத் திட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் இவ் அறிவித்தலின் படி யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா போன்ற இடங்களிலிருந்து தென்பகுதிக்கு வருகை தருபவர்கள் 15 நாட்கள், அல்லது 30 நாட்கள், அல்லது தகுந்த காரணங்களின் அடிப்படையில் ஆகக் கூடுதலாக 40 நாட்கள் மட்டுமே தங்கியிருப்பதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளில் 10,000 பேர் உள்ளனர்

## - அமெரிக்க இராஜாங்க திணைக்களம்

(11.10.99)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்தவார இறுதியில் உலகலாவிய ரீதியில் 28 அமைப்புக்களை பயங்கரவாத பட்டியலில் மீண்டும் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பாக இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட ஆவணத்தொகுப்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, Hao 2 Dj,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சத்தீஸ்
Pub



★ Leela அரிசிமா - 89P ல் இருந்து
★ Kingfish- 2.59 ல் இருந்து
★ நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★ 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★ CD 2.99 இல் இருந்து
★ Audio 99 இல் இருந்து
★ நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★ ஞானம்காட் 10% விலைக் கழிவில்
£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால்
1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும்
மலிவு விலையில்!!